# குர்ஆனின் குரல்

رجب - شعبان ١٤٤٤

பிப்ரவரி – 2023

₹25/-



999®

LUNGIES

இது வெறும் நம்பரல்ல,

**நம்பிக்கை!**

100 ஆண்டுகள் பாரம்பரியம் உறவு

Customer Care: 89399 97475

Shop Online @ www.999lungies.com

அனைத்து முன்னணி கடைகளிலும் கிடைக்கும்

மாதம்
ஒரு மாமறை வசனம்

# என்னை நினைத்தால் உன்னை நினைப்பேன்

فَاذْكُرُونِي أَذْكُرْكُمْ وَاشْكُرُوا لِي وَلَا تَكْفُرُونِ ﴿١٥٢﴾

"ஆகவே, என்னை நீங்கள் நினைவு கூருங்கள்; உங்களை நான் நினைவு கூருகிறேன்; இன்னும் எனக்கு (வழிபடுதல் கொண்டு) நன்றி செலுத்துங்கள்; (அவ்வாறு நன்றி செலுத்தாமல்) எனக்கு மாறு செய்யாதீர்கள்." – அல்குர்ஆன் (2 : 152)

---

அடியார்களே என்னை நீங்கள் நினைவுகூர்ந்தால் உங்களை நான் நினைவுகூர்வேன். என்னை மறந்து வாழ்பவர்களை நான் பொருட்படுத்தமாட்டேன் என்கிறான் அல்லாஹ். படைத்த இறைவனின் நினைவு எந்நேரமும் நமது உள்ளத்தில் இருக்க வேண்டும். அதன் வெளிப்பாடு என்பது நாவில் துதி வெளியேறும்; உள்ளத்தில் இறை நினைவு இல்லாது இருப்பினும், நாம் சந்தோஷப்பட வேண்டும்! நம் உடலின் ஓர் உறுப்பு அல்லாஹ்விற்கு பணிந்திருக்கிறது! காலம் செல்லச் செல்ல உள்ளமும் ஒன்று சேர்ந்து கொள்ளும்.

அபூ உஸ்மான் நஹ்தி (ரஹ்) கூறுகிறார்கள் : "எப்பொழுது என் இறைவன் என்னை நினைக்கிறான் என்பதை என்னால் உணர முடியும்" என்றார்கள். "எப்படி?" என கேட்கப்பட்டது. கூறினார்கள் : எப்பொழுது இறைவனை துதிப்பாடும் பாக்கியத்தை நான் பெறுகிறேனோ அதே நேரத்தில் என் இறைவன் என்னை நினைக்கிறான் என தெரிந்து கொள்வேன் என்றார்கள்.

யார் என்னை தனிமையில் நினைப்பாரோ அவரை நானும் தனிமையில் நினைப்பேன். யார் என்னை பல பேர் மத்தியில் நினைப்பாரோ நானும் சிறப்புமிக்க மலக்குகளுக்கு மத்தியில் நினைப்பேன். எவர் சந்தோஷ நிலையிலும் என்னை நினைப்பாரோ அவரை அவரின் கஷ்ட காலத்தில் நினைவுகூர்வேன் என்று அல்லாஹ் கூறுகிறான். நினைவுகூர்தல் என்பது அவனின்

கட்டளைகளுக்கு வழிப்படுவதாகும். ஹராம், ஹலாலை பேணி வாழ்வதாகும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"அல்லாஹ்வின் நினைவில் உள்ளவன் உலகின் சகல வஸ்துகளையும் மறந்து விடுகிறான். ஆனால் அவனது அனைத்து தேவைகளையும் அல்லாஹ் நிறைவேற்றி விடுகிறான்" என்றார்கள் துன்னூனில் மிஸ்ரி (ரஹ்) அவர்கள்.

உடல் முழுக்க புண்கள் ஏற்பட்டு சோதிக்கப்பட்ட நபி அய்யூப் (அலை) அவர்கள் "யா அல்லாஹ் அனைத்து உறுப்புகளும் பாதிக்கப்பட்டு விட்டது நாவு மட்டுமே உன்னை துதிப்பாடிக் கொண்டிருக்கிறது. அதை அழித்து விடாதே ரப்பே!" எனப் பிரார்த்தித்தார்கள். அதன் மூலமாக முழுமையான நிவாரணத்தை அல்லாஹ் வழங்கினான்.

எல்லா நிலைகளிலும் ரப்பை மறந்திடாத நிலையை வல்ல ரஹ்மான் வழங்கிடுவானாக!

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி**


தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்- குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call- Whatsapp 86952 16016

CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள் தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds BOOKS

www.cityadsbooks.com

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...


# குர்ஆனின் குரல்

குரல் : 66 ☆ எதிரொலி – 2

ரஜப், ஷஅபான் –1444 பிப்ரவரி – 2023


## வரலாறு முக்கியம்!

சங்கிகளின் நீண்ட கால திட்டப்படி பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டு, இராமர் கோவில் கட்டப்பட்டு விட்டது. கஷ்மீரின் சிறப்புத் தகுதிகள் நீக்கப்பட்டு விட்டன. முத்தலாக் தடைச் சட்டம் கொண்டு வந்து, ஷரீஅத்திலும் கை வைத்தாகிவிட்டது. மேலும், பொது சிவில் சட்டத்தை இந்தியாவில் செயல்படுத்த சங்கிகள் துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் –

இந்த நாட்டிற்கு எந்தத் தியாகமும் செய்யாத சங்கிகள், இந்த நாட்டிற்கு நாங்கள் தான் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தோம். முஸ்லிம்களுக்கும், சுதந்திரப் போராட்டத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று வரலாற்றை தவறாக எழுதி வருகிறார்கள். ஆனால், உண்மையில் சங்கிகளோ இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளாததோடு, வெள்ளையனுக்குக் கால்பிடித்து வாழ்ந்து வந்தவர்கள். முஸ்லிம்கள் தங்கள் உயிர், பொருள், உடைமை அனைத்தையும் இந்திய சுதந்திரத்திற்காக தியாகம் செய்தவர்கள் என்பதை வரலாறு உரத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

தங்களுக்கு என எந்தவித வரலாறும் இல்லாதவர்கள் தான் இந்த சங்கிகள்! உண்மையான வரலாற்றை மறைப்பதன் மூலம் வரலாற்றை திரிப்பதன் மூலம் தங்களுக்கு என ஒரு வரலாற்றை உருவாக்க துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று ஒன்றிய அரசை ஆளும் சங்கிகளாகட்டும்; அதற்கு பின்புலமாய் திகழும் சங்கிகளின் அமைப்புகளாகட்டும்; அவர்களுக்கு என ஏதாவது வரலாறு இருக்கிறதா? என்றால் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்த வரலாற்றைத் தவிர அவர்களுக்கென எந்த வரலாறும் கிடையாது. எனவே முஸ்லிம்களை வசைப்பாடி உண்மை வரலாற்றைத் திரித்து தங்களுக்கான வரலாற்றை எழுதிக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் சங்கிகள்! இப்படிப்பட்ட நிலையில் சமுதாயத்தின் வரலாற்றை உயர்த்திப் பிடித்து அடுத்த தலைமுறையின் கையில் ஒப்படைக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

வரலாறு முக்கியம்! ஆம்! உண்மை வரலாறு மிக முக்கியம்!

# பாவம் செய்தவர்களுக்கு

# ஓர் அரிய வழி!

كُلُّ بَنِيْ اٰدَمَ خَطَّاءٌ خَيْرُ الْخَطَّائِيْنَ التَّوَّابُوْنَ

“ஆதமுடைய மக்கள் அனைவரும் அதிகம் தவறிழைப்பவர்களே! தவறிழைப்பவர்களில் சிறந்தவர்கள் பாவமன்னிப்புத் தேடுபவர்கள் ஆவார்கள்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்

(நூல் : திர்மிதீ)


மார்க்க விஷயங்களை மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறி சமுதாய நேர்வழிக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கும்

**குர்ஆனின் குரலை அல்லாஹ்**

என்றென்றும் நிலைபெறச் செய்வானாக!

# செய்யது சகோதரர்கள்

## நாகூர்

ஒருவர் உளுச் செய்யும் போது பைப்பைத் திறந்து விட்டு, அதற்கு நேராக கையை நீட்டு கிறார். அது முழுமையாக நனைந்து விடுகிறது. அதைப்போல காலை நீட்டுகிறார். அதுவும் முழுமையாக நனைந்து விடுகிறது. எதையும் தேய்த்தோ அல்லது கோதியோ கழுவவில்லை. அப்படி ஒவ் வொரு உறுப்பையும் தேய்த்துத் தான் கழுவ வேண்டும் என்று ஏதோ ஒரு கிதாபில் படித்திருக் கிறேன். ஆனால், இவர் அப்படிச் செய்யவில்லை என்பதால் அவரது உளு கூடுமா?

**பெரிய வடகரையிலிருந்து**
**ஹெச்.ஹாஜா முஹம்மது**

உளுவின்போது கழுவ வேண்டிய உறுப்புகள் முழுமை யாக ஒரு முடியளவுகூட விடுபடா மல் நனைந்து விட்டால் அந்த உளு பரிபூரணமாகிவிடும். நிறை வேறிவிடும். தேய்த்துத்தான் கழுவ வேண்டும் என்பது ஃபர்ளு அல்லது வாஜிபு அல்ல. தேய்த்துக் கழுவ வேண்டும் என்பது ஒரு சுன்னத்தான செயலாகும். அதற்கென்று நிரப்பமான நன்மைகள் உண்டு.

எனினும், பொடுபோக்குத்தன மாக கவனமில்லாமல் உளுச் செய்வதால் சில நேரங்களில் ஏதாவது ஒரு சிறிய அளவு நனையாமல் இருந்து விட்டாலும் அந்த உளு நிறைவேறாமல் போய் விடும். அதன் தொடர்ச்சியாக தொழுகக் கூடிய தொழுகை களும் பயனற்றுப் போய் விடும். எனவே, தேய்த்து கழுவுவதும், கோதிக்கழுவுவதும் அவசியமில்லை யென்றாலும், அந்த உளுவில் கவனமும், பேணுதலும் இருப்பது மிக மிக அவசியமாகும்.

யோகா பயிற்சியின் மூலமாக நான் நிறைய உடல் ரீதியான குணங்களைப் பெற்று வரு கிறேன். எனினும், சிலர் அந்தப் பயிற்சியைக் கூடாது என்றும், ஷரீஅத்திற்கு முரணானது என் றும் கூறுகிறார்களே. மார்க்கம் என்ன சொல்கிறது?

**தாராபுரத்திலிருந்து**
**கே.பாபுஜான்**

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

✍ உடற்பயிற்சி என்பதே அந்த யோகாவின் பிரதானமான நோக்கமாக இருப்பதனால் அதன் மூலமாக பயிற்சிகள் செய்து, உடலுக்குத் தேவையான சுறுசுறுப்பையும், தெம்பையும் பெற்றுக் கொள்வது ஆகுமானதாகும். எனினும், எங்காவது ஒரு நிலையில் சொல்லின் மூலமாகவோ அல்லது செயலின் மூலமாகவோ ஷரீஅத்திற்கு முரணான ஸஜ்தா செய்தல், அல்லாஹ்வின் ஒற்றைத் தன்மைக்கு எதிரான வார்த்தைகளை உபயோகித்தல் போன்ற நிலை ஏற்படுமானால், அந்தச் செயல்பாடுகளை தவிர்த்துக் கொள்வது அவசியமானதும், கண்டிப்பானதுமாகும். பொதுவாக, உலகச் செயல்பாடுகள் அனைத்துமே மிக மிக கவனமாக இருக்க வேண்டிய சூழ்நிலையில் தான், அல்லாஹ் நம்மை முஸ்லிம்களாக வாழ வைத்துக் கொண்டிருக்கிறான். ஷைத்தான் நமக்குத் தெரியாமலேயே சில விஷமத்தனமான விஷயங்களை நமக்குள் புகுத்தி விடுவான். எனவே, எந்தச் செயல்பாட்டிலும் அசட்டுத்தனமும், கவனமின்மையும் இருப்பது கூடாது. மாறாக, நம்முடைய ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் உலகத்துடைய ஒவ்வொரு செயல்பாட்டிலும் ரொம்ப ரொம்ப கவனமாக இருக்க வேண்டும் என்பது நம் பெரியார்கள் நமக்கு கற்றுக் கொடுத்த பெரிய பாடமாகும்.

☛ பஜ்ர் மற்றும் அஸர் தொழுகைகளின்போது தொழுகைகளுக்குப் பின்னால் சில பள்ளிவாசல்களில் வழமையாக, திக்ருகள் ஓதப்படுகின்றன. அதில் கலந்து கொள்வது கட்டாயமாகுமா?

**பூனாவிலிருந்து மஜீத்**

✍ பொதுவாக, ஒரு இமாம் தொழ வைக்கும்போது அவரைப் பின்பற்றித் தொழுபவர், ஸலாம் கொடுக்கும்வரை அந்த இமாமின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் அணு அணுவாக அவரைப் பின்பற்ற வேண்டும். ஸலாம் கொடுத்ததற்குப்பின்னால் ஓதப்படக்கூடிய மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட முறைகளுக்குட்பட்டு செய்யப்படும் துஆகளிலும், திக்ருகளிலும் கலந்து கொள்வது அவருக்கு நன்மை தரும் செயல்களாகும். யாரையும் அந்தச் செயல்பாடுகளைக் கொண்டு கட்டாயப்படுத்தவும், அவர்கள் மீது அவற்றை திணிக்கவும் முடியாது. அவ்வாறு செய்யப்படக்கூடிய உபரியான வணக்க, வழிபாடுகள் யாவும் பின்னால் எழுந்து தொழுபவருக்கு இடையூறு ஏற்படாவண்ணமும் இருக்க வேண்டும்.

☛ தற்சமயம் ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக

குர்ஆனுடைய ஆயத்துக்கள் முழுவதும் செல்போன்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த செல்போன்களைப் பார்த்து குர்ஆன் ஓதுவதால் நன்மைகள் கிடைக்குமா? விளக்கம் தரவும்.

**சேந்தமங்கத்திலிருந்து**
**ஹாஜிமுஹம்மது**

✍ குர்ஆனுடைய அசல் பிரதியைப் பார்ப்பதற்கும், அதை கையில் வைத்துச் சுமப்பதற்கும், அதைக் கொண்டே ஓதுவதற்கும் உள்ள நன்மைகளே தனி! அதைத் தவிர்த்து, மற்றவற்றை கொண்டு ஓதினால், ஓதிய நன்மைக் கிடைக்குமே தவிர, மற்ற நன்மைகளில் குறைவு ஏற்படும். எனவே, அது போன்ற நன்மைகளை மற்றதிலி ருந்து எதிர்பார்க்க முடியாது.

☛ எத்தனை வயது முதல் எத்தனை வயது வரையில் திரு மணம் செய்து கொள்ளலாம்?

**சேலத்திலிருந்து**
**அன்வர்ஜீ**

✍ திருமணத்திற்கு வயது வரம்பை மார்க்கம் ஏற்படுத்த வில்லை. திருமணம் முடிப்ப தற்குத் தேவையான அறிவாற்ற லும், பொருளாதாரமும், உடல் வலிமையும் இருந்து விட்டால் திருமணம் செய்து கொள்ளலாம். இந்த நிலைகள் வருவதற்கு முன் பாக ஒருவர், ஒரு பெண்ணைத் திருமணம் முடித்தாலும் அந்தத் திருமணம் செல்லுபடியாகும். திருமணத்திற்குப்பின்னுள்ள வாழ்க்கையைத் துவங்குவதற்கு அதற்கான உடல் வலிமை மிக மிக அவசியமானதாகும். எனவே தான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களை ஆறாவது வயதிலேயே திரு மணம் முடித்துக் கொண்டாலும், வாழ்க்கையைத் தொடங்கியது ஒன்பதாவது வயதிலாகும்.

அவ்வாறே, வயது முதிர்ச்சியாகி விட்டாலும் திருமணம் முடிப்ப தற்கு எந்தத் தடையையும் மார்க்கம் ஏற்படுத்தவில்லை. அந்த நேரத்துடைய ஒரு மனித ருடைய தேவைகளை அனுசரித்து திருமணம் முடித்துக் கொள்வது தவறானதுமல்ல.

☛ தொழுகைக்கு தக்பீர் கட்டிய பின்பு, செல்போன் அடித்தால் அதை ஆஃப் செய்து விட்டு, தொழுகையை மீண்டும் தொடர வேண்டுமா?

**மதுரையிலிருந்து**
**அப்துல்லாஹ்**

✍ தொழுகைக்கு முன்பாக தொழுகைக்குத் தயாராகுவதை மார்க்கம் வலியுறுத்தியிருக்கிறது. அதேசமயம், அந்தத் தொழுகைக் காக அவசர அவசரமாக உளூச் செய்தல், அதற்காக திடுதிடுவென ஓடுதல், இமாம் எந்த நிலையில் இருக்கிறார் என்பதைக்கூட கவனிக் காமல் வேக வேகமாக நடந்து கொண்டே தக்பீர் கட்டுதல்

போன்ற செயல்பாடுகளை மார்க்கம் "வேண்டாம்" என்று சொல்கிறது. அந்த வரிசையில், வீட்டிலிருந்து அல்லது கடை அல்லது அலுவலகத்திலிருந்து தொழுகைக்காகச் செல்லும்போது, தனது அலைபேசிகளை அங்கேயே வைத்துவிட்டு சென்று விட வேண்டும். அல்லது அங்கேயே அதன் சப்தத்தைச் செயலிழக்கச் செய்து விட்டு, பாக்கெட்டில் பத்திரமாகப் போட்டுக் கொண்டு, பிறகு பள்ளிவாசலுக்கு நடையைக் கட்ட வேண்டும். ஏனெனில், பள்ளிவாசலுக்குச் செல்லும்போது தொழுகை நடந்து கொண்டிருந்தால் அவசரமாக ஜமாஅத்தில் சேரும் நோக்கத்தில் செல்போனுடைய நினைவை மறந்து விட்டு, தொழுகையில் சேர்ந்து விடுவோம். எனவேதான், தொழுகைக்குத் தயாராகும் போதே இக்காலக்கட்டத்தில் செல்போனையும் ஞாபகத்தோடு ஆஃப் செய்து விட்டு தொழுகைக்குச் செல்ல வேண்டும். எதிலும் கவனம் தேவை! ஒரு வேளை மறந்து விட்டு தக்பீர் கட்டிவிட்டால் செல்போன் அலற ஆரம்பித்துவிட்டால், அதை ஆஃப் செய்வதற்காக தொழுகையை முறிப்பதற்கு மார்க்கம் அனுமதி கொடுக்கவில்லை. எனினும், அதன் மூலம் சுற்றிலும் தொழுபவர்களுடைய கவனம் திசை திரும்பி, தொழுகைகள் வீணாகி விடுவதற்கு அல்லது குறைந்த பட்சம் மக்ரூஹ்வுடைய நிலையையடைவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் அதை ஆஃப் செய்து விட்டு மீண்டும் தக்பீர் கட்டி தொழ வேண்டும்.

சகோதர சமுதாயத்தினரின் கோவில்களில் நடைபெறக் கூடிய சடங்கு, சம்பிரதாயங்களில் நம் இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் பலர் மிக்க பேணுதலோடு கலந்து கொள்வதை சமீபகாலமாகச் செய்திகளிலும், சமூக வலைதளங்களிலும் காண முடிகிறதே! மார்க்கம் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

நம்முடைய மார்க்கம் நமக்கு! அவர்களின் மார்க்கம் அவர்களுக்கு! யாரும் யாரையும் பின்னிப்பிணைய வேண்டிய தேவையில்லை. நம்முடைய வணக்க, வழிபாடுகளின் மூலமாக நாம் அல்லாஹ்வை நெருங்கிக் கொண்டு விட்டால், அல்லாஹ் நம்முடைய எல்லாத் தேவைகளையும் நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுப்பான். அந்த நம்பிக்கை மட்டுமே நமது ஈமானின் மிகப் பெரும் தூணாகும். அந்த நம்பிக்கையில் தளர்வு ஏற்படும் போது, இது போன்ற மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட ஹராமான, ஷிர்க்குடைய காரியங்கள் கூட சர்வ சாதாரணமாக நடைபெற முடியும். உடல் ரீதியான பலன்களைப் பெறுவதாக இருந்தாலும் சரி அல்லது பொருளாதார ரீதியாக அல்லது பதவி ரீதியாகப் பலன்

Since 1977-2017
40 Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

களைப் பெறுவதாக இருந்தாலும் சரி. அல்லாஹ்வின் நம்பிக்கை ஒரு முஃமினின் உள்ளத்தில் ஆழமாக பதிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும். எப்பேர்ப்பட்ட சிரமங்கள் வந்தாலும், எவ்வளவு பெரிய பதவிகள் கிடைத்தாலும், உலகத்துடைய ஆக உயர்ந்த மரியாதைகள் கிடைத்தாலும் அல்லாஹ்தான் அனைத்தையும் தருகிறான். நமக்கு ஏற்படும் இன்பங்களும் - துன்பங்களும், இலாபங்களும் - நஷ்டங்களும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து மட்டுமே அவனின் நாட்டப்படி மட்டுமே வந்து சேர்கின்றன என்ற நம்பிக்கையில் கொஞ்சமும் தளர்வுகள் ஏற்படக் கூடாது. ஒவ்வொரு பெற்றோரும், தன் பிள்ளைகளுக்குச் சிறு வயது முதலேயே அந்த நம்பிக்கையை ஆணித்தரமாக ஊட்ட வேண்டும். அப்படி வளர்க்கப்பட்ட குழந்தைகள் யாரும் இன்ஷா அல்லாஹ் மாற்றுப் பாதைக்குச் சென்று விட மாட்டார்கள். அந்த வளர்ப்பில் குறை ஏற்படும்போதுதான் குழந்தைகள் வளர வளர, சூழ்நிலைகள் அந்தக் குழந்தைகளை வேறு வேறு திசைகளின் பக்கமாக இழுத்துச் சென்று விடுகின்றன. நஊதுபில்லாஹ்! அல்லாஹ் பாதுகாப்பானாக!

☛ சில பள்ளிவாசல்களில் நாற்காலியில் அமர்ந்து தொழுபவர்கள் ஸஃப்பின் முன்பகுதியில் தங் களின் சேரைப் போடுவதால் வரிசையில் நிற்பவர்களுக்கிடையில், முன் - பின் ஏற்பட்டுவிடுகிறது. சில சமயங்களில், சேரில் அமர்ந்து தொழுபவர்கள் எழுந்து நின்றால் அவர் அந்த வரிசையில் மற்றவர்களை விட முன் நிற்பவராக ஆகி விடுகிறார். வரிசை என்பது குதிங்காலையும், தோள் புஜத்தையும் ஒரே மாதிரியாக வைத்து நிற்பது தான் முறையான செயல் என்று ஆலிம்கள் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறோம். எனவே, சேரில் தொழுபவர்கள் எப்படி நிற்க வேண்டும்?

**காரைக்குடியிலிருந்து**
**எம்.கமாலுத்தீன்**

✍ ஷரீஅத் ரீதியாக சேரில் தொழுபவர் எழுந்து நின்றால் அவரின் குதிங்காலும், தோள் புஜமும் அருகில் உள்ளவருடைய தோள் புஜத்தோடும், குதிங்காலுடனும் சேர்ந்திருக்க வேண்டும். அதன்படி சேரை பின்வரிசையின் முடிவோடு சேர்த்துப் போட வேண்டும். இதனால் தான் சில பள்ளிவாசல்களில் சேரில் தொழுபவர்களுக்காகவே ஓரமான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

முடிந்தளவு நின்று தொழ முடியாதவர்கள், கீழே தன் வசதிப்படி உட்கார்ந்து தொழ வேண்டும் என்றுதான் மார்க்கம் கூறுகிறது. காலத்துடைய சூழ்நிலைகளின் காரணமாக தரையில் அமர்ந்து தொழும் சூழ்நிலை காணாமல் போய், அது நான்கு கால்களைக் கொண்ட ஸ்டூல்களாகவும், பின்பு சாதாரண சேர்களாகவும், பின்பு சாய்மானத்துடன் கூடிய சேர்களா

கவும், பின்புடேபிளுடன் இணைந்த சேர்களாகவும், சர்ச்சுகளைப் போன்றும், மாற்று சமுதாயத்தின ருடைய வழிபாட்டுத்தலங்களைப் போன்றும் உருவெடுத்து வருவது மிக மிக கவலைக்குரிய வேதனைப் பட வேண்டிய மாற்றங்களாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

எனவே, அமர்ந்து தொழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டவர் கள் மட்டும் நாற்காலிகளைப் பயன்படுத்தவும், அதிலும், ஒழுக்கத்தோடு அமர்ந்து கொள்ள வும் மார்க்கம் வலியுறுத்துகிறது. நிற்க முடிந்தவர்கள், சோம்பேறித் தனத்தின் காரணமாக அல்லது அசட்டுத்தனத்தின் காரணமாக உட்கார்ந்து தொழுதால் **நிலை நிற்குதல்** என்ற ஃபர்ளான கடமையை விட்டதின் காரணமாக அந்தத் தொழுகை நிறைவேறாமல் போய் விடும். அல்லாஹ்விற்கு பயந்து நம் பெரியார்கள், ஸஹாபாக் கள் தொழுததைப் போன்று நாமும் முழு உள்ளச்சத்தோடு தொழுவதற்கு முயற்சிப்போம்.

இல்லாவிட்டால் தொழுகையின் கடமை வீணாகிவிடுவதோடு, நாம் அந்தத் தொழுகைக்காக எடுத்துக் கொண்ட அனைத்து முயற்சிகளும், நேரங்களும் பாழ் பட்டு விடுகின்றன. அதனால், நாளை மறுமையில் அல்லாஹ்வின் திருப்தியை விட்டும் தூர எறியப் பட்டு, அவனின் அதாபிற்கு ஆளாகி விடுவோமே! நஊதுபில்லாஹ்!

☛ எனக்கு முதல் மனைவியின் மூலமாக ஆறு குழந்தைகள் உள்ளனர். அனைவருக்கும் திரு மணமாகி அவரவர் தனித்தனி யாக வாழ்ந்து வருகிறார்கள். அந்த மனைவி இறந்துவிட்ட தால், பிள்ளைகளின் கவனிப்பும் எனக்கு இல்லை என்பதால் நான் இரண்டாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டேன். ஆனால், என் மகன்களில் ஒருவர், இப்படி சொல்லிக் கொண்டு திரி கிறார் : அதாவது, என் தந்தை இறந்து விட்டால் அவரின் இரண் டாவது மனைவி அந்த வீட்டிலி ருக்கும் நிலையில், நான் அங்கு சென்று என் தந்தையினுடைய ஜனாஸாவைப் பார்க்க மாட்டேன். அவர் இறந்தவுடன் அந்தப் பெண் அந்த வீட்டை விட்டும் வெளி யேறிவிட வேண்டும் என்று நிபந் தனை விதிக்கிறார். இதனால், நான் ஒரு வேளை இறந்து போய் விட் டால் எனது ஜனாஸாவை பள்ளி வாசலில் வைத்து அனைவரும் பார்த்து முடித்தவுடன் கொஞ்ச நேரம் வீட்டில் கொண்டு போய் வைத்து விட்டு பின்பு அடக்கம் செய்து விடுங்கள் என்று கூறு கிறேன். இப்படிச் செய்யலாமா? மார்க்கம் என்ன சொல்கிறது?

✍ தந்தை தனது துணையை இழந்து, ஆதரவற்று இருப்பதின் காரணமாக தன் கடைசி நிலை யில், தனக்கு உதவிக்கு ஆள் வேண்டும் என்பதற்காக இன் னொரு பெண்ணைத் திருமணம் செய்திருப்பது எந்த

வகையிலும் மார்க்கத்திற்கு முரணானதுமல்ல. பிள்ளைகளின் கடமைகளுக்கு எதிரானது மல்ல. இப்படிப்பட்ட நிலையில், தங்களின் ஒரு மகன் இப்படி கூறித் திரிவது அவர், தனக்கே நஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்வதாகத்தான் இருக்கும். இரண்டாவது மனைவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் தன்னைப் பெற்றெடுத்த தந்தையைக் கவனிப்பதும், அவரின் இறப்பிற்குப் பின்பு அவரின் ஜனாஸாவுடைய வேலைகளை துரிதமாகச் செய்வதும் பிள்ளைகளின் கடமை என்பதை மறந்து விட்டு இப்படிப் பேசுவது எந்த மனிதனுக்கும் நல்லதல்ல. ஏனெனில், யாருடைய வாழ்வும் - மரணமும் மனிதர்களுடைய கையில் கிடையாது. யார் யாருக்கு முன்பாக மரணிப்பார்கள் என்பதை யாரும் அறிய மாட்டார்கள். வயது முதிர்ச்சி மட்டுமே மனிதனின் மரணத்திற்குக் காரணமல்ல. எனவே, நாவு இருக்கிறது என்பதற்காக நினைத்ததையெல்லாம் பேசுபவன் முஃமினாக வாழ முடியாது. பேசுவதற்கு முன்பு "நமது மரணம் நமக்கு எப்பொழுதும் வரலாம்" என்ற சிந்தனை ஒவ்வொரு நிலையிலும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சிந்தனைகளை அல்லாஹ் நம்மனைவருக்கும் ஆழமாகத் தந்தருள்வானாக. ஆமீன்.

சில பள்ளிவாசல்களில் தொப்பியின்றி தொழுவதற்கு அனுமதி இல்லை என்ற வாசகம் எழுதிப் போடப்பட்டுள்ளது. தொப்பி இல்லாமல் தொழுவதால் தொழுகை கூடாதா?

**விழுப்புரத்திலிருந்து**
**நிலா மைதீன்**

தொப்பியின்றி தொழுவதால் தொழுகை நிறைவேறிவிடும். ஆனால், அரசனுக்கெல்லாம் அரசனாகிய அல்லாஹ்வின் சன்னதியில் நல்ல ஆடைகளோடு, முழுமையான மறைப்புகளோடு தன் அடியார்கள் தன்னிடத்தில் வர வேண்டும் என்று அவன் விரும்புகிறான். தொப்பி வாங்கி அணிவதற்கு வசதியில்லாவிட்டாலும் ஆங்காங்கே பள்ளிவாசல்களில் தொப்பிக் கூடைகள் வைக்கப்பட்டுள்ளன அல்லது கொஞ்சம் வசதியுள்ள அறிமுகமான ஒருவரிடம் நான் தலையில் அணிந்து தொழுவதற்காக ஒரு தொப்பியை வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால் யாரும் மறுக்க மாட்டார்கள். தன்னிடமுள்ள சிறிய தொகையைக் கொண்டாவது வாங்கிக் கொடுக்க முயற்சிப்பார்கள். எனவே, அல்லாஹ்வின் முன்னால் தொப்பியை அணிந்து, நல்ல ஆடைகளோடு தொழுகைக்குச் சென்று கடமையை நிறைவு படுத்துங்கள். அதுவே ஒழுக்கமான, கண்ணியமான செயலாகும்.

அதைவிடுத்து, தொப்பி அணியக் கூடிய சக்தி இருந்தும் பொடு போக்குத்தனமாகவோ அல்லது அசட்டைத்தனமாகவோ அல்லது வேண்டுமென்றோ அல்லது அரை குறை ஆடைகளோடு தொழுவ

# வாங்கி படித்து விட்டீர்களா?

குர்ஆனின் குரலின் நிறுவனர் அல்லாமா

**அ.மு.அப்துல் ஜப்பார் பாகவீ** ஹள்ரத் (ரஹ்) அவர்களால்

இந்தச் சமுதாயத்திற்கு தொகுத்து வழங்கப்பட்ட

**பிரார்த்தனை செய்வது எப்படி?** எனும்




**அற்புதமான நூல்!**

**வீடுதோறும் இருக்க வேண்டிய நூல்!**

**நூல் விலை :**
**ரூ.25/- மட்டுமே!**
தபால் செலவு தனி!

**உடனே தொடர்பு கொள்ளுங்கள்!**

# குர்ஆனின் குரல்

த.பெ. எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை – 625 020.**

வாட்ஸப் மற்றும் அலைபேசி தொடர்புக்கு : **9442056547, 9486729192**

தூல்ஒழுக்கத்தில்ஏற்பட்ட குறைவு களால் அல்லாஹ்வின் சன்னி தானத்திலும் அந்தத் தொழுகை குறை உள்ளதாகச் சென்றடையும். கவனமாகச் செயல்படுவோம்.

☛ என் கணவர் குடித்து விட்டு, வீட்டில் வந்து கடுமையாகச் சண்டையிடுகிறார். அடிக்கவும் செய்கிறார். இதற்குமேல் பொறுமையாக இருக்க முடியாத நான், எங்களின் நிக்காஹ் நடந்த பள்ளிவாசலுக்கு சென்று நான், என் கணவரை தலாக் சொல்லி விட்டதாக எழுதிக் கொடுத்து விட்டேன். எனது செயல்பாடுகள் சரியானதுதானா? நான் எழுதிக் கொடுத்த அந்த தலாக் செல்லுபடியாகுமா?

✍ ஷரீஅத் ரீதியாகப் பெண் களுக்கு தலாக் சொல்லக்கூடிய உரிமை கிடையாது. அதனால் நீங் கள் எழுதி கொடுத்த தலாக் செல்லுபடியாகாது. மாறாக, அல்லாஹ்விடம் உருக்கமாக தஹஜ்ஜுது நேரங்களிலும், மற்ற நேரங்களிலும் குறிப்பாக தனிமை யாக இருக்கும்போதும் அழுதும், மனமுருகியும் அந்த கணவரின் ஹிதாயத்துக்காக துஆ செய்து வாருங்கள். அந்தக்கணவரின்நேர் வழிக்காக நாமும், இதைக் காணும் வாசகர்களும் துஆ செய்வார்கள். அல்லாஹ் கபூலாக்குவானாக!

☛ சில பள்ளிவாசல்களில் ஜமா அத் தொழுகைக்கு நேரம் நெருங்கி விட்ட நிலையில், சிலர் சுன்னத் தொழுகைகளை முதல் வரிசை யில் நின்று தொழ ஆரம்பித்து விடுகிறார்கள். இகாமத் சொன்ன வுடன் வரிசைகளைச் சரிசெய்யும் போது மற்ற தொழுகையாளி களுக்கு இடையூறு ஏற்படுகிறது. சுன்னத் தொழுவதற்கான முறை களில் கொஞ்சம் மாற்றம் செய் தால் நன்றாக இருக்குமல்லவா? தமிழகத்தில் சில பள்ளிவாசல் களில் சுன்னத் தொழுவதற்கென்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டுள் ளன. அதனால் யாருக்கும் இடை யூறு ஏற்படுவதில்லை. அப்படி யொரு அமைப்பு மற்றெல்லாப் பகுதிகளிலும் இருந்தால் எப்படி?

**பெங்களூரிலிருந்து**
**நூருல்லாஹ்**

✍ ஆம். நீங்கள் சொல்வது நல்ல யோசனை! இகாமத் சொல்லி விட் டால், பள்ளிவாசலுக்குள் நுழைப வர்கள், நுழைந்தவுடன் மற்றவர் களுக்கு இடையூறு இல்லாத வகையில் சுன்னத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் மார்க்கத்தில் வலியுறுத்தப் பட்டுள்ள விஷயமுமாகும். அல்லாஹ்வின் கிருபையால் நிறைய இடங்களில், இதுபோன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. மீதியுள்ள பள்ளிவாசல்களி லும் அது போன்ற முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டால் யாரும், யாரையும் எரிச்சல்பட வேண்டிய அவசியமோ, திட்ட வேண்டிய அவசியமோ, யோசித்து முன்வரிசைகளுக்குச் செல்லவேண் டிய அவசியமோ ஏற்படாது.

# மவ்த்தை மறந்த மனித வாழ்க்கை

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

“நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை அடைந்தே தீரும்; மிகப் பலமாகக் கட்டப்பட்ட கோட்டை [கொத்தளங்]களில் நீங்கள் இருந்தபோதிலும் சரியே!”

- அல்குர்ஆன் (4 : 78)

இரகசியம், பரம இரகசியம் மரணம்! ஆயத்துக்கள், ஹதீஸ்கள் வாயிலாக மரணத்தை அறிந்திருந்தாலும் அதன் இரகசியம் புரியவில்லை.

சகராத், இது பற்றி அதிகமதிகம் விளக்கப்பட்டிருந்தாலும், ஏனோ அது மர்மமாகவே இருக்கிறது.

இப்படித்தான் அப்படித்தான் என்ற கற்பனைக்கு எட்டாமலேயே இருக்கிறது.

மண்ணோடு மண்ணாக மக்கிப் போகக் கூடாதா? புல்லாக இருந்தால்கூட ஆடு, மாடுகள் சாப்பிட்டுவிட்டு அதோடு கதை முடிந்ததாக இருக்கக்கூடாதா?

ஆவி போனபின் ஒன்றுமே இல்லாத ஒன்றாக இருந்து விடக் கூடாதா?

ஒரு மண்ணறை, அதுவும் தனிமை, இருட்டறை, புழு, பூச்சிகள், தேள், பாம்பு என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதே; இப்படியும் ஒரு சோதனையா?

தப்பிக்க வழியே இல்லையா? ரப்பே! ரஹ்மானே! என்று அவனிடத்தில் முறையிட்டு அழுவதைத் தவிர வேறொரு வழியும் தெரியவில்லையே!

ரப்பே! நீ கருணையாளன் தான். ரஹ்மான்தான், கபூர்தான். ஆனாலும் அச்சம் அகலவில்லையே வேதனைகளை வேதங்கள் சொல்கின்றனவே. அது பொய்யாகுமா? நபிகளார் கூறியிருக்கிறார்களே எப்படி மறுக்க முடியும்?

எந்தத் துணையும், உறவும், நட்பும், செல்வாக்கும், அதிகாரமும், பணமும், செல்வமும், பாசமும், பந்தமும் அங்கே எதுவும் செய்ய முடியாதென அறிந்த பிறகும் மரண சிந்தனையோ, நினைவோ, பயமோ எதுவுமே இல்லாதவர்கள் தைரியசாலிகள் தான்(?)

ஜும்ஆ தொழுகை, பக்தியுள்ளவர்கள் பாங்கு சொல்வதற்கு முன்பே பள்ளிக்குச் சென்று குர்ஆன், ஸலவாத் போன்றவற்றை ஓதி, நஃபில் வணக்கங்கள் செய்து, சுன்னத் தொழுகை முடித்து, குத்பா பேருரைகளைச்

செவிமடுத்து, ஃபர்ளு முடித்து, பின் சுன்னத் நஃபில்களையெல்லாம் தொழுது, துஆ கேட்டுச் செல்பவர்கள்!

இமாம் குத்பா ஓதும்போதோ தொழுகை ஆரம்பித்த போதோ ஓடோடி வந்து, தொழுகை முடிந்ததும் துப்பாக்கிச் சூட்டுக்கு பயந்து ஓடுபவர்கள் போல் ஓடுபவர்கள்! முன்பின் சுன்னத் தொழுகை இல்லாதவர்கள்!

முன் கூறப்பட்டவர்கள் மரண பயத்தாலும், மண்ணறை பயத்தாலும், மறுமை நேர பயத்தாலும்,எப்படியாவதுநன்மைகளை அதிகமதிகம் செய்வோம் என்று அமல்களை முழுமையாகச் செய்கிறார்கள்.

இவர்களுக்கும் வியாபாரம் உண்டு. வேலைகள் உண்டு; பல அலுவல்கள் உண்டு. இவர்களே இறைவனின் அருளைப் பெற தகுதி பெறுகிறார்கள்.

அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டுகிறானோ அவர்களே பாக்கியம் பெற்றவர்களாகின்றனர்.

அச்சமற்று ஓடுபவர்களைப் பற்றி தீர்ப்பொன்றும் கூற முடியாது. அது அல்லாஹ்வின் அதிகாரத்திற்குட்பட்டது.

கப்ரை நினைத்து அழுதழுது இரு கண்களின்கீழ் பகுதி பள்ளமாகி விடுமளவு கண்ணீர் வடித்து கவலைப்பட்ட நல்லடியார்களைப் பற்றிப் படித்திருக்கிறோம்.

அரசப் பதவியைத் துறந்து விட்டு, பசியும் பட்டினியுமாக வீடின்றி கஷ்டப்பட்டு, இபாதத்திலேயே காலத்தைக் கழித்த மன்னர் இப்ராஹீமிப்னு அத்ஹம் போன்ற ஞானிகள்.

“புல்லாகப் படைத்திருந்தால், கால்நடைகள் சாப்பிட்டுப் பசியாறி இருக்குமே” என்று அழுத கலீபா ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள்.

ஒட்டுத் துணியணிந்து மிகக் குறைந்த ஊதியத்தில் வாழ்க்கையைக் கழித்த கலீபா ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள்.

இப்படி எண்ணற்ற சஹாபாக்கள் வசதிகளை இழந்து வறுமை, பசி, பட்டினி என்று வாழ்ந்தார்களென்றால் வசதியாக வாழத் தெரியாமலில்லை.

ராபியத்துல் பஸரிய்யா (ரஹ்), அதவிய்யா (ரஹ்) போன்ற பெண் தியாகிகள் துனியாவை விரும்பவில்லையென்றால் வாழ முடியாமலல்ல.

உலகம் ஒரு சிறைச்சாலை என்பதை அவர்கள் நிரூபித்து வாழ்ந்துள்ளார்கள்.

உலகம், அதன் அலுவல்கள், ஆடம்பரங்களெல்லாம் மனிதனை மறுஉலகச் சிந்தனையிலிருந்து மறக்கடிக்கின்றன.

இப்போது உலகம் வெற்றி பெறுகிறதா? மனிதன் வெற்றி பெறுகிறானா?

உடல்நிலை சரியில்லையென்றால் நெஞ்சுவலி என்றால் உடனே டாக்டரிடம் ஓடுகிறான்; பதற்றமடைகிறான்; பயப்படுகிறான். என்ன பயம் மரண பயம்தான்!

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர்ரஹீம்
எல்லாப் புகழும் இறைவனுக்கே!

# இஸ்லாமிய மணமகன், மணமகள் தகவல் மையம்

**35 வயதுக்கு மேற்பட்ட மணமகன், மணமகள் தகவல்களை பதிவிடவும், தகவல்களை தெரிந்து கொள்ளவும் இந்த சேவை துவங்கப்பட்டுள்ளது**

# 35plusnikkah

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சுய விரைக் குறிப்புடன் 35plusnikkah@gmail.com என்ற மெயிலில் பதிவு செய்யவும்.

மணமகன் – மணமகள் தரப்பினர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களின் மெயில் வந்தவுடன் உங்கள் பகுதி ஜமாஅத்தை விசாரித்தபின் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

பதிவு செய்ய கட்டணம் இல்லை.

**தொடர்புக்கு :**

**35plusnikkah@gmail.com**

http://www.35plusnikkah.com

**8148463579**

தவறான தகவல்களுடனும், தவறான நோக்கத்துடனும் பதிவிட வேண்டாம். உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அச்சுறுத்தல், எச்சரிக்கை வரும்போதுதான் மரணித்துவிட்டால், மண்ணறையில் என்ன செய்வாய்? யார் உதவுவார்கள்? என்ற கேள்விகள் தோன்றும்.

பயான்கள், அறிவுரைகள், ஜூம்ஆ உரைகள், மேடைப் பேச்சுக்கள் எதுவும் மனித மூளையில் ஏறவில்லையானால் ரூஹு வாங்கிடும் மலக்குகள்தான் ஏற்றுவார்கள்.

ஒரு கடைக்கு பல கடைகள் வைக்க ஆலோசனை, வீட்டை அழகாகக் கட்ட ஆசை, இப்படி ஆசைகளுக்கு அளவில்லாமல் தொடர்ந்து கொண்டே போகும் நிலையில், மறுமையில் ஒரு சுவனம் வேண்டுமே என்ற நினைவே இல்லாமல் வாழ்பவன் எப்படி விவேகமுள்ளவனாக இருக்க முடியும்? பெற்ற பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வழி காட்டிக் கொடுப்பவன், ஏற்பாடுகள் செய்து கொடுப்பவன், அவர்கள் சந்தோஷமாக, மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென விரும்புபவன், ஏனோ தன் மறுமை வாழ்க்கையைப் பற்றி நினைத்தே பார்ப்பதில்லை.

எனக்கு கோடி கோடியாகப் பணம், பல பங்களாக்கள், பல கார்கள், விமானம், வேலையாட்கள், குளித்து உடை மாற்றிவிட ஆட்கள், உணவுகூட ஊட்டிவிட ஆயாக்கள், கஷ்டம் கவலை என்பது என்ன என்று தெரியாத வாழ்க்கை. உடல் நோயுற்றேன். மருத்துவமனையில் சில கோடிகள் செலவு, தள்ளுவண்டியில் அழைத்துச் செல்கிறார்கள். வியாதியை குணப்படுத்த முடியாது என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள்.

கோடிகளும், உதவி ஆட்களும், ஆயாக்களும், உறவினர்களும், நண்பர்களும் எதுவும் செய்ய முடியாமல் வருத்தப்படுகிறார்கள்.

"மரணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். எவ்வளவு வசதியாக வாழ்ந்தாலும் மரணமே முடிவு என்பது உண்மையாகி விட்டது" என்று கோடிகளுக்கு அதிபதி தன் இறுதி நேரத்தில் கூறுவார்.

விசுவாசிகளே! உங்கள் பணமும், மக்கட் செல்வமும், இறை நினைவைவிட்டு வீணாக்கி விட வேண்டாம்" என்ற இறை வசனம். இதுபோல் பல அறிவுரை வசனங்கள் குர்ஆனில் பல இடங் களில் வந்தாலும், குர்ஆனைப் படிக்கவோ, தெளிவு பெறவோ நேரமில்லாத மக்களை அல்லாஹ் தான் தன் கருணையால் காப்பாற்ற வேண்டும்.

இன்றைய அரசியல், இளைஞர்களை இழுத்து, உணர்வுகளை தட்டியெழுப்பி, துனியாவை இழுத்து, தோளில் போட்டு, வாயில் தக்பீர் முழக்கத்தைத் தட்டியெழுப்பி இதயத்தை காலியான தீனாக ஆக்கி வைத்திருக்கிறது.

இவர்கள் பெரியோரின் பேச்சை, பெற்றோரின் பேச்சை கேட்பவர்களாகயில்லை.

இவர்களை இஸ்லாமிய அடையாளங்களுடன் தீன்சேவையில் வாழ வைப்பது என்பது முடியாத ஒன்றாக இருக்கிறது.

இவர்களும், இவர்களுடைய வம்சாவழிகளும், இவர்களுடைய தீன் வாழ்க்கையும் எப்படி அமையுமோ என்பது கேள்விக்குறி!

இப்படி வாழ்வோரின் மறுமை வாழ்க்கை கவலைக்குரியதுதான்.

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை, தொட்டிலை ஆட்டும் பெண்கள் கையில்தான் இவர்களது எதிர்காலம் இருக்கிறது.

செல்லம் என்ற பெயரால் குறிப்பாக பெண் பிள்ளைகளின் கையில் செல்போன் எனும் ஷைத்தான் சந்தோஷமாக விளையாடி ஷைத்தான் தன் வேலைகளை மிக எளிதில் முடித்துக் கொள்கிறான்.

பெண்பிள்ளைகள் தடம்மாறி, தடுமாறி, பிற ஆடவர்களுடன் முர்தத் ஆகி ஓடிப் போகிற அவல நிலையைக் காணும்போதும், பெற்றோர்கள் கண்ணீர் வடித்து, நெஞ்சு வெடித்து அழும்போதும், இரக்கப்படுவதா? வெறுப்புக் கொள்வதா? என்பது தெரியவில்லை.

கருணையாளன் அல்லாஹ் தான் சமுதாயத்தை சன்மார்க்க வழியில் நடத்த வேண்டும். இப்படி பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.


94867 04264
04368 - 240014

AYISHA
BAGS & LUGGAGES

130, Sulthan Arcade, Bharathiyar Road,
Bharathiyar Road, **KARAIKKAL - 609 602.**

# இல்லாத பொருளேயில்லை இணையில்லா குர்ஆனில்!


மவ்லானா **முஹம்மது முஹ்யித்தீன் மதனீ**

சவூதி அரசின் இஸ்லாமிய மேனாள் (துபை) பிரதிநிதி.


இணையற்ற இறைமொழி!
இன்னிகரற்ற நபியவர்கள் வழி!

இப்பூவுலகோர் யாவர்க்குமே
இவைபொதுவுடமைக் கருவூலமே!

நோக்குவார் நோக்குக்கெல்லாம்
நுண்பொருள் வாய்க்கும்வண்ணம்

ஆக்கியே இறைவன்தந்த
அருமறை குர்ஆன், நண்பா!

இல்லாத பொருளேயில்லை,
இணையில்லா குர்ஆன் இங்கு

சொல்லாத பொருளேயில்லை,
சோபிதம் பாராய், நண்பா!

மவ்லவீ ஆலிம்கள் ஆய்வுக்கு
மாத்திரமே சொந்தமில்லை!

மனுக்குல முழுமைக்கே
மட்டுமல்ல இதுசொந்தம்!

மாநபி மக்காவில் ஓதியபடி
மற்றஇன ஜின்களுக்கும்

மறையாக இதுவே தான்!
மாமறை இறுதிவசனமோ

"மினல் ஜின்ன(த்)தி
வன்னாஸ்" வாக்கியமே!

இது இறைமறை சந்தேகமின்றி!
இப்படித் தொடங்கிய சீர்மறை,

"பகரா" எனும் மாக்களை
பத்தரை மாற்றுப் புனிதராக

பூமி இடத்தாரையும்
பூத இனத்தாரையும்

மாற்றிடும் மாமறை!
போற்றிடும் வான்மறை!

பேரறிஞன் இறைவனைத்தவிர,
புவியோர் யாவருமிணைந்து

பெருமுயற்சி செய்திடினும், இப்
புனிதமறை போன்றொன்று

அறவே ஆக்கமுடியாதென
அறைகூவல் விடுக்கும்

அற்புதமான மாமறை, இது
அல்லாஹ்வின் அருள்மறை!

"ஆய்வு செய்ய வேண்டாமோ, அவர்
இதயங்கள்மீது பூட்டுகளா ?"

என அழைக்கும், இப்பூவுலகில்
எந்நூலும்கூறா புரட்சிநூல்!

இருபத்து மூன்றாண்டிலே
இவ்வுலகையே புரட்டிய நூல்!

நன்மறை புகழ்பாடும், மதனீ
நலம் நிறை வாழ்கவே நிதம், நீ!

இணையில்லாப் புகழ்யாவும்
இறைவா, உன் ஒருவனுக்கே!

இனிய உன் சலவாத்து சலாம்
இறுதிநபி கிளை நேயர்க்கே!

# ஸ்லோ பாய்ஸன்

மவ்லவீ ஹாஃபிழ் எஸ்.ஃபக்கீர் முஹம்மது ஜலாலீ

இஸ்லாம் என்பது மனித இனத்தின் படைப்பு ஆரம்பித்த நிமிடத்திலிருந்து அவனைச் செதுக்கும் வாழ்க்கைக் கருவியாக அல்லாஹ்வால் வடிவமைக்கப்பட்ட அற்புத நெறி. அது ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுக்குப்பின்தான் உருவ வழிபாடு, அக்னி வழிபாடு எனப் பிரிந்து பல வழிபாடுகளாக ஆயின. அந்தத் தொய்வு உச்சக்கட்டம் அடையும்போது, அடுத்த வழிகாட்டியாக இன்னொரு நபி மூலம் இஸ்லாமுக்கு உயிர் கொடுத்து அந்த உன்னத நெறி தொய்வுறாது காத்தான் அல்லாஹ்.

இஸ்லாம் என்பது ஏதோ அல்லாஹ்வுக்கு வலிமை ஏற்படுத்துவதற்காக அல்லாஹ்வால் திணிக்கப்பட்டதல்ல. மாறாக மனிதன் என்கிற உயிர், உலகில் செயல்களால் சுத்தமாக இருக்க உடல் வணக்கத்தையும், பொருளால் சுத்தமாக இருக்க பொருள் வணக்கத்தையும், சுத்தமான உணவால் அவன் ஆரோக்கியம் பெற ஹலால் பேணும் முறையையும் வடிவமைத்தான்.

முஸ்லிம்கள் தொழாவிட்டால், நோன்பு நோற்காவிட்டால், ஹஜ் செய்யாவிட்டால் அல்லாஹ்வுக்கு எந்த பாதகமும் இல்லை. தொழுகையில் மன ஓர்மை, எதையும் ஒருநிலைப்படுத்தி செயல்படும் திறன், எடுத்த செயலை முடிக்கும் வரை தீர்மானமாக இருக்கும் சக்தி ஏற்படுகிறது.

ஹஜ்ஜின் மூலம் இவ்வுலகில் இறைவன் படைத்த மனிதக் கடலில், தான் ஒரு துளி என்பதும், சமுதாயத் தோட்டத்தில், தான் ஒரு புல்லுக்குச் சமானம் என்பதும், அல்லாஹ் என்கிற மகா சக்திக்கு முன் தான் ஒரு தூசு என்பதும், இஸ்லாம் என்ற கட்டிடத்தின் ஒரு செங்கலாக ஒவ்வொரு தனி மனிதனையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்களே! அந்தக் காட்சியைக் கண்ணால் காணும் போது அடையும் பேரின்பத்தை அனுபவிப்பதே ஹஜ் என்பதையும் உணரவே அந்தக் கடமை.

அல்லாஹ் எல்லோருக்கும் பொருளாதாரத்தை மேலாண்மை செய்யும் அறிவை கொடுப்பதில்லை. அப்படிக் கொடுக்கப்பட்டவர் சேர்க்கும் செல்வம், அத்திறனில்லாத மனிதர்களின் பங்காகவும் இவனிடம் தரப்பட்ட அமானிதம் என்பதை உணர்த்தியும், தன்னிடம் தரப்பட்ட மேலதிக செல்வத்தில் அடுத்தவரையும் கவனிப்பதன் மூலம் உலகில் சமநிலை அடையும் உயரிய எண்ணத்தை அல்லாஹ் மனிதர்களுக்குத் தந்துள்ளதையும்

உணரவே பொருளாதாரக் கடமை யான ஸகாத்தையும், பொருளா தார பரவலான ஸதகாவையும் கடமையாக்கியுள்ளான்.

ஆயுள் இருப்பது எத்தனைக் காலம் என்பது யாருக்கும் எழுதிக் கொடுக்கப்படவில்லை. இருக்கும் காலம்வரை வாழ்ந்தே ஆக வேண்டும் என்பதும், அக் காலத்தை ஆரோக்கியமாக வாழ வேண்டிய வழிமுறையைப் பேண வும் ஹலால் நடவடிக்கையை அல்லாஹ் ஏற்படுத்தினான். சுருக்கமாகத் தொழுவது உனக்கு நல்லது. நோன்பு உனக்கு நல்லது. ஹஜ் உனக்கு நல்லது. ஸகாத், ஸதகா உனக்கு நல்லது.

ஹலால் உனக்கு நல்லது. நீ உனக்கான ஆயுள்வரை நல்ல உடல் நலத்துடன் வாழ அது நல் லது. அவ்வளவுதான். ஆனால் இந்தச் சிந்தனையெல்லாம் ஏற் படுவதற்கு பதிலாக இந்தக் கடமைகளைச் செய்பவர்களிடம் கூட, தான் அல்லாஹ்வுக்கு ஏதோ நன்மை செய்துவிட்டதான நினைப்பும், இதைச் செய்யாத வர்கள், 'அல்லாஹ் தான் தன்னில் தானே பூரணமானவன் அல்லவா? அவனுக்கு ஏன் நாம் இதை மேற் கொள்ள வேண்டும்?" எனப்பேசும் காலத்தில் வாழும் துர்பாக்கியம் நமக்கு ஏற்பட்டுள்ளது.

இவை சமுதாயத்தையும், மனிதநேயத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும் ஸ்லோ பாய்ஸன் என்பதை அறிய மறுக் கிறோம். அதுதான் உண்மை.

---

# தோண்டி எடுத்தவை

தென்காசி மஸ்ஊது

- ★ பசியோடு இருப்பவனிடம், பக்தியைப் பற்றிப் பேசாதே!
- ★ நேர்மையானவர்களுக்கு இருட்டிலும் வெளிச்சம் உதிக்கும்.
- ★ நேர்மை ஒரு போதும் தோற்பதில்லை!
- ★ போலியான நண்பனை விட, வெளிப்படையான எதிரியே மேல்!
- ★ பெற்றோர்களின் வாழ்க்கையானது, குழந்தைகளின் பாடப் புத்தகம்!
- ★ மவுனமாக இருந்தால் முட்டாள் கூட அறிவாளியாக மதிக்கப்படுவான்.
- ★ காலம் நதியைப் போன்றது; உற்பத்தியாகும் இடத்திற்குத் திரும்பாது.
- ★ நேரத்தை வீணாக்கினால் வாழ்க்கை வீணாகும்.
- ★ எடுத்தால் குறைவது செல்வம். கொடுத்தால் வளர்வது கல்வி!

# உலகக் கால்பந்து திருவிழா!

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்

**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

சர்வதேசக் கால்பந்து விளையாட்டுக்குழுக்களின்கூட்டமைப்பு (Federation of International Foot Ball Association) நடத்திய 22வது உலகக் கோப்பை போட்டிகள், கத்தார் (Qutar) நாட்டின் தலைநகர் தோஹாவில், நவம்பர் 20, 2022-ல் தொடங்கி, டிசம்பர் 18, 2022-ல் முடிவுற்றது.

மூன்று இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு சிறிய அரபு நாடு, உலகமே வியக்குமாறு சிறப்பாகப் போட்டிகளை நடத்தி முடித்து வரலாறு படைத்த அற்புதத்தைக் காண்கிறோம்.

பொருளாதார வளமிக்க பல உலக நாடுகள் கூட, உலகக் கோப்பை போட்டிகள் நடத்தத் தயங்கும்போது வளமிக்க ஓர் இஸ்லாமிய நாடு பொறுப்பேற்றது குறிப்பிடத்தக்கது!

## திரு. கியான்னி இன்ஃபென்டினோ (52)

சர்வதேசக் கால்பந்து விளையாட்டுகளின் கூட்டமைப்பின் இன்றைய தலைவர் இவர். சுவிட்சர்லாந்து நாட்டினர், வழக்கறிஞர், நேர்மையும், திறமையும் மிக்கவர். ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்ச், இத்தாலியன், ஸ்பானிஷ் முதலிய ஐந்து மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர். கால்பந்து அமைப்புகளின் நிர்வாகத்தை நன்கறிந்துள்ள அனுபவமிக்கவர்.

இவருக்கு முன்பு தலைமைப் பொறுப்பிலிருந்தவர் செ.பிளாட்டர் என்பவர் இலஞ்ச ஊழல் குற்றம் சாட்டப்பட்டு, தலைமைப் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டு, கியான்னி இன்பென்டினோ, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, இனி மூன்றாவது முறை ஆப்ரிக்க நாடான ரவாண்டாவின் கிகாலி நகரில் நடைபெறவுள்ள கூட்டமைப்பின் 73வது காங்கிரஸ் நிகழ்வின்போது, கி.பி.2023ம் ஆண்டு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகளைப் பெற்று வந்தன. இப்பொழுது ஆசியா, ஆப்ரிக்கா நாடுகளும் பங்கு பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டு

போட்டி நாடுகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இப்பொழுது 32 நாடுகள் பங்கேற்றன. கி.பி.2026-ல் நடைபெறவுள்ள உலகக் கோப்பை போட்டியில் பங்குபெறும் நாடுகளின் எண் ணிக்கை 48 ஆக உயரவுள்ளது.

ஒரு சிறிய இஸ்லாமிய நாடான கத்தாரில் உலகக் கோப்பை நடப்பதை பொறுக்க மனமின்றி, காழ்ப்புணர்வு கொண்ட சில ஐரோப்பிய நாடுகள் குறை கண்டு விமர்சித்தன. எட்டு விளையாட்டு மைதானங்கள் கட்டும்போது அதில் பணி புரிந்தவர்களின் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பதே அவர்களின் குற்றச்சாட்டு. இதனை ஒதுக்கித் தள்ளிய தலைவர் கியான்னி இன்ஃபென்டினோ அவர்களின் பதில், மனம் கொள்ளத்தக்கது.

“குறை கூறுபவர்கள், நேர்மைப்பாடம் (Moral lesson) கற்பிக்க வேண்டாம். ஏனெனில், ஏதேச்சதிகார ஐரோப்பிய நாடுகளின் பல நூற்றாண்டு வன் கொடுமைகளை யாரும் மறந்து விடவில்லை. ஆகவே, அடுத்த 3000 ஆண்டுகள் அவர்கள் மன்னிப்பு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்”

(ஹிந்து நாளிதழ் 04.12.2022)

கத்தாரில் நடைபெறும் கால் பந்துப் போட்டியைச் சிலாகித்து, இதுவரை நடந்து முடிந்துள்ள உலகக்கோப்பை போட்டிகளை விட இதுவே மிகச் சிறந்தது என்று கியான்னி இன்ஃபென்டினோ பாராட்டியுள்ளார்.

சர்வதேச கால்பந்து விளை யாட்டுக் குழுக்களின் கூட்டமைப் பின் உறுப்பினர்களின் கருத்தும் இதுவேயாகும்.

அனைவரும் இணைந்து, இது ஒப்பற்ற வலிமை மிக்கதா கவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

கத்தார், போட்டியை கட்டமைத்தவர்கள், பணியாளர் கள் மற்றும் இதன் வெற்றிக்கு உதவிய அனைத்து தரப்பினர் களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று தலைவர் கியானி இன்ஃபென்டினோ, உலக மீடியாக்களிடம் தெரிவித்துள்ளார்.

இதில் பணியாற்ற விரும்பி தன்னார்வத் தொண்டர்கள் நான்கு இலட்சம் பேர் முன் வந்தனர். 20000 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ஹிந்து நாளிதழ் 17.12.2022)

## உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் தொடக்கவிழா!

உலக மக்களின் வேற்றுமை யில் ஒற்றுமை, பரஸ்பர அன்பு, சகிப்புத் தன்மை இதுவே, இப் போட்டி உலகிற்குச் சொல்லிய செய்தியாகும்.

திருமறை அல்ஹுஜுறாத் (அறைகள்) 49வது சூரா -

திருவசனம் 13, மொழியப்பட்டு, விழா தொடங்கியது.

"மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர், மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை). எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணியமானவர்."

கிராஅத் ஓதியவர், ஓர் அற்புத மனிதர். கத்தார் வணிகரும், யூடியூப் (Youtube) புகழ்மிக்கவருமான கணிம் அல்முஃப்தாஹ் (Ghanim Al Muftah) அவர்கள். முதுகெலும்பின் கீழ்ப்பகுதி வளர்ச்சி குன்றிய கால்கள் இல்லாத மாற்றுத் திறனாளி. 20 வயது இளைஞர்!

கத்தார் நாட்டின் இந்த நல்லெண்ணத் தூதுவருடன் விழா மேடையைப் பகிர்ந்து கொண்டவர், அமெரிக்காவைச் சேர்ந்த 'ஆஸ்கர் விருது புகழ்' மோர்கன் ஃபிரிமேன் அவர்கள், கறுப்பர் இனத்தவர்.

"உலகம் பலவாறாகப் பிரிந்து, வேறுபட்டுள்ளது. ஆகவே, பலநாடுகள் மற்றும் பல கலாச்சாரங்கள் வேறுபடும் நிலையில் அவை எங்ஙனம் ஒன்றுபட முடியும்?" என வியப்புற்ற மோர்கன் ஃபிரிமேன் அவர்களுக்கு, கணிம் அல் முஃப்தாஹ் கூறிய பதில்: "இந்த பூமியில் நாம் பல குழுக்களாகவும், கோத்திரங்களாகவும் பிறந்து வளர்ந்தோம். அது நாம் ஒன்றுபடுவதற்காகத்தான்"

மோர்கன் ஃபிரிமேன் மேலும் தொடர்ந்தார் : "மக்களிடையே, மேலும் மேலும் நல்லிணக்கத்தை நிலைப்படுத்துவது எப்படி சாத்தியமாகும்?"

கணிம் அல் முஃப்தாஹ் அவர்களின் பதில் : "சகிப்புத் தன்மையுடனும், பரஸ்பர மரியாதையுடனும், அனைவரும் ஒரு கூரையின்கீழ் சேர்ந்து வாழ முடியும்."

முதல்நாள் தொடங்கிய திறப்பு விழா இஸ்லாமியத் தென்றல் தவழ, சிறப்பாகத் தொடங்கி முடிந்தது.

மூன்று இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு சிறிய இஸ்லாமிய நாடு, எவ்வித இடர்களுமின்றி, அனைத்து மக்களின் பாராட்டுடன், மிகச் சிறப்பாக நடத்தி முடித்து வரலாறு படைத்துள்ளது.

62 போட்டிகள் நடைபெற்றன. 30,27,000 பேர் நேரில் கண்டுகளித்தனர். 2018-ல் நடந்த உலகப் போட்டியைவிட 24,000 பேர் அதிகம்.

## விளையாட்டு அரங்கம்

உலகக்கோப்பை போட்டிக்காக புதிதாகக் கட்டப்பட்ட அரங்கங்கள் எட்டு. அவை :

| பெயர் | | இருக்கை எண்ணிக்கை |
|---|---|---|
| 1. அல்பைய்ட் ஸ்டேடியம் | - | 60,000 |
| 2. கலீஃபா சர்வதேச ஸ்டேடியம் | - | 40,000 |
| 3. அல்துமாமா ஸ்டேடியம் | - | 40,000 |
| 4. அஹமத் பின் அலீ ஸ்டேடியம் | - | 40,000 |
| 5. லுசைல் ஸ்டேடியம் | - | 80,000 |
| 6. எஜுகேஷன் சிட்டி ஸ்டேடியம் | - | 40,000 |
| 7. ஸ்டேடியம் 974 ஸ்டேடியம் | - | 40,000 |
| 8. அல்ஜனூப் ஸ்டேடியம் | - | 40,000 |

திறப்பு விழா அல்பைய்ட் ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியும், முடிவு விழாவும் லுசைல் ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

### ரசிகர் விழா
### (Fan Festival)

விளையாட்டு மைதானங்களுக்கு வெளியே வருகை தந்த ரசிகர்களுக்குரிய உணவகங்கள், விற்பனை நிலையங்கள், சிறுவர்கள் விளையாட்டுத் தளங்கள் போன்றவைசிறப்பாக இயங்கின. ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என ரசிகர்கள் விழாவில் பங்கேற்றோர் 17 இலட்சம் பேர். தினம் சராசரி 80,000 பேர்.

### ஹய்யா அட்டை
### (Hayya Card)

விளையாட்டை வருகை தருபவர்கள், ஹய்யா அட்டை அலுவலகத்திற்கு தங்களைப் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டு, விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டும். இதற்கு தேர்வு செய்யப்படுபவர்கள், உரிய பணத்தை முன்கூட்டியே செலுத்திவிட வேண்டும். அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு, கத்தார் நாட்டிற்கு வந்தவர்கள் 10,90,000 பேர். விண்ணப்பித்தவர்கள் 23,00,000 பேர்.

இவர்கள் கட்டணமின்றி, பேருந்துகளில் பயணம் செய்யலாம்; ஹோட்டல்களில் தங்கலாம்; விளையாட்டு மைதானங்களுக்குள் சென்று விடலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையில்

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **53 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

அமெரிக்கர்களும், அடுத்து இந்தியர்களும், சவூதி அரேபியர்களும் அடங்குவர்.

### கத்தாரின் தனி நடவடிக்கை

கத்தார் இஸ்லாமிய நெறி முறைகளைச் செயல்படுத்தியது. சர்வதேசக் கால்பந்தாட்டக் குழுக்களின் கூட்டமைப்பும், அதனை ஏற்றுக் கொண்டது.

விளையாட்டு மைதானத்திற்குள் மது குடிப்பது, பன்றி இறைச்சி உண்பது, குறைந்த உடை அணிவது, தம்பதிகள் அன்பை வெளிப்படையாகக் காண்பிப்பது ஆகியன தடைசெய்யப்பட்டன. .

ஓரினச் சேர்க்கையாளர்களின் வருகையும் கத்தார் அரசுக்கு ஏற்புடையதல்ல.

இந்த அனாச்சாரங்கள் தடைவிதிக்கப்பட்டதே, பலரின் வெறுப்புக்குக் காரணம் : "கத்தார் இஸ்லாமிய நாடு - பின்தங்கிய நாடு" என்ற கூக்குரலுக்கு கத்தார் நாடு வளைந்து கொடுக்கவில்லை.

### இஸ்லாமிய அறிமுகம்

முஸ்லிமல்லாத பன்னாட்டு மக்களுக்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் உயர்பணி மேற்கொள்ளப்பட்டது போற்றுதற்குரியது.

நாட்டின் பல்வேறு இடங்களில், அங்கே வருபவர்களின் கவனத்தை ஈர்க்குமாறு திருமறை வசனங்கள், நபிமொழிகள் வரையப்பட்ட பெரிய நெகிழ் பலகைகள் (Flex Board) காட்சிக்கு வைக்கப்பட்டன.

**அவற்றில் எழுதப்பட்ட சில செய்திகள் :**

"ஒவ்வொரு நற்செயலும் தர்மமே" (Every good deed is a charity)

"பிறரிடம் இரக்கம் காட்டாதவர் இரக்கம் காட்டப்படமாட்டார்" (He who is not merciful to others, will not be treated mercifully)

"விருப்பக் கொடை(ஸதகா)யாக ஒரு பாதி பேரீத்தம் பழத்தை வழங்கியேனும் நரக நெருப்பிலிருந்து தற்காத்துக் கொள்க" (Guard yourself from the Hellfire, even with half of a date in charity)

"அதுவும் இல்லையென்றால், மென்மையான ஒரு வார்த்தையாவது கூறுக" (If one cannot find it, then with a kindword)

(தொடரும்)

---

**ஸலவாத்தின் சிறப்பு!**

"யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்கிறாரோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை அருள் புரிகின்றான். அவருடைய பத்து தவறுகளை அழிக்கின்றான். பத்து உயர்வுகள் அவருக்கு அளிக்கப்படுகின்றன" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : நஸாயீ)

சென்ற இதழ் தொடர்ச்சி...

# இஸ்லாம் கூறும் கல்வி

பேராசிரியர் **வி.ஏ.எம்.யாஸீன்,** எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

மேலும், கல்வி அறிவுடையவர் யார் என்ற விளக்கத்தையும் அல்லாஹ் திருமறையில் கூறியிருக்கிறான்.

**"[இந்தக் குர்ஆனைக் கொண்டு] நல்லுபதேசம் பெறுபவர்கள் எல்லாம் [கல்வி] அறிவுடையவர்தாம்"**

- அல்குர்ஆன் (39 : 9)

எனவே திருமறையை நாம் அனுதினமும் ஓதி வருவதனாலும் திருமறை வசனங்களின் விளக்கங்களை உலமாபெருமக் களிடம் கேட்டுத் தெளிவு பெறு வதாலும் திருமறை கூறும் நெறிமுறைகளை வாழ்வில் கடைபிடித்து வருவதாலும் நாமும் சிறந்த கல்வியாளராகத் திகழ முடியும் என்பதை இந்தத் திருமறை வசனம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

மேலும், சமுதாயத்தினர் இறையில்லங்களில் ஒன்று கூடித் திருமறையை ஓதி வருவதாலும், அங்கு மற்றவர்களுக்குத் திருமறையை கற்றுத் தருவ தாலும் அவர்கள் மீது அமைதி இறங்கி இறையருள் அவர்களைச் சூழ்ந்து கொள்கிறது என்றும், வானவர்களும் அவர்களை சூழ்ந்து கொள்கின்றனர் என்றும், இறைவன் அவர்களைப் பெருமையுடன் நினைவு கூறுகிறான் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"மக்கள் இறையில்லங்களில் ஒன்றில் ஒன்றுகூடி, அல்லாஹ்வின் வேதத்தை ஓதிக் கொண்டும், அதை ஒருவருக்கொருவர் படித்துக் கொடுத்துக் கொண்டும் இருந்தால், அவர்கள் மீது அமைதி இறங்குகிறது. அவர்களை இறையருள் போர்த்திக் கொள்கிறது. அவர்களை வானவர்கள் சூழ்ந்து கொள்கின்றனர். மேலும் இறைவன், அவர்களைக் குறித்துத் தம்மிடம் இருப்போரிடம் (பெருமையுடன்) நினைவு கூறுகிறான்".

(ஸஹீஹ் முஸ்லிம் : 5231)

இதை ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆகவே இறையில்லங்களில் திருமறையைக் கற்பித்தும் உலமா பெருமக்களைக் கொண்டு சன்மார்க்க அறிவினை போதித்தும் வந்தால் சமுதாயத்தில் நல்லதொரு மாபெரும் மாற்றம் ஏற்படும் என்பதில் எந்த விதமான சந்தேகங்களும் கிடையாது.

"அல்லாஹ் ஒருவருக்கு நல்லதை நாடிவிட்டால் அவரை மார்க்கக் கல்வியில் தேர்ச்சி பெற வைக்கிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**"அல்லாஹ் எவருக்கு நன்மையை நாடுகின்றானோ**

அவரை மார்க்கத்தில் [விளக்க முடைய] அறிஞராக்குகின்றான்''.

அறிவிப்பாளர் : ஹள்ரத் முஆவியா (ரளி) அவர்கள் (ஸஹீஹ் புகாரி : 7312)

ஆகவே நாம் நம்முடைய குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே மார்க்கக் கல்வியைப் பயிற்றுவிக்க வேண்டும். நாமும் குர்ஆனின் குரல் போன்ற மார்க்க ரீதியான பத்திரிகைகளையும், நூற்களையும் படித்து மார்க்க விஷயங்களில் தெளிவு பெற வேண்டும். உலமா பெருமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து மார்க்க விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது அல்லாஹ் நாடுகின்ற நன்மை நமக்கு வந்து சேரும்.

வேத ஞானத்தை நமக்குக் கற்பிக்கவும், நாம் அறியாதவற்றையும் நமக்குக் கற்றுக் கொடுக்கவும், நம்மைப் பரிசுத்தமாக்கி வைக்கவும் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை ஓர் அருட் கொடையாக இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்தான்.

"அவ்வாறே, உங்களுக்கு நம்முடைய வசனங்களை ஓதிக் காண்பித்து உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், உங்களுக்கு வேதத்தையும் [அவற்றிலுள்ள] ஞானத்தையும் கற்பித்து, நீங்கள் அறியாதவற்றையும் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு தூதரை உங்களிலிருந்தே நாம் அனுப்பி வைத்தோம்''.

- அல்குர்ஆன் (2 : 151)

நபி (ஸல்) அவர்கள்தான் நமக்குத் திருமறையை அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்கள் மூலம் தான் நாம் அல்லாஹ்வை அறிந்து கொண்டோம். இறைவன் விரும்பும் பண்புகள் என்ன என்பதையும் நாம் நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை நெறிமுறைகளிலிருந்து தெரிந்து கொண்டோம். ஆகவே, திருமறையிலிருந்து நாம் பெறும் வேத ஞானமும், நபி (ஸல்) அவர்களிடமிருந்து நாம் பெறும் கல்வியும் தான் இந்த உலகத்தில் நிகரில்லாத ஞானமும், கல்வியும் ஆகும்.

ஹள்ரத் தாவூத் (அலை) அவர்களுக்கும், ஹள்ரத் ஸுலைமான் (அலை) அவர்களுக்கும் இம்மை மறுமையில் பயனளிக்கக் கூடிய கல்வியை வழங்கியதாக அல்லாஹ் திருமறையில் குறிப்பிடுகின்றான்.

"தாவூதுக்கும், ஸுலைமானுக்கும் நிச்சயமாக நாம் [இம்மை மறுமையில் பயனளிக்கக் கூடிய] கல்வியைக் கொடுத்தோம்''.

- அல்குர்ஆன் (27 : 15)

ஆகவே நாமும் இம்மை மறுமையில் பயனளிக்கக் கூடிய கல்வியை இறைவனிடம் வேண்டிப் பெற்று இம்மையிலும், மறுமையிலும் நற்பலன்களை அடைவோமாக.

# வியக்க வைக்கும் விண்ணுலக யாத்திரை!

மவ்லானா பி. முஹம்மது சுல்தான் பாஜில் தேவ்பந்தி

"நபியே! கூறுங்கள்; "வானங்களிலும், புவியிலும் என்ன இருக்கிறது" என ஆராயுங்கள். சான்றுகள், எச்சரிக்கைகள் எதுவும் விசுவாசம் கொள்ளாத கூட்டத்தாருக்கு பலனளிக்காது.

- அல்குர்ஆன்
(சூரா யூனுஸ் -101)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்களது 52வது வயதில் ஒரு நாள் காலை, கவலை தோய்ந்த முகத்துடன் கஃபாவின் எதிரே அமர்ந்திருக்கிறார்கள். அவ்வழியாக வந்த அபூஜஹல் "என்ன முஹம்மதே! கவலை தோய்ந்த முகத்தில்?" என்று கேட்கிறான். "இன்றிரவு பின்வேளையில் பைத்துல் முகத்தஸ் சென்று வந்தேன். விண்ணுலகப் பயணம் சென்று பார்த்து வந்தேன்" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். "விடிகாலையிலேயே வந்து விட்டீரா?" என்று திரும்பவும் கேட்க, "ஆம்" என்றார்கள். "இதை மக்கள் நம்பினால் நானும் நம்பத் தயார்" என்றான் அபூஜஹல்.

இதனிடையே இச்செய்தி கேள்விப்பட்டு மக்கள் அங்கு கூடி விட்டனர். சிலர் கைகொட்டிச் சிரித்தனர். சிலர் "இப்படியும் ஒரு பைத்தியமா?" என்றெண்ணி தலையில் கைவைத்துக் கொண்டனர். இறைவனின் சக்தி மீது நம்பிக்கையில்லா அம்மக்கள். குறைந்தபட்சம் விரைவுப் பேருந்து கூட இல்லாத அக்கால கட்டத்தில் இவ்வாறு வியந்து கூறியதில் ஆச்சரியமில்லை.

பன்முறை பைத்துல் முகத்தஸ் சென்றிருந்த அக்கூட்டத்தில் ஒருவர் அதைப்பற்றி விளாவாரியாக குறிப்புகள் கேட்கிறார். நபி (ஸல்) அவர்கள் பைத்துல் முகத்தஸை பார்த்ததே இல்லை. ஆனாலும் பார்த்து பழக்கப்பட்டது போல அதன் சுவர் வடிவங்களை துல்லியமாக எடுத்துரைக்கிறார்கள். "ஒரு வாரமாக எனது ஒட்டகங்கள் சில காணப்படவில்லை. நீர் மிஃராஜ் போகும் வழியில் கண்டீரா?" என்று கிண்டலடிக்கிறார் ஒருவர். "ஆம்! போகும் வழியில் இன்ன இடத்தில் இன்ன

நிறமுள்ள ஒட்டகங்களைக் கண்டேன்" என நபி (ஸல்) அவர்கள் கூற, அவர் ஓடிச் சென்று அவ்வொட்டகங்களை ஓட்டி வருகிறார். இவைதான் அன்று அவர்களுக்குச் சான்றுகள்.

புவியைவிட பல்லாயிரக் கணக்கான மடங்குகள் பெரிதாக உள்ள சூரியன் போன்ற நட்சத்திரங்களும், விண்ணில் மிதக்கும் கற்களும், சந்திரன் போன்ற - இன்னும் சிறிய விண் மீன்களும் அவற்றிற்கென்று சுற்றுப்பாதைகள் அமைக்கப் பெற்று, அவற்றினிடையே யாதொரு மோதலுமின்றி விண்ணில் உலா வந்து கொண்டிருக்கும் மாபெரும் அண்ட சராசரம் தான் அந்தரத்தில் தொங்கும் நமது புவியைச் சுற்றியுள்ள வானம்!

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய ஏழுவித நட்சத்திர கிரகங்கள். அவற்றில் ஒவ்வொன்றின் ஓடு பாதை கோளத்தின் கொள்ளளவு மைல்கள் பின்வருமாறு முறையே குறிக்கப்படுகின்றன: 4130994, 1164246, 60997296, 11385, 64895118, 1065222, 354198. இதுவன்னியில் இலட்சோப லட்சம் எரிநட்சத்திரங்களும், எரிகொல்லி நட்சத்திரங்களும், அழகு நட்சத்திரங்களும், துருவ நட்சத்திரங்களும் பதிக்கப் பட்டும், சுற்றிக் கொண்டும், நீளவாக்கில் ஓடிக் கொண்டும் உள்ளன. விண்ணில் கடல், திடல், நீர், நெருப்பு, மரம் செடி கொடிகள், உயிரினங்களும் உள்ளன.
(பார்க்க: அஜாயிபுல் மக்லூகாத் பக்: 30-40)

65 மில்லியன் வருடங்களுக்கு முன்பு மாபெரும் விண் தீ கற்கள் சில புவியைத் தாக்கியதால் பற்பல உயிரினங்கள் அதன் உற்பத்திக்கு வேண்டிய அணுக்களே இல்லாமல் அற்றுப் போயின என்றும், 2028-ல் இது போன்றதொரு பேரழிவிற்கு புவி காத்திருக்கிறது எனவும் வானிலை ஆய்வாளர்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அளவிட முடியாத இப்பரந்த விண்ணில், கால் வைக்கக்கூட, எங்கும் இடமில்லாத அளவிற்கு கோடானு கோடி வானவர்கள் படைக்கப்பட்டு அவர்கள் நின்ற நிலையிலும், தாழ் பணிந்த நிலையிலும், சாஷ்டாங்க நிலையிலும் அல்லாஹ்வை துதித்துக் கொண்டிருக்கின்றனர். ஏழு வானம், ஏழு பெரு நட்சத்திரங்கள், அர்ஷு, குர்ஸி, ஸித்ரத்துல் முன்தஹா, சொர்க்கம், நரகம் அனைத்தும் அடங்கிய அண்டம் தான் வானம்! மனிதனின் அட்டூழியங்கள் அதிகமாகும் போது, வானங்கள் பூமி அனைத்தும் இடிக்கப்பட்டு தவிடு பொடியாக்கி தட்டு போல் மாற்றப்பட்டு எல்லா மக்களும் அல்லாஹ்வின் முன் ஆஜராகி கைகட்டி நிற்பார்கள். (குர்ஆன் - 48 : 14) இவ்வாறு விண்ணின்

இயல்புகளை திருகுர்ஆனும், திரு நபி (ஸல்) அவர்களும் விளக்குகிறார்கள்.

விண்ணுக்கும், புவிக்கும் தோன்றும் ஆபத்துகளை தவிர்த்து மனித இனம் சுபிட்சமாக வாழ வேண்டுமானால், மலை, இரும்பு, நீர், நெருப்புக்களைக் காட்டிலும் சக்தி வாய்ந்த "அன்பு - ஈவு - இரக்கம்" எனும் "தர்மப்பண்பு" இடிதாங்கியாக நிற்கும் என இஸ்லாம் அற வழிகாட்டுகிறது.

விண்பயணம் மேற்கொண்ட விஞ்ஞானிகள் கோள்களைக் கடக்கும் போதும், நிலவில் இறங்கிய போதும் இனம் புரியாத ஓசைகளையும், பாங்கொலிகளையும் செவியேற்று, நீர்த்தேக்கங்கள் மற்றும் மனித காலடிகளைக் கண்டவுடன் மனித ஆய்வின் சக்திக்கும் அப்பாற்பட்ட மாபெரும் சக்தி ஒன்று இப்பிரபஞ்சத்தை ஆட்டிப்படைக்கிறது என்பதை உணர்ந்தனர் என்பது சமீபகால சரித்திரம். இவ்வாய்விற்கும், பயணத்திற்கும் மக்கள் மிகுந்த மதிப்பளித்து வரவேற்றனர். அவர்கள் சொன்னதை ஒப்புக் கொண்டனர்.

விண்ணை நோக்கி செலுத்தப்படும் ராக்கெட் போன்ற சாதனங்கள் எதுவும் இல்லாத பண்டைய கால கி.மு.1000 - ஆயிரங்களில் "இஷ்ராகிய்யூன்" என்றழைக்கப்படும் மெஞ்ஞான முனிவர்கள் தங்களது மன சக்தியால் புவியிலிருந்து கொண்டே விண்ணை ஆய்வு செய்து அண்ட சராசரங்களை விளக்கினர். திலேஜ் (கி.மு. 700) அபலாதூன் (கி.மு.500). சகராத் - பகராத் (கி.மு.400) போன்றவர்கள் சிறு சிறு தொலைநோக்குக் கருவிகள் செய்து அதன் மூலம் விண்ணுலகை ஆராய்ந்தனர்.

காற்றோடும், ஒளியோடும் கலந்து செல்லும் சக்தி படைத்த ஜின் இனத்தவர்களைக் கொண்டு அவர்களை வசப்படுத்தும் ஜோஸியர்கள் மேலுலகக் கிரகங்களில் அன்றாடம் நடைபெறும் செய்திகளை வசீகரித்து வானங்களின் நிலைமைகளை வெளிப்படுத்தினர். இவற்றையும் மக்கள் நம்பினார்கள்.

"தொலைநோக்குக் கருவிகளின் கண்களுக்கு அதன் வரையறைக்குட்பட்டது மட்டுமே புலப்படும். ஆனால் தூய்மையான மனிதனின் யுகக் கண்களுக்கும் அகக்கண்களுக்கும் அண்டம் முழுவதையும் அறியும் சக்தியுண்டு" என இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

மக்களின் பணத்தில் பல நூறு மில்லியன்களை அள்ளிக் கொட்டி ராக்கெட்டுகள் மூலம் கண்டது சொற்பமே! ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "புராக்" எனும் தெய்வீக வாகனத்தில் ஹள்ரத் ஜிப்ரயீல் - ஹள்ரத் மீக்காயீல் இருவரின்

பக்க பலத்துடன் விண்ணின் அண்ட சராசரங்களை நேரில் கண்டு அனுபவித்து வந்து சொன்னது ஏராளம்! ஏராளம்!! அபூஜஹல், அபூ சுப்யான்கள் அன்று அதை நம்பவில்லை. இன்றோ எல்லாருமே அப்துல் கலாம்களாகிட விரும்புகின்றனர். விண் துறை ஆய்வு இந்த அளவு முன்னேறி விட்டது. அண்ண லாரவர்கள் தங்களின் திருமேனி யுடன் ஆன்மிக விண்பயணம் மேற்கொண்டதை இன்று மறுப்பார் யாருமில்லை!

விண்ணை ஆராயும் கணினி களின் முடிவு ஒரு காலத்தில் சூரியன் சுற்றுகிறது என்றார் கள். இன்று கால மாறுதலுக்குக் காரணம் "புவிச் சுற்று" என்கின் றனர். விண்ணில் நீர்வளம், உயிரினம் இல்லை என்றவர் கள் இன்று அவை இருக் கின்றன என்கின்றனர்.

ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விண் பயணச் செய்திகள் அவ்வாறானதல்ல. இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்.

"திருமக்கா - மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து ஜெருஸலம் சுற்றுப்புறம் பரிசுத்தமான மஸ்ஜித் அக்ஸாவரை தனது அடியானை [முஹம்மதை] இரவில் விண் பயணம் மேற் கொள்ள வைத்த அந்த அல்லாஹ் வுக்கே துதிகள் அனைத்தும், விண்ணில் நடக்கும் அற்புதங் களை அவருக்கு நாம் காண்பித்துக் கொடுக்கவே [இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது]"

(சூரா பனூஇஸ்ராயீல் -1)

## மிஃராஜ் பயணச் செய்திகள்!

1) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணம் மேற்கொள்வதற்கு சற்று முன்பு கஃபாவின் அருகில் வைத்து ஹள்ரத் ஜிப்ரயீல், ஹள்ரத் மீக்காயீல் மற்றும் வானவர்கள் சிலரால் நெஞ்சு பிளக்கப்பட்டு, இருதய பாகங்கள் ஜம் ஜம் தண்ணீரால் கழுவப்பட்டு, பிறகு, "ஈமான் ஹிக்மத்" எனும் நம்பிக்கை ஞானங் களை இருதயத்தில் நிரப்பி நெஞ்சு மூடப்பட்டது.

(2) விண் பயணம் சென்ற அண்ணல் நபி (ஸல்) அவர் கள் 37 ஆண்டு கால பயணக் காட்சிகளைக் கண்டு களித்து திரும்பினார்கள்.

3) இதற்காக ஆன நேரம், உம்முஹானி என்ற பெண் மணியின் வீட்டிலிருந்து பின்னிரவில் கதவைத் திறந்து கொண்டு வெளி யேறியவர்கள் கதவின் தாழ்ப்பாள் ஆடி நிற்கு முன் திரும்பி விட்டார்கள்.

4) பல நூறு மைல்களுக்கப்பால் பைத்துல் முகத்தஸ் கபரஸ் தானில் சுமார் 3000 ஆண்டு களுக்கு முன்பு, கொடியவன்

# இதோ ஒரு நற்செய்தி!

"தன்னுடைய (நன்மை, தீமை) பதிவேட்டில் அதிகமான பாவ மன்னிப்புத் தேடுதலைப் பெற்றுக் கொண்டவருக்கு சுபசோபனங்கள் உண்டாவதாக" என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் அப்துல்லாஹிப்னு பிஸ்ரு (ரளி) அவர்கள் (நூல் : இப்னுமாஜா)


Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் Ist 24 மணி நேர சிமெண்ட் கடை

A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260 armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

பிர்அவ்னினால் கொடூர மாகக் கொலை செய்யப் பட்டு அடக்கம்செய்யப்பட்ட "மாஷிதா" என்ற பெண்மணி யின் அடக்கஸ்தலத்திலிருந்து வெளியான சொர்க்கத்து நறுமணத்தை மிஃராஜ் செல்லும் வழியில் சுகித்துச் சென்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

5) வாழையடி வாழையாக இரவில் இழுத்து மூடப்பட்டு வந்த பைத்துல் முகத்தஸ் மஸ்ஜிதின் தலைவாயில் கதவுகள் அன்றைய தினம் ஊரே திரண்டு வந்தும் கூட இழுத்து மூட முடியாமல் போனது.

6) உலகத்தின் ஆன்மிக ஆளுநர் களான இலட்சோபலட்சம் நபி மார்களும் பைத்துல் முகத்த ஸில் திரண்டிருந்தனர். அண்ணலாரவர்கள் அவர் களுக்குத் தலைமையேற்று அங்கு தொழுகை நடத்தினார்கள்.

7) ஹள்ரத் மூஸா (அலை) அவர் களுக்கு தெளராத் வழங்கப் பட்ட தூர்சீனா மலையிலும், ஹள்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் பிறந்த பெத்லஹேம் என்ற இடத்திலும் அண்ண லாரவர்கள் தொழுதார்கள்.

8) முதல்வானில்மனிதத் தந்தை ஹள்ரத் ஆதம் நபியையும், இரண்டாம் வானில் ஹள்ரத் ஈஸா நபியையும், மூன்றாம் வானில் கற்புக்கரசர் ஹள்ரத் யூசுப் நபியையும், நான்காம் வானில் நட்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய ஹள்ரத் ஹாரூன் நபியையும், ஐந்தாம் வானில் தர்க்க சாஸ்திரத்தின் ஆசான் ஹள்ரத் இத்ரீஸ் நபியை யும், ஆறாவதுவானில்நானே கடவுள் எனக்கூறிய தலைக் கனம் பிடித்த பிர்அவ்னின் கொட்டத்தை அடக்கிய ஹள்ரத் மூஸா நபியையும், ஏழாம் வானில் சிலைகள் கடவுளல்ல என்பதை தக்க சான்றுகளுடன் நிரூபித்து நம்ரூதின் மூக்குடைத்த ஹள்ரத் இப்றாஹீம் நபியை யும் சந்தித்து பேச்சு நடத்தி னார்கள். இவர்களெல்லாம் பல்லாயிரம் மலக்குகளுடன் இறை வணக்கம் செய்து கொண்டிருப்பதை அண்ணலாரவர்கள் கண்டார்கள்.

9) "கஃபா ஆலயத்தின் நேர் மேல்புறத்தில் ஏழாவது வானில் பைத்துல் மஃமூர் உள்ளது. அதனுள் ஒவ்வொரு நாளும் 70,000 மலக்குகள் நுழைகின்றனர். வெளியில் வருவதில்லை" என்ற காட்சியைக் கண்டார்கள்.

10) ஸித்ரத்துல் முன்தஹா எனும் இடத்தில் பற்பல இன்பமான நீரோடைகள் ஓடுவதையும், ஹவ்லுல் கவ்தர் எனும் தடா

கமும், அதில் அள்ளிக் குடிப் பதற்கு தங்கம் வெள்ளியி னால்உண்டானகோப்பைகள் (கிளாஸ்கள்) நிறைந்துள்ள தைக் கண்டார்கள்.

11) சொர்க்கத்து "ஹுர்" கன்னி களைக் கண்டார்கள். அவர் களின் உடல்நலமும், அங்கங்களின் வனப்பும், அலங்காரமும் ஈர்க்கும் வண்ணம் இருந்தன.

12) சொர்க்கத்தை சுற்றிப் பார்க்கச் சென்ற அண்ணலா ரவர்கள் அதன் வாசலில் நுழையும் முன், அங்கு ஹள்ரத் பிலால் அவர்கள் அண்ணலாரின் வாக னத்தின் கடிவாளம் பிடித்து அழைத்துச் செல்லும் பாக்கியம் பெற்றிருப்பதைக் கண்டார்கள். (அப்பொழுது ஹள்ரத் பிலால் அவர்கள் மரணம் எய்தவில்லை)

13) சொர்க்கத்தில் ரத்தினக் கற் களால் அழகாக கட்டப்பட்ட மாளிகை ஒன்றைக் கண் ணுற்ற அண்ணலாரவர்கள் அதன் உள்ளே நுழைந்துப் பார்க்க எத்தனித்தார்கள். "இது உமர்கத்தாபுக்கு சொந்த மான வீடு" எனக்கூறப்பட்ட வுடன் திகைத்து நின்று விட் டார்கள். (ஹள்ரத் உமரும் கூட மிஃராஜின் போது மரணித்திருக்கவில்லை)

14) சொர்க்கத்தில் மனித கற் பனைக்கே எட்டாத சுகங்கள் இருப்பதைக் கண்ட அண்ண லார் அவ்வழியே வந்த ஓர் அழகிய பெண்ணைப் பார்த்து, நீ யார்? என வினவி னார்கள். "நான் ஜைதுப்னு ஹாரிஸாவுக்குரியவள்" என்றார் அப்பெண். அவளைச் சுற்றி பாலாறும், தேனாறும் ஓடுகிறது.

15) பிறகு நபி (ஸல்) அவர் களுக்கு பிறகு நரகத்தைக் காண்பித்துக் கொடுக்கப் பட்டது. தொழுகையை கடைபிடிக்காதவர்களின் தலைகள் நரக நெருப்புக் கற்களால் நசுக்கப்பட்டு கொண்டிருப்பதையும், தர்மஞ்செய்யாத செல்வந்தர் கள் கள்ளிப்பாலையும், நரக அசுத்தங்களையும் தின்று கொண்டிருப்பதையும், மனைவிக்கு துரோகஞ் செய்து விபச்சாரம் செய்த கணவர்கள் நாற்றமெடுத்த பச்சை இறைச்சியை தின்று கொண்டிருப்பதையும், திருடர்கள் அவர்களின் உடல்கள் நரக முற்களில் சிக்கி சிக்கி, கீறி கீறி நடந்து போவதையும், மக்களின் பொறுப்புகளை நிறை வேற்றாத அரசு அதிகாரிகள், பெரும் பெரும் பொதிகளை தூக்கச் சொல்லி தூக்க முடி யாமல் நெருப்புத் தடிகளால் அடிவாங்குவதையும், பொய் பேச்சாளர்கள் தங்களது

உதடுகளும், நாவுகளும் நெருப்புக் கத்திரிகளால் துண்டிக்கப்படுவதையும், பேசக் கூடாத பேச்சுக்களைப் பேசியவர்கள் நெருப்புக்கல்லி லிருந்து துளை போட்டு வெளிவருவதும், பிறகு அதிலேயே நுழையும்படி கட்டளையிடப்பட்டு முடியா மல் தடுமாறுவதையும், வட்டி தின்றவர்களின் வயிற்றுக் குள் பாம்புகள் கொத்திக் கொண்டிருப்பதையும், விபச் சாரிகள் தங்களது முலைகள் நெருப்புச் சங்கிலியால் கோர்த்து தொங்க விடப்பட்டு - மர்ம ஸ்தானங்கள் சீழ் வடிந்து கொண்டிருப்பதை யும், புறம் பேசிகள் ஒருவருக் கொருவர் தங்களது உடல் இறைச்சிகளை கீறிக்கிழித்துத் தின்று கொண்டிருப்பதையும் இன்னும் பற்பல கொடியவர் களின் வேதனைகளையும் நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள்.

16) "நரகத்தில் ஆக சிறிய வேதனை, எனது பெரிய தந்தை அபூதாலிபுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு நெருப்புக் காலணி கள் அணிவிக்கப்பட்டிருக் கிறார். அதன் உஷ்ணத்தி னால் அவரது மூளை கொதித்து மூக்கு வழியாக வடிந்து கொண்டிருக்கிறது"

17) "நான் பிறந்து விட்ட செய்தியை அபூலஹபிடம் ஓடி வந்து சொன்ன மாத்திரத் தில் செய்தி சொன்ன அவரது அடிமை "துவைபா" என்ற பெண்ணை மகிழ்ச்சியில் உரிமை விட்டு விட்டார். இதற்கு பிரதிபலனாக நரகில் கிடக்கும் அபூலஹப் திங்கட் கிழமைதோறும் கட்டை விரல் வழியாக தண்ணீர் புகட்டப்படுகிறார்."

18) "நரகில் வெந்து கரிக் கட்டைகளாக காட்சி தரும் எனது உம்மத்தில் ஒரு கூட்டம் (பாவிகள்) என்னைக் கண்டதும் கதறுகின்றனர். அப்பொழுது ஒரு வானவர் அரை வாளித் தண்ணீர் கொண்டு வருகிறார். அவர் கள் மீது வீசித் தெளிக்கிறார். உடன் அவர்கள் சொர்க்க வாசிகளாக காட்சியளிக்கின் றனர். "இது என்ன தண்ணீர்?" என்று அவ்வானவரிடம் கேட்டேன்". இவர்கள் உலகத் திலிருந்த போது தங்கள் பாவங்களை நினைத்து கண்ணீர் விட்டனர். அக் கண்ணீர் சொட்டுகள் தான் இந்தத் தண்ணீர்" என்றார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறு ஆன்மிகவாதி களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் படிப்பினைத் தரும் பல்லாயிரம் வானியல் உண்மைகளைக் கண் கூடாக கண்டு வந்தார்கள் எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள். இதுவே மிஃராஜ் பயணம்.

# AL-BASHARATH
## HAJ & UMRAH SERVICE

## MARCH MONTH UMRAH-2023

**First 5 DAYS Ramalan in MAKKAH ( 23, 24, 25, 26, 27 )**

**Travel Date :** 13/03/2023
**Return Date :** 27/03/2023

**Rs :99,000/-**

| HOLY RAMALAN UMRAH TRIP-2023 | | | | | |
|---|---|---|---|---|---|
| Package type | Deperture Date | Day | Return Date | Day | Period |
| Full Ramalan | 23-03-2023 | Thursday | 23-04-2023 | Sunday | 30 days |
| First 15 Days | 23-03-2023 | Thursday | 06-04-2023 | Thursday | 15 days |
| Last 15 Days | 06-03-2023 | Thursday | 23-04-2023 | Sunday | 15 days |

| Full Ramalan | First 15 Days | Last 15 Days |
|---|---|---|
| 180,000 | 125,000 | 150,000 |

**Holy HAJJ Trip - 2023 Booking On Going. Rs : 575,000/-**

Al basharath lalpet

**Alhaj O.M. Mohamed Suhaibu**

Al basharath Tours & Travels

LALPET OFFICE : 1, Quaid-E-Millath Street (opp: Mubarack Masjid), Lalpet - 608 303
CHENNAI OFFICE : 37/77 Angappan Naicken Street, Mannady Chennai - 600 001

**9994254304, 9566992919**

# நுகர்ந்தவை

நூல் : புகழப்பட்டவர்
ஆசிரியர் : அத்தாவுல்லாஹ்
பக்கங்கள் : 1008;
விலை : ரூ.1,000/-
வெளியீடு : ஜாரியா பதிப்பகம்,
39, பள்ளிவாசல் தெரு,
இடலாக்குடி, கோட்டாறு,
நாகர்கோவில் – 629 002.
செல் : 96295 73938

இவ்வுலகத் தலைவர்கள் பலர்; மரணத்திற்குப் பின் முற்றிலுமாக மறக்கப்பட்டு விட்டனர். ஒரு சிலர் எப்பொழுதாவது ஏதோ சிலரால் நினைவு கொள்ளப்படுகின்றனர். ஆனால், உலகில் வாழும் அனைத்து முஸ்லிம்களாலும் எல்லா நேரங்களிலும் நினைவில் நிறுத்தப்படுபவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே!

நபி (ஸல்) அவர்களைப் பற்றி உலக மொழிகளில் பல்லாயிரக் கணக்கான நூற்கள் வெளி வந்திருக்கின்றன; வந்து கொண்டிருக்கின்றன. நபி (ஸல்) அவர்களைப் பற்றி எழுதும் எழுத்தாளர்கள் எல்லோருக்கும் கரு தருகிறார்கள். நபி (ஸல்) அவர்களின் வாழ்வும், வாக்கும் எழுத எழுத, பேசப் பேசப் பெருகிக் கொண்டே போகின்றன.

டாக்டர் முஹம்மது ஹுஸைன் ஹைகல் எழுதிய நூலை மொழியாக்கம் செய்து தந்துள்ளார் நூலாசிரியர். "மொழியாக்கம் என்பது தங்கத்தை பித்தளையாக்கும் அரிய ரசவாதக் கலை" என்பார். ஆனால், அத்தாவுல்லாஹ் தங்கத்தை மெருகூட்டி நமக்குத் தந்துள்ளார். மொழிபெயர்ப்பு நூல் என்று தெரியாத அளவுக்கு இந் நூலைஎழுதி நமக்குத் தந்துள்ளார்.

கண்மணி நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை புதிய கோணத்தில் சொல்கிறது இந்நூல்! தேர்ந்தெடுத்த சொற்களால்வாசிப்போர் உள்ளங்களைக் கவரும் நடையில், படிப்போரை பிரமிக்க வைக்கும் வகையில் நூலைப் படைத்துள்ளார் நூலாசிரியர்!

கவிவேந்தர் மு.மேத்தா இந்நூலைப் பற்றி இப்படிச் சொல்கிறார் : –

அத்தாவுல்லா –
இதயமெல்லாம் வீற்றிருக்கும்
ஈமான் – இவர்
இல்லமெல்லாம் செந்தமிழைச்
சேர்த்து வைத்த சீமான்!
கோட்டாறு கொடுத்த
கொடை – இந்த
பாட்டாறு!
'புகழப்பட்டவர்' எனும் இந்தப்
புத்தகத்தைப் பாராட்டப்
போதாது போதாது
பக்கங்கள் பல நூறு!

* * *

ஆய்வு : பாவா

# நயவஞ்சகர்கள்

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

إِنَّ الْمُنَافِقِينَ فِي الدَّرْكِ الْأَسْفَلِ مِنَ النَّارِ وَلَنْ تَجِدَ لَهُمْ نَصِيرًا

"நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தின் கீழ்ப்பாகத்தில் தான் இருப்பார்கள். [நபியே! அங்கு] அவர்களுக்கு உதவி செய்பவர் எவரையும் ஒரு போதும் நீர் காணமாட்டீர்" - அல்குர்ஆன் (4 :145)

அண்ணல் நபி (ஸல்) அவர்களது காலத்தில் மதீனா புறநகர்ப் பகுதியில் யூதர்கள் வசித்து வந்தனர். அவர்களுக்கு முஸ்லிம்கள் பற்றிய தகவல்களை அவ்வப்போது தெரிவிப்பதும், அவர்களுடன் கள்ளத்தொடர்பு வைத்திருப்பதும் சிலரது வாடிக்கையாக இருந்தது. இவர்கள் மதீனாவில் முஸ்லிம்களுடன் முஸ்லிம்களாக வாழ்ந்து வந்த அன்றைய காலத்தின் (முனாஃபிக் எனும்) நயவஞ்சகர்கள் ஆவார்கள்.

அல்லாஹ் அல்குர்ஆனின் பகரா அத்தியாயத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள், இறைமறுப்பாளர்கள், நயவஞ்சகர்கள் ஆகிய மூன்று பிரிவினரான மனிதர்கள் இருப்பதை குறிப்பிடுகிறான். அவர்களில் முஸ்லிம்களைப் பற்றி 4 வசனங்களிலும், இறைமறுப்பாளர்களைப் பற்றி 2 வசனங்களிலும், நயவஞ்சகர்களைப் பற்றி 13 வசனங்களிலும் சுட்டிக் காட்டுகின்றான். நயவஞ்சகர்கள் இறைமறுப்பாளர்களை விடவும் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் ஆபத்தானவர்கள், எதிரானவர்கள் என்பதை அல்லாஹ் இதன் மூலம் தெளிவுபடுத்துகிறான்.

அல்லாஹ் அல்குர்ஆனில் பல இடங்களில் இந்த நயவஞ்சகர்களின் முகத்திரையைக் கிழித்து அவர்களை தோலுரித்துக் காட்டுவதன் மூலம் அவர்களது பண்பு மற்றும் குணாதிசயங்கள் முஸ்லிம்களிடம் வந்து விடக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றான்.

இமாம் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "நிஃபாக்" என்ற அரபுப் பதத்திற் குரிய பொருள் ஏமாற்றுதல் மற் றும் சதிசெய்தல் மேலும் நன்மைகளை வெளிக்காட்டி, நன்மைக்கு எதிரானதை மறைத்தல்".

(நூல் : ஜாமிஉல் உலூம்)

எனவே, "நிஃபாக்" என்ற நயவஞ்சகத்திற்கு இவ்வாறு வரைவிலக்கணம் வழங்கலாம். இறைநம்பிக்கையை (ஈமான்) நாவின் மூலமாக வெளிப்படுத்துதல், நிராகரிப்பு (குப்ர்) உள்ளத்தில் மறைத்தல்.

## அடையாளக் குணங்கள்

**அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "பேசினால் பொய் சொல்வது, ஒப்பந்தம் செய்து கொண்டால் நம்பிக்கை மோசடி செய்வது, வாக்களித்தால் மாறு செய்வது, வழக்காடினால் நேர்மை தவறுவது ஆகிய இந்த நான்கு குணங்கள் எவரிடம் குடி கொண்டுள்ளனவோ அவர் அப்பட்டமான நயவஞ்சகர் ஆவார். எவரிடம் அவற்றில் ஒரு குணம் குடி கொண்டுள்ளதோ அவர் அதை விட்டு விடும் வரை அவருள் நயவஞ்சகத்தின் ஒரு குணம் குடிகொண்டிருக்கும்".**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள்

(நூல் : புகாரீ 34, முஸ்லிம் 106)

உண்மையான இறை நம்பிக்கையாளர் (முஃமின்) உள்ளும் புறமும் ஏக இறைவனை நம்பிக்கை கொண்டு அதன்படி செயல்படுவார். அந்த நம்பிக்கைக்கு ஒருபோதும் அவர் மாறு செய்யமாட்டார். ஆனால், நயவஞ்சகன் (முனாஃபிக்) உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவான்.

நயவஞ்சகத்தில் பெரியது சிறியது என்று இரு வகைகள் உள்ளன. பெரிய நயவஞ்சகம் என்பது உள்ளத்தளவில் இறை நிராகரிப்பை வைத்துக் கொண்டு, வெளியில் தன்னை இறை நம்பிக்கையாளனாகக் காட்டிக் கொள்வது. இந்நிலை இஸ்லாத்திலிருந்து மனிதனை வெளியேற்றிவிடும் என்பது வெளிப்படை. சிறிய நயவஞ்சகம் என்பது செயல் ரீதியானது. இதுபற்றி இந்த நபிமொழியில் கூறப்பட்டது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் சிலர் உள்ளத்தில் இறைமறுப்பையும், உதட்டில் இறைநம்பிக்கையையும் வைத்துக் கொண்டு நய வஞ்சகர்களாக இருந்துவந்தனர். இவர்கள் தான் அடிப்படை நய வஞ்சகர்கள் ஆவர். தாங்கள் இறை நம்பிக்கை கொண்டிருப்பதாக இவர்கள் கூறினார்கள். ஆனால், அது உண்மை அல்ல. தாங்களும் முஸ்லிம்களே என்று மற்றவர்களை நம்ப வைத்து மோசடி செய்தார்கள். மார்க்கத் திற்கு உதவுவோம் என்று வாக்களித்து விட்டு வாக்கு மீறினார்கள். வழக்கு என்று வந்துவிட்டால் நேர்மை தவறி நடந்து கொண்டார்கள். நய வஞ்சகத்தின் இந்த அடிப்படைக் குணங்கள் இன்றைக்கும் யாரிடமாவது இருந்தால் அவர்கள் முஸ்லிம்

களாக இருந்தாலும் நயவஞ்சகர் களைப் போன்றவர்கள் தான் என இந்த நபிமொழி எச்சரிக்கிறது.

இக்குணங்கள் அனைத்தும் யாரிடம் குடிகொண்டுள்ளனவோ அவர் முழு நயவஞ்சகனைப் போன்றும். ஒரு சில குணங்கள் உள்ளவர் நயவஞ்சகத்தின் ஒரு பகுதியைப் பெற்றவரைப் போன்றும் கருதப்படுவார். இந்த நபிமொழிக்கு இது தான் பொருளே தவிர, இக்குணங்கள் உள்ளவர் அடிப்படையிலேயே நயவஞ்சகர் ஆகிவிட்டார் என்று பொருளாகாது. ஏனெனில், நபியவர்கள் காலத்தில் வாழ்ந்த நயவஞ்சகர்கள் உண்மையில் இறைமறுப்பாளர்கள் ஆவர். இன்று ஒரு முஸ்லிமிடம் இக்குணங்கள் இருப்பதால் அவர் இறைமறுப்பாளராகிவிட மாட்டார். அது நம்பிக்கை நயவஞ்சகம், இது செயல் நயவஞ்சகம் என்பது குறிப்பிடத்தக்கது.

(நூல் : அல்மின்ஹாஜ்)

## தொழுகைகளில்

"நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்று[வதாக எண்ணு]கிறார்கள். [உண்மையில்] அவனே அவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி இருக்கின்றான். அவர்கள் தொழுகைக்காக எழுந்து நின்று சோம்பல் பட்டுக் கொண்டே நிற்கிறார்கள். அவர்கள் மக்களுக்குக் காட்டு[வதற்காகவே தொழு]கிறார் கள். அவர்கள் குறைவாகவே அல்லாஹ்வை நினைவு கூர்கிறார்கள்".

- அல்குர்ஆன் (4 : 142)

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். "நயவஞ்சகர்களுக்கு மிகவும் சிரமமான தொழுகை இஷாவும், ஃபஜ்ரும் ஆகும். அவர்கள் அவ்விரு தொழுகைகளில் உள்ள சிறப்பை அறிவார்களானால் [முழங்கால்களில்] தவழ்ந்தாவது வந்து சேர்ந்து விடுவார்கள்".

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
நூல் : முஸ்லிம் 1154

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறினார்கள். "யாரொருவர் எவ்விதக் காரணமுமின்றி மூன்று ஜும்ஆத் தொழுகைகளைத் தொடர்ச்சியாக விட்டு விடுகின்றாரோ அவர் நயவஞ்சகர் என்று எழுதப்படும்".

(நூல் : முஸ்தத்ரகுல் வஸாயில் பாகம் 6, பக்கம் 9)

அலாஉ பின் அ்திர் ரஹ்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது- "ஒருமுறை நாங்கள் அனஸ் (ரளி) அவர்கள் வீட்டில் இருந்தபோது அவர்களைச் சந்திக்கச் சென்றோம். அப்போது அன்னார் எங்களிடம், "அஸர் தொழுதுவிட்டீர்களா?" என்றார்கள். அதற்கு நாங்கள், "(இல்லை) நாங்கள் இப்போது தான் (அதன் இறுதி நேரத்தில்)

லுஹர் தொழுதுவிட்டு வருகிறோம்" என்று அவர்களிடம் கூறினோம். அன்னார், "அவ்வாறாயின், நீங்கள் அஸர் தொழுங்கள்" என்றார்கள். உடனே நாங்கள் எழுந்து அஸர் தொழுதோம்.

நாங்கள் தொழுது முடித்ததும் அனஸ் (ரளி) அவர்கள் "இதுதான் நயவஞ்சகனின் தொழுகையாகும். அவன் சூரியனை எதிர்பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்பான், சூரியன் (சரியாக) ஷைத்தானின் இரு கொம்புகளுக்கிடையே (உதயமாகி அல்லது மறைந்து) வரும் போது அவன் (அவசர அவசரமாகக் கோழி கொத்துவதைப் போன்று) நான்கு கொத்துகள் கொத்துவான். அவன் அதில்மிகக் குறைவாகவே இறைவனை நினைவு கூருவான் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றுள்ளேன்" என்றார்கள்.

(நூல் : முஸ்லிம் 1097)

தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழாமல் தாமதப் படுத்துவதையும், நிதானமின்றி அவசர அவசரமாகத் தொழுது முடிப்பதையும் நயவஞ்சகத் தனம் என்பதாக இந்த நபி மொழி கண்டிக்கிறது. ஆகவே, எப்போதாவது இவ்வாறு தொழுதால் பரவாயில்லை. (உதாரணமாக ஒருவர் அயர்ந்து தூங்கி விட்டார். அவர் திடீரென சூரிய உதயத்திற்கு சற்று நேரத்திற்கு முன்பு தான் விழித்தார். சூரிய உதயத்திற்கு முன் ஃபஜ்ரு தொழுதாக வேண்டும் என்பதற்காக அவர் தொழுகையில் அவசரம் காட்டலாம்) எப்போதும் இவ்வாறே தொழுதால் தான் அது நயவஞ்சகத்தனம் என்பதாக விளங்க வேண்டும்.

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது. "ஒருவர் சோம்பல் பட்டுக்கொண்டே தொழுகைக்காக எழுந்து நிற்பது வெறுக்கத் தக்கதாகும். மாறாக, முகமலர்ச்சியுடனும், ஆர்வத்துடனும், பேரானந்தத்துடனும் தொழுகைக்காக நிற்க வேண்டும். ஏனெனில் தொழுபவர் அல்லாஹ்வுடன் உரையாடுகிறார். அவருக்கு முன்னால் அல்லாஹ் இருக்கின்றான். அவரை மன்னிக்கின்றான். அவர் அவனிடம் பிரார்த்தனை புரிந்தால் அதற்குப் பதிலளிக்கின்றான்" இவ்வாறு குறிப்பிட்ட அன்னார் அதைத் தொடர்ந்து மேற்காணும் அல்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.

நூல் : தஃப்சீர் இப்னு கஸீர்

தொழுகையில் என்ன ஓதுகிறோம் அல்லது என்ன ஓதப் படுகிறது என்று கவனிக்காமல் மன ஓர்மையின்றி அலட்சியமாகத் தொழுவதை வழமையாக்கிக் கொள்வதும் நயவஞ்சகத் தன்மையை உண்டாக்கிவிடக் கூடும்.

# அல்லாஹ்வின் இல்லத்திற்கு அள்ளி வழங்குங்கள்!

அன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

இறை இல்லத்தின் விரிவாக்கத்திற்காக 14 சென்ட் இடம் முடிப்பதற்கு சென்ட் ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 14 சென்டுக்கு 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தங்களால் இயன்ற பொருளுதவியைப் பேருதவியாகச் செய்து மறுமையில் சொர்க்கத்தில் ஒரு மாளிகையைப் பெற அன்புடன் அழைக்கின்றோம். தங்களின் உதவிகளை கீழ்கண்ட பெயரில் செலுத்துங்களேன்!

**பேங்க் விபரம் :**

பெயர் : **SELLUR NEW MOSQUE JAMATH**

பேங்க் : **INDIAN BANK Branch : BIBIKULAM**

**A/C எண் : 7070061108**

**IFSC CODE : IDIB000B066 CIF No : 30415785610**

## செல்லூர் புதுப்பள்ளிவாசல் முஸ்லிம் ஜமாஅத்

அஹிம்சாபுரம் மேலத்தெரு விசாலம், **செல்லூர், மதுரை – 2.**

தலைவர் : **K.சுல்தான் அலாவுதீன்** M.A.,B.L., **9842137386**

செயலாளர் : **முஹம்மது அபூபக்கர்** B.Com., **9042450369**

பொருளாளர் : **A.காதர் மைதீன்** **9443732567**

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
**இராமநாதபுரம் – 623 501.**

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

நபியவர்களது காலத்தில் வாழ்ந்த நயவஞ்சகர்கள் உடற் பலம், பண பலம், குழந்தை மற்றும் ஏனைய செல்வங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் உலக சுகத்தில் தமது காலத்தை கழித்ததுடன் அல்லாஹ்வைப் பற்றி எந்தச் சிந்தனையும் இல்லாதவர் களாக வாழ்ந்தனர்.

## தீய பேச்சாளன்

**"தங்கள் மனதில் இல்லா தவற்றையே அவர்கள் தங்கள் வாயால் கூறினார்கள்"**

- அல்குர்ஆன் (3 : 167)

அருமை நாயகம் (ஸல்) **அவர்கள் கூறினார்கள். "இந்தச் சமுதாயத்தினர் விஷயத்தில் நான் அஞ்சுவதெல்லாம் இத்தகைய நயவஞ்சகன் குறித்து தான், அவன் பேசும்போது தத்துவ மாகப் பேசுவான், ஆனால், அநீதி யான செயல்களைச் செய்வான்".**

அறிவிப்பாளர்: ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள்

(நூல் : முஸ்னது அஹ்மத், பைஹகீ, மிஷ்காத் பாபுர் ரியாஉ)

சிலர் எதற்கெடுத்தாலும் "இஸ்லாம்! இஸ்லாம்!" என்று முழங்குவார்கள். ஆனால், செயல் படக்கூடிய நிலை வரும்போது இஸ்லாத்தின் வரம்புகளை அதிக மாக மீறுபவர்கள் இவர்களை விட வேறு யாரும் இருக்க மாட் டார்கள். இதைத்தான் கிராமத்துச் சொல் வழக்கில் "சொல்லு சுல்தான் செயல் ஷைத்தான்" என்று சொல்லப்படும்.

## புகழை விரும்புவார்கள்

**"தாம் செய்த (தீய)வற்றைக் குறித்து மகிழ்ந்துகொண்டும், தாம் செய்யாத (நல்ல)வற்றுக் காகப் பாராட்டப்பட வேண்டும் என்று விரும்பிக்கொண்டும் இருப்போர் வேதனையிலிருந்து தப்பித்தவர் கள் என்று (நபியே!) நீர் எண்ண வேண்டாம். வதைக்கும் வேதனை தான் அவர்களுக்கு உண்டு".**

- அல்குர்ஆன் (3 : 188)

ஹள்ரத் அபூ சயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் கூறியதாவது. "அருமை நாயகம் (ஸல்) அவர் களின் காலத்தில் நயவஞ்சகர் கள் சிலர், நபியவர்கள் அறப் போருக்குப் புறப்பட்டுச் சென் றால், அவர்களுடன் செல்லாமல் ஊரிலேயே தங்கிவிடுவார்கள். (அவ்வாறு) நபியவர்களுடன் செல்லாமல் தாம் தங்கிவிட் டதைப் பற்றி மகிழ்ச்சியும் அடை வார்கள். நபியவர்கள் (போரி லிருந்து) திரும்பி வரும்போது அவர்களிடம் (போய், தாம் கலந்து கொள்ளாமல் போன தற்குப் பொய்யான) சாக்குப் போக்குகளைக் கூறி (பொய்ச்) சத்தியம் செய்வார்கள். தாம் செய்யாத (நற்)செயல்களுக் காகத் தாம் புகழப்பட வேண்டு மென்றும் விரும்புவார்கள்.

இவர்கள் குறித்து தான் மேற்காணும் வசனம் அருளப்பெற்றது".

(நூல் : புகாரி 4567)

## நபிமொழிகளை மறுப்பது

அபூசயீத் அல்ஹிம்யரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது. "நபித்தோழர் முஆத் பின் ஜபல் (ரளி) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் செவியுறாத பல நபிமொழிகளை அறிவித்துக் கொண்டும் அவர்கள் செவியுற்று பலவற்றை அறிவிக்காமலும் இருந்து வந்தார்கள்.

ஹள்ரத் முஆத் (ரளி) அவர்கள் அறிவித்த ஒரு நபிமொழி நபித்தோழர் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்களுக்கு எட்டியது. அப்போது ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! நபியவர்கள் (இவ்வாறு கூறியதை) நான் செவியுறவில்லை. மலம் ஜலம் கழித்தல் தொடர்பான இந்த விஷயத்தில் முஆத் உங்கள் மத்தியில் குழப்பம் விளைவிக்கப் பார்க்கிறார்" என்று கூறினார்கள். ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள் இவ்வாறு கூறிய செய்தி முஆத் (ரளி) அவர்களை அடைந்தது.

ஆகவே ஹள்ரத் முஆத் (ரளி) அவர்கள் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்களைச் சந்தித்து, "அப்துல்லாஹ்! நபியவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்ட நபிமொழியைப் பொய்யெனக் கூறுவது நயவஞ்சகமாகும். அதற்குரிய பாவம் அவ்வாறு (பொய்) சொன்னவரையே சாரும்" என்று கூறினார்கள்.

(நூல் : இப்னுமாஜா 323)

இந்த நபிமொழியை இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை. இந்த நபிமொழி குர்ஆனோடு முரண்படுகிறது அல்லது என்னுடைய அறிவுக்கு ஒத்துப் போகவில்லை. அறிவியலுக்கு மாற்றமாக இருக்கிறது என்றெல்லாம் கூறி நபிமொழிகளை மறுத்துரைக்கும் பழக்கம் நயவஞ்சகத் தன்மையை உண்டாக்கும் என்பதை மேற்காணும் நபிமொழி தெளிவுபடுத்துகிறது.

உலக அறிவு மற்றும் மார்க்க அறிவை முழுமையாகக் கற்றறிந்தவர்கள் யாருமில்லை. "நபிமொழிகள் அனைத்தையும் நான் அறிவேன்" என்று சொல்பவர் யாராவது உண்டா? அவ்வாறு சொல்லத்தான் முடியுமா? நான் இதுவரை இந்த நபிமொழியைக் கேட்டதில்லை, படித்ததில்லை. எனவே, இதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று கூறுவது அறிவார்ந்த செயலாகாது.

(ஸஹீஹ் எனும்) ஆதாரப்பூர்வமான நபிமொழிகளையும், பல அறிவிப்பாளர்கள் மூலம் அறிவிக்கப்பட்டு, பல நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள

(ளயீஃஃப் எனும்) பலவீனமான நபிமொழிகளையெல்லாம் "இது நபிமொழியே அல்ல" என்று மறுத்துரைப்பது தவறாகும்.

(பலவீனமான ஒரு நபி மொழி, பல அறிவிப்பாளர்கள் மூலம் வரும்போது அது, பலமான நபிமொழியைப் போன்று ஆகி விடும் என்பதே நபிமொழித்துறை நிபுணர்களின் முடிவாகும் என்பது குறிப்பிடத்தக்கது).

## அறப்போராட்டங்கள்

**பேராசான் பெருமானார் [ஸல்] அவர்கள் கூறினார்கள். "அறப்போரில் கலந்துகொள்ளாமலும் அது குறித்து மனதில் எந்தவிதமான ஆசையும் இல்லாமல் இறந்து போனவர் நயவஞ்சகத்தின் ஓர் அம்சத்திலேயே இறந்துபோகிறார்"**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் 3871)

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்துக்கு மட்டுமே இது பொருந்தும். இஸ்லாமிய வளர்ச்சி அடைந்துவிட்ட காலத்துக்கு இரு பொருந்தாது என்பது அப்துல்லாஹ் பின் முபாரக் (ரஹ்) அவர்களின் கருத்தாகும். ஆனால், எல்லாக் காலத்துக்கும் இது பொருந்தும் என்று கூறுவோரும் உள்ளனர். நயவஞ்சகர்கள் தாம் அறப்போரில் கலந்து கொள்ளாமல் பின்வாங்குவர். எனவே, இது நயவஞ்சகர்களின் குணங்களில் ஒன்றாகும்.

(நூல் : அல்மின்ஹாஜ்)

இஸ்லாமிய வளர்ச்சிக்காக அல்லது இஸ்லாம் வழங்கிய உரிமைகளைப் பாதுகாக்க மக்களெல்லாம் போராடிக் கொண்டிருக்க, ஒருவன் மட்டும் அல்லது ஓரிரு பேர் மட்டும் இந்த அறப்போராட்டங்களில் கலந்து கொள்ளாமல், அதாவது இந்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படலாம் அல்லது உயிர் இழப்பு ஏற்படலாம் அல்லது ஆட்சியாளர்களிடம் தமக்கு கெட்டப் பெயர் ஏற்படலாம் என்றெண்ணி இது போன்ற அறப் போராட்டங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள் பவருக்கும் இந்த நபிமொழி பொருந்தும் என்றே தோன்றுகிறது.

## இரு குணங்களும் இணையாது

**அருமை நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். "இரு குணங்கள் ஒரு நயவஞ்சகனிடம் ஒரு சேர அமைந்திருக்காது- [அவை] 1. நன்னடத்தை, 2. மார்க்கக் கல்வி".**

(நூல் : திர்மிதீ 2605)

நயவஞ்சகம் எத்தகைய துன்பத்திற்குரியதெனில், அதற்கு ஆளாகிறவர்களுக்கு நற்குணம் மற்றும் இறைநெறியின் மூலம்

நல்லறிவு பெறுதல் ஆகிய அருட்கொடைகள் வழங்கப்படமாட்டாது.

மார்க்கக் (கல்வியை) விளக்கங்களை உள்ளத்தில் தக்க வைத்துப் பிறருக்குப் போதித்து, தன்னையும் (அமல் செய்யத் தூண்டும்) செயலாற்ற வைக்கும் அல்லாஹ்வின் மீதுண்டான அச்சத்தை நிரந்தரமாகத் தரும் உன்னத நிலைக்கு மார்க்கத்தில் விளக்கம் (மார்க்கக் கல்வி) பெறுதல் என்று பொருளாகும்.

தாம் கற்ற மார்க்கக் கல்வியைப் பிறருக்குப் போதிப்பதால் மட்டும் தமக்கு கண்ணியம் கிடைத்து விடும் என்ற எண்ணம் மார்க்கத்தில் உணர்வு பெறுவதைத் தடுத்துவிடும். மார்க்கக் கல்வி என்பது உள்ளத்தை அல்லாஹ்வின் அச்சத்தால் நிரப்ப வேண்டும். நாவோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது. அல்லாஹ் வின் அச்சத்தை ஏற்படுத்துவது தான் மார்க்கக் கல்வியாகும் இதுவே இந்த நபிமொழியின் கருத்து.

## விடுதலை பெற்றவர்

அருமை நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். ''யார் அல்லாஹ்வுக்காக கூட்டுத் தொழுகையில் ஆரம்ப தக்பீரிலேயே சேர்ந்து நாற்பது நாள்கள் தொழுகிறாரோ அவருக்கு இரண்டு விடுதலைகள் எழுதப்படுகின்றன. 1) நரக விடுதலை, 2) நயவஞ்சகத்திலிருந்து விடுதலை''

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்
(நூல் : திர்மிதீ 224)

அருமை நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். ''ஒருவர் என்னுடைய பள்ளி வாசலில் [மஸ்ஜிதுந் நபவியில்] ஒரு வேளை தொழுகையைக் கூட தவறாமல் தொடர்ந்து நாற்பது வேளை தொழுகைகளை [பேணுதலுடன்] தொழுவாரோ அவருக்கு நரக வேதனையை விட்டு விடுதலை பெற்றவர் என்று எழுதப்படுவது டன் அவர் [நிஃபாக் எனும்] நய வஞ்சகத் தன்மையை விட்டும் நீங்கியவராகி விடுவார்''.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்னது அஹ்மத், அத்தர்கீபு வத்தர்ஹீபு, இர்ஷாதுஸ் ஸாரீ)

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் கூறினார்கள். ''யார் என் மீது ஒருமுறை சலவாத்து ஓதுகிறாரோ அவருக்கு அல்லாஹ் பத்து மடங்கு அருள் புரிகிறான். அவர் என் மீது பத்து முறை சலவாத்து ஓதினால் அல்லாஹ் அவர் மீது நூறு மடங்கு அருள்புரிகிறான். அவர் என் மீது நூறுமுறை சலவாத்து

ஓதினால் அவரின் நெற்றியில் நயவஞ்சகத்திலிருந்தும், நரகத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டவர் என்ற வாசகத்தை எழுதி, மறுமையில் உயிர்த் தியாகிகளுடன் அவரை அல்லாஹ் தங்க வைப்பான்'' (நூல் : தப்ரானீ)

பிரபல திருகுர்ஆன் விரிவுரையாளர் ளஹ்ஹாக் பின் முஸாஹிம் (ரஹ்) அவர்கள், ஸம்ஸம் தண்ணீரை வயிறு நிரம்பப் பருகுவதன் மூலம் நயவஞ்சகத்திலிருந்து விடுதலை பெறலாம் என்ற செய்தி தமக்குக் கிடைத்ததாகக் கூறுகிறார்கள்.

நூல் : தஃப்ஸீர் துர்ருல் மன்ஸூர் அத்தவ்பா வசனம் 19

## பிரார்த்திப்பது

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : ''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவா! பகைமையிலிருந்தும், நயவஞ்சகத்திலிருந்தும் தீய குணங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்'' என்று பிரார்த்தனை செய்பவர்களாக இருந்தார்கள்.

(நூல் : அபூதாவூத் 1322, நஸாயீ 5376)

ஹஸ்ரத் உம்மு மஅபத்(ரளி) அவர்கள் கூறியதாவது: ''பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள், இறைவா! என் உள்ளத்தை நயவஞ்சகத்திலிருந்தும், என் செயலை முகஸ்துதியிலிருந்தும், என் நாவைப் பொய்யிலிருந்தும், என் பார்வையை மோசடியிலிருந்தும் தூய்மைப்படுத்துவாயாக! நிச்சயமாக நீ பார்வையின் மோசடியையும், இதயங்களின் இரகசியங்களையும் அறிகின்றாய்'' என்று பிரார்த்தித்ததை நான் செவியுற் றுள்ளேன்.

(நூல் : பைஹகீ, மிஷ்காத் பாபு ஜாமிஉத் துஆ)

தாபியீன்களில் ஒருவரான ஜுபைர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "நான் ஒரு முறை நபித்தோழர் அபூதர்தா (ரளி) அவர்களிடம் சென்றிருந்தேன். அப்போது அவர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தார்கள். தொழுகை முடிந்தவுடன் தங்களுடைய பிரார்த்தனையில் நயவஞ்சகத்திலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார்கள். அப்போது நான் அவர்களிடம் "நயவஞ்சகத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான அவசியம் உங்களுக்கு என்ன வந்தது?" என்று வினவினேன்.

அப்போது அபூதர்தா (ரளி) அவர்கள் "சோதனையிலிருந்து யார் தான் அச்சமற்று இருக்க முடியும்? என்று கூறிவிட்டு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒரு மனிதன் திடீரென ஒரு நேரத்தில் சோதிக்கப்படுகிறான், ஆனால் அந்தச் சோதனையால் அவன் மார்க்கத்தை விட்டே வழி தவறிவிடுகிறான்" என்று பதிலளித்தார்கள்.

# பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவதற்கு உதவி செய்யுங்கள்

"யாரொருவர் பள்ளிவாசல் கட்டுவதற்கு உதவி செய்கிறாரோ அவருக்கு மறுமையில் சொர்க்கத்தில் ஒரு வீட்டை அல்லாஹ் கட்டுகிறான்." "பள்ளிவாசல் கட்டுபவர்களுக்கு உலகத்தின் எல்லா தேவைகளையும் அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கிறான்"

அன்புள்ளம் கொண்ட சகோதர, சகோதரிகளுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

சென்னை முகப்பேர் ஏரி ஸ்கீம் பக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், முகப்பேர் கபருஸ்தான் பின்புறம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, நம்பர் 1 என்ற இடத்தில் அல்லாஹ்வின் இல்லமாகிய **மஸ்ஜிதுன் நூர் & மதரஸா** கட்டுவதற்காக ¼ கிரவுண்ட் இடத்தை அல்லாஹ்வின் கிருபையால் ரூ. 25 லட்சம் கொடுத்து ரிஜிஸ்டர் செய்து விட்டோம். அல்ஹம்துலில்லாஹ்!

இனி அடுத்த கட்டமாக மஹல்லாவாசிகள், ஸ்கூல் படிப்புடன் கூடிய **அல் மதரஸத்துன் நூரிய்யா** ஹிஃப்ழு மதரஸா மாணவர்கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சகோதரர்கள் ஆகியோர் பள்ளியில் தங்கி தொழுவதற்காகவும், ஓதுவதற்காகவும் இன்ஷா அல்லாஹ் இந்த பள்ளிவாசலை உருவாக்குகிறோம். அல்லாஹ்வின் நாட்டப்படி கட்டட வேலைகள் ஆரம்பமாகி விட்டன. எனவே, இந்தப் பள்ளிவாசலின் கட்டட வேலைகள் முழுமை பெறுவதற்கு பொருளாகவோ, பணமாகவோ, செக்காகவோ அனுப்பி ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்புள்ளம் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களே! நீங்களும் உங்களின் உதவிகளை அனுப்புவதோடு, உங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் உதவிசெய்யவையுங்கள். அல்லாஹுதஆலா நமக்கு எல்லா நிஅமத்துக்களையும் அளித்து, பரக்கத் செய்தருள்புரிவானாக! நம்முடையஎல்லாத்தேவைகளையும்பூர்த்தி செய்வானாக. ஆமீன்.

மஸ்ஜிது அக்கவுண்ட் விபரம்

**Name : MASJIDUN NOOR AND MADARASA TRUST**

Bank : **Karur Vysya Bank** Branch: **Arumbakkam**

A/C.No : **1289135000013292**

Ifsc : **KVBL0001289** Swift Code: **KVBLINBBIND**

G.Pay : **9444273674**

## மஸ்ஜிதுன் நூர் அண்ட் மதரஸா டிரஸ்ட்

பள்ளிவாசல் காம்ப்ளக்ஸ், 3வது மாடி, 23, முதல் மெயின் ரோடு, ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை – 600 106.

**தொடர்புக்கு :** தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் **G. நூர் முஹம்மது ஆமிரி சிராஜி** அலைபேசி : **9444273674**

செயலாளர் : ஜனாப் **M.காதர் மஸ்தான்** B.A., அலைபேசி : **9962320242**

நபித்தோழர்களில் சிலர் "இறைவா! நயவஞ்சகத்தனமாகப் பணிவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்று பிரார்த்தனை செய்வார்கள்.

மாமேதை இமாம் ஹசன் அல்பஸ்ரி (ரஹ்) அவர்களிடம் "நயவஞ்சகமாகப் பணிவது என்றால் என்ன?" என்று கேட்கப்பட்டது. இமாமவர்கள், "உடல் இறைவனுக்குப் பணிந்து உள்ளம் பணியாத நிலைதான் அது" என்று பதிலளித்தார்கள்.

(நூல் : மதாரிஜுஸ்ஸாலிஹீன் 3/358, ஃபிக்ஹுல் அவ்லவிய்யாத் யூசுஃப் அல்கர்ளாவீ)

## நன்றியுடன் தியானித்தல்

நன்றியுடன் அல்லாஹ்வை (திக்ர் எனும்) நினைவுகூர்வது, உள்ளத்தை நயவஞ்சகத்திலிருந்து பாதுகாக்கும். அதனால்தான், நயவஞ்சகர்கள் குறித்து அல்லாஹ் கூறும்போது,

**''இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் [நயவஞ்சகர்கள்] அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை [அல்குர்ஆன் 4:142] என்றும், இறைநம்பிக்கையாளர்கள் குறித்து, இறைநம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமாக [தொழுகை, திக்ரு, தஸ்பீஹ் போன்றவற்றின் மூலம்] நினைவு கூருங்கள்'' [அல்குர்ஆன் 33:41] என்றும் கூறியுள்ளான்.**

**கண்மணி பெருமானார் [ஸல்] அவர்கள் கூறினார்கள் : ''எவர் அல்லாஹ்வை அதிகமாக [திக்ர், தஸ்பீஹ் மூலம்] நினைவு கொள்கிறாரோ அவர் நயவஞ்சகத் தன்மையை விட்டும் நீங்கி விட்டார்''**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானீ, ஜாமிஉஸ்ஸஙீர்)

## அச்சநிலை

ஹன்ழலா பின் அர்ரபீஆ அல்உசைதீ(ரளி) அவர்கள் கூறியதாவது: "(ஒருநாள்) அபூபக்ர் (ரளி) அவர்கள் என்னைச் சந்தித்து "ஹன்ழலா! எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். நான் "ஹன்ழலா நயவஞ்சகன் ஆகிவிட்டான்" என்று சொன்னேன். அதற்கு, "அல்லாஹ் தூயவன் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு நான், நாம் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கருகில் இருக்கும் போது அவர்கள் சொர்க்கம், நரகம் ஆகியவற்றைப் பற்றி நாம் நேரடியாகப் பார்ப்பது போன்று நினைவூட்டுகிறார்கள். அவர்களிடமிருந்து நாம் புறப்பட்டு (வீட்டுக்கு) வந்ததும் மனைவி மக்களுடன் கலந்துறவாடுகிறோம். பிழைப்புகளில் ஈடுபட்டு விடுகிறோம். (அண்ணலார் சொன்னவற்றில்) அதிகமானவற்றை மறந்து விடுகிறோம்" என்று கூறினேன்.

அதற்கு அபூபக்ர் (ரளி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணை

யாக! இதே நிலையை நாமும் சந்திக்கிறோம்" என்று கூறினார்கள். பிறகு நானும், அபூபக்ர் (ரளி) அவர்களும் அண்ணலாரிடம் சென்றோம்.

நான், "நாயகமே! ஹன்ழலா நயவஞ்சகனாகிவிட்டான்" என்று கூறினேன். அதற்கு அண்ணலார் "என்ன ஆனது?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "நாயகமே! நாங்கள் உங்கள் அருகிலிருக்கும் போது தாங்கள் எங்களுக்கு நரகத்தையும், சொர்க்கத்தையும் நாங்கள் நேரடியாகப் பார்ப்பதைப் போன்று நினைவூட்டுகிறீர்கள். நாங்கள் உங்களிடமிருந்து புறப்பட்டுச் சென்றதும் மனைவி மக்களுடன் கலந்துறவாடுகிறோம். பிழைப்புகளில் ஈடுபட்டு விடுகிறோம். அதிகமானவற்றை மறந்து விடுகிறோம்" என்று சொன்னேன்.

அதற்கு அண்ணலார் "அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் என்னிடம் இருக்கும் போதுள்ள நிலையிலும், எண்ணத்திலும் எப்போதும் இருந்தால் உங்கள் படுகைகளிலும், நீங்கள் செல்லும் வழிகளிலும் வானவர்கள் வந்து உங்களுடன் கை குலுக்கியிருப்பார்கள். மாறாக, ஹன்ழலா! (இப்படிச்) சில நேரம் (அப்படிச்) சில நேரம்" என்று மூன்று முறை கூறினார்கள். (நூல் : முஸ்லிம் 5305, திர்மிதீ 2438)

ஜனாதிபதி ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இரகசியக் காப்பாளரான ஹுதைஃபா (ரளி) அவர்களிடம், "அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உம்மிடம் கூறியுள்ள நயவஞ்சகர்களின் பட்டியலில் என் பெயர் உள்ளதா?" என்று கேட்டார்கள்.

(நூல் : ஃபிக்ஹுல் அவ்லவிய்யாத் யூசுஃப் அல்கர்ளாவீ)

இப்னு அபீ முலைக்கா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "நான் நபித்தோழர்களில் முப்பது பேரைச் சந்தித்துள்ளேன். அவர்கள் அனைவரும் நயவஞ்சகத்தை பயந்தனர். மேலும், தங்களிடம் நயவஞ்சகர்களின் பண்புகள் வந்துவிடக் கூடாது என்றும் பயப்படக் கூடியவர்களாக இருந்தனர்".

ஹள்ரத் ஹன்ழலா (ரளி) அவர்கள் அதீத கவனம் செலுத்தக்கூடிய (சீரியஸான) ஒரு மனிதர். அதன் காரணமாக தமது நிலை பற்றி அவர் தீவிரமாகச் சிந்தித்தார். நபியவர்களுடன் இருக்கின்ற நேரத்தில் நல்லதோர் ஆன்மிக நிலையில் தாம் இருப்பதாகவும் நபியவர்களைவிட்டும் பிரிந்த பிறகு மனைவி மக்களோடு இருக்கின்ற நேரத்தில் அந்த ஆன்மிக நிலை இல்லாமல் போவதையும் உணர்ந்தார். இது ஒரு நயவஞ்சகம் என அவர் கருதினார். எனவே, நபியவர்களிடம் இதை முறையிடவும் செய்தார். அதற்கு நபியவர்கள், "ஆம்! மனித உள்ளத்துக்கு அதீத கவனமும் (சீரியஸ்னஸ்) தேவைப்படுகிறது. மனைவி,

மக்களோடு உல்லாசமும் தேவைப்படுகிறது" என்பதைச் சுட்டிக் காட்டினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவையில் நபித் தோழர்கள் இருக்கும் வரை அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனையிலும், மறுமை பற்றிய ஆர்வத்திலும் மூழ்கிப் போய் விடுவார்கள். ஆனால், அங்கிருந்து வெளியேறி வீடுகளுக்கும், கடைகளுக்கும் சென்று விட்டால், இந்தச் சிந்தனைகள் மறைந்துபோய் மனைவி மக்களுடன் உறவாடுவதும், தொழிலைக் கவனிப்பதுமாக இருப்பார்கள். இவ்வாறு அங்கொரு நிலையிலும், இங்கொரு நிலையிலும் இருப் பது, ஒரு நயவஞ்சகத்தனம் என்று ஹள்ரத் ஹன்ழலா (ரளி) அவர்கள் எண்ணிவிட்டார்கள்.

அண்ணலாரிடம் இதைப் பற்றிக் கூறும்போது, இது நயவஞ்சகம் ஆகாது என்று விளக்கினார்கள். 24 மணி நேரமும் இறைச் சிந்தனையிலேயே இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை என்றும், மறுமைக்கென சிறிது நேரம், இம்மைக்கென சிறிது நேரம் என்று வாழ வேண்டும் என்றும் அண்ணலார் விவரித்தார்கள். இதுதான் நடைமுறைக்கு ஏற்ற வாழ்க்கை முறையாகும். எனவேதான், இஸ்லாம் பின்பற்றுவதற்கு ஏற்ற எளிய மார்க்கம் என்கிறோம்.

மாமேதை இமாம் ஹசன் அல்பஸ்ரி (ரஹ்) அவர்கள் கூறினார்கள். "இறைநம்பிக்கையாளர் நயவஞ்சகக் குணங்கள் தம்மிடம் இருக்குமோ என்று அஞ்சுவார். ஆனால், நயவஞ்சகன் அவை தம்மிடம் இருக்கவே இருக்காது என்று தைரியமாக இருப்பான்".

(நூல் : மதாரிஜுஸ்ஸாலிஹீன் 3/358, ஃபிக்ஹுல் அவ்லவிய்யாத் யூசுஃப் அல்கர்ளாவீ)

## சுயபரிசோதனை

நபித்தோழர் ஹுதைஃபா (ரளி) அவர்களிடம் ஒருவர் வந்து, "நான் நயவஞ்சகர்களில் ஒருவனாக இருப்பேனா?" என்று கேட்டார். ஹுதைபா (ரளி) அவர்கள், "நீர் தனிமையில் அல்லாஹ்வைத் தொழுகிறீரா? பாவம் செய்தால், அதற்குரிய (தவ்பா எனும்) மன்னிப்புக்

**QR Code-ஐ பயன்படுத்துங்கள்!**

உங்கள் சந்தா தொகைகள் துரிதமாக குர்ஆனின் குரல் அலுவலகத்திற்கு கிடைத்திட இந்த QR Code-ஐ ஸ்கேன் செய்து அனுப்பி வையுங்கள்.

கோருகிறீரா?" என்று கேட்டார்கள். அம்மனிதர் "ஆம்" என்றார். ஹுதைஃபா (ரளி) அவர்கள், "(அப்படியானால்) நீர் போகலாம். அல்லாஹ் உம்மை நயவஞ்சகனாக ஆக்கமாட்டான்" என்றார்கள்.

நயவஞ்சகர்கள் தங்களை முஸ்லிம்கள் எனக் காட்டிக் கொள்வதற்காக மற்ற முஸ்லிம்களுடன் சேர்ந்து தொழுவார்கள், தனியே இருந்தால் தொழ மாட்டார்கள். இதுவே அவர்களின் யதார்த்தம். ஒருவன் தனிமையில் தான் செய்த பாவத்தை எண்ணி வருந்தி, பாவமன்னிப்புக் கேட்கிறான், தொழுகிறான் என்றால் அது அவனுக்கும், அல்லாஹ்விற்கும் மட்டுமே தெரியும். எனவே, அவன் நயவஞ்சகன் எனும் பட்டியலில் வரமாட்டான் என நபித்தோழர் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்.

அறிஞர் யூசுஃப் அல்கர்ளாவீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "இறை நம்பிக்கையாளருக்கும், நயவஞ்சகருக்கும் இடையிலான வேறுபாடு இறைநம்பிக்கையாளர், நற்செயல்கள் செய்து விட்டு, (அதன் மூலம் கர்வம் கொள்ளாமல்) "என்னிடமிருந்து அவை ஏற்கப்படாமல் போவதை அஞ்சுகிறேன்" என்பார். நயவஞ்சகன், பாவச்செயல்களில் ஈடுபட்டு விட்டு (அது குறித்த உறுத்தல் இல்லாமல்) "எனக்கு மன்னிப்பு வழங்கப்படுவதை ஆசைப்படுகிறேன்" என்பான்.

நாம் நயவஞ்சகன் இல்லை என்பதை நமக்கு நாம் அறிந்து கொள்ள நாம் முறையாகத் தொழுகும் தொழுகையாளியாகவும் நிகழ்ந்துவிட்ட பாவங்களை எண்ணி முறையாக பாவமன்னிப்புக் கோருபவராகவும் ஆக வேண்டும்.

திருக்குர்ஆனில் காஃபிரூன் (நிராகரிப்பாளர்கள்) எனும் அத்தியாயத்தைவிட முனாஃபிக்கூன் (நயவஞ்சகர்கள்) எனும் அத்தியாயம் பெரியதாக இருக்கிறது. நிராகரிப்பாளர்களிடம் எச்சரிக்கையாக இருப்பதைவிட நயவஞ்சகர்களிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருங்கள் என்கிறார் ஓர் அறிஞர்.

அல்லாஹ் நம்மை நயவஞ்சகக் குணம் மற்றும் செயல்களில் இருந்தும் பாதுகாப்பானாக!

## உளூ முக்கியம்!

இப்னு அப்பாஸ் (ரளியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் தனக்கு கூறியதாக முஜாஹித் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் கூறினார்கள் : "உளூ செய்யாமல் தூங்காதீர்கள். ஏனெனில் ரூஹ்கள் (உயிர்கள்) எந்த நிலையில் கைப்பற்றப்படுமோ அதே நிலையில் தான் எழுப்பப்படும்."

(நூல் : ஹில்யதுல் அவ்லியா, பாகம் : 3, பக்கம் : 295)

باسمہ تعالیٰ

# இந்திய நூரானி மக்களுடன் (பார்வையற்றோர்களுடன்)
# ஒரு நாள் திருக்குர்ஆன் இஸ்திமா

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ

முழு இந்தியாவின் முதலாவது பார்வையற்றோர் மதரஸாவான, "மதரஸா–யே–இம்தாதியா (பார்வையற்றோர் களுக்காக), மேல்விஷாரம்" கடந்த 13 வருடங்களாக பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு மார்க்க கல்வியுடன் (நாழிரா, ஹிப்ழு, ஜுஃம்ரா மற்றும் கிராத்) உலக கல்வியையும் (கல்லூரி பட்டப்படிப்பு வரை) கற்பித்து வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

ஆண்கள் பிரிவில், இதுவரை 27 மாணவர்கள் ஹாஃபிழ் மற்றும் 12 மாணவர்கள் ஜுஃம்ரா மற்றும் கிராத் (ஸபா,அஷ்ரா) ஓதி முடித்துள்ளனர். மேலும் இவ்வருடம் 10 மாணவர்கள் ஹாஃபிழ் (ம) 7 மாணவர்கள் ஜுஃம்ரா மற்றும் கிராத் ஓதி முடித்துள்ளனர்.

பெண்கள் பிரிவில், இதுவரை 78 மாணவிகள் ஹாஃபிழா ஆகியுள்ளனர். இவ்வருடம் முதல் 2 வருட முபல்லிகா பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வருடம் 18 மாணவிகள் ஹாஃபிழா ஆகியுள்ளனர்.

இந்தியா மற்றும் சர்வதேச அளவில் இதுவரை சுமார் 700 பிரைலி குர்ஆன் பார்வையற்றவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் நாள்தோறும் குறைந்தது ஒரு பிரைலி குர்ஆன் பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

மதரஸாவின் பட்டமளிப்பு விழா இன்ஷா அல்லாஹ் வருகின்ற 17, 18 மற்றும் 19 பிப்ரவரி 2023 அன்று நடைபெற உள்ளது. மேலும் பார்வையற்றவர்களுக்கான இந்திய அளவிலான முதலாவது திருக்குர்ஆன் மனனப் போட்டி நடைபெற உள்ளது. இதில் வெற்றி பெறும் பார்வையற்ற ஹாஃபிழ்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

முதலாம் பரிசு ரூ. 1,00,000/–

இரண்டாம் பரிசு ரூ. 60,000/–

மூன்றாம் பரிசு ரூ. 35,000/–

மேலும் போட்டியில் பங்கு பெறுபவர்களை ஊக்குவிக்கும் விதமாக போட்டியாளர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

## நிகழ்ச்சி நிரல்

| எண் | தேதி | நாள் | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|---|
| 1 | 17-02-2023 | வெள்ளி | அஸருக்குப் பிறகு | வரவேற்பு நிகழ்ச்சி |
| 2 | 17-02-2023 | வெள்ளி | மக்ரிபிற்கு பிறகு | பிரைலி மதரஸாக்களில் பயிலும் மாணவர்களுக்கிடையே திருக்குர்ஆன் மனனப் போட்டி (சுமார் 20 மாணவர்கள்) |
| 3 | 18-02-2023 | சனி | காலை 9.00-1.30 | பார்வையற்ற ஹாஃபிழ்மார்கள், ஆசிரியர்களுக்கிடையே திருக்குர்ஆன் மனனப் போட்டி (சுமார் 20 ஹாபிழ்கள்) |
| 4 | 18-02-2023 | சனி | அஸர் முதல் இஷா வரை | பட்டமளிப்பு விழா (10 ஹாஃபிழ்மார்கள், 7 உலமாக்கள்) |
| 5 | 19-02-2023 | ஞாயிறு | காலை 7.00-9.00 | பிரைல் ஸ்மார்ட் கிளாஸ் (பார்வையற்ற மதரஸாக்களில் நிர்வாகிகள் (ம) உலமாபெருமக்களுக்காக |

தாங்கள் அனைவரும் தங்களின் நிதியுதவியின் மூலமாகவும் வருகையின் மூலமாகவும் இவ்விழாவை சிறப்பித்து தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

اَلْمَدْرَسَةُ الْاِمْدَادِيَةُ لِلْمَكْفُوْفِيْنَ بِمِيْلْ وِشَارَمْ تَمِلْ نَادُوْ اَلْهِنْدُ

# MADRASA-E-IMDADIYA FOR THE BLIND


**Run By : Imdadiya Educational & Charitable Trust**

Registered under section 12AA of the Income Tax Act,1961 as per Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499

539, Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org
Contact : +91-9952120340 Telephone : 04172 268500

Regd. No:59/2014
Estd: 1431-H/2010


அழைப்பு :

**மதரஸா-யே-இம்தாதியா, மேல்விஷாரம்.**
தொடர்புக்கு : +919952120340.



ROLL - ON
Jinga™
Pain Care Oil
ONE SOLUTION FOR ALL PAIN
ஜிங்கா
பெய்ன் கேர் ஆயில்™
₹40/-
மொத்த வலிக்கும் ஒத்த நிவாரணி
ஒரு சொட்டு போதும் வலி பட்டுனு போகும்
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உங்கள் அருகில் உள்ள மருந்து கடைகளில் கிடைக்கும் கேட்டு வாங்குங்கள்...
Apollo HOSPITALS
MedPlus
Customer Care: 9962 99 4444
Missed Call: 9543006000
மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஓசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"



الحسام

AL HUSSAM

www.alhussam.in

# AL HUSSAM

## Travel & Tours India (P) Ltd

*Experience makes the difference*

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்...

- அல்குர் ஆன் - 2 : 196

**யா அல்லாஹ் ! எங்களுக்கு நிறைவான செல்வத்தையும் நோயற்ற வாழ்வையும் தந்து ஹஜ்ஜை நிறைவேற்றக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வாயாக !... ஆமீன்**

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail:alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

## ஒரு ஆலிம் நீதிபதி ஆகிறார்...

மார்க்கக் கல்வியுடன் உலகக் கல்வி இணைந்த பாடத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்த கேரள முஸ்லிம் சமூகத்தின் பல்லாண்டுகளுக்கு முந்தைய முயற்சிகள் தற்போது பல்வேறு அரசு வேலைவாய்ப்புகளில் பயனளித்து வருகின்றன. மகிழ்ச்சியான செய்தி...

கண்ணூர் மாவட்டத்தில் கட்டாங்கோடைச் சேர்ந்தவர் அப்துல் ராசிக்; ஆரம்பக் கல்வி முதல் பத்தாம் வகுப்பு வரை மலையாள மீடியத்தில் பயின்றவர். இவரது தந்தை முஹம்மது மரணித்தவுடன் தாயார் ஆமினா இவரை மார்க்கக் கல்வி பயில அனுப்பி வைத்தார்.

குற்றியாடி சிராஜுல் ஹுதா அரபிக் கல்லூரியில் +2 உடன் 2005 முதல் 2012 வரை மார்க்கக் கல்வி பயின்று சுரைஜி ஸனது பெற்றார்.

சிராஜுல் ஹுதா அரபு கல்லூரியில் ஏற்பட்ட கல்வித் தாகம் அவரை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றது.

கோழிக்கோடு பல்கலைக் கழகத்தில் பி.ஏ. ஆங்கில இலக்கியம், சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து எம்.ஏ. ஆங்கில இலக்கியமும் தேறியவர்; காரந்தூர் மர்க்கஸ் சட்டக் கல்லூரியில் சேர்ந்து ஸகாஃபி ஸனதுடன் எல்.எல்.பி. முடித்த அப்துல் ராசிக் மீண்டும் திருப்பதி பல்கலைக் கழகத்தில் சேர்ந்து எல்.எல்.எம். தேர்ச்சி பெற்றார்.

தற்போது வடகரா நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வரும் நிலையில் சமீபத்தில் கேரள மாநில அரசு நடத்திய முன்ஷிஃப் பதவிக்கான ஜுடிசியல் தேர்வு எழுதினார். இரண்டு தினங்களுக்கு முன் வெளியான தேர்வு முடிவுகளில் அப்துல் ராசிக் 28வது ரேங்கில் தேர்ச்சி பெற்று நீதிபதி இருக்கையில் அமரப்போகும் முதல் "மவ்லவீ" எனும் பெருமை பெறுகிறார்.

அவருக்கு நாம் வாழ்த்துக்கள் தெரிவிப்பதுடன் மவ்லவீ அப்துல் ராசிக் M.A.,L.L.B.,L.L.M., விசாரணை நடத்தி வழங்கப் போகும் தீர்ப்புகள் இந்திய நீதித்துறை வரலாற்றில் புதிய வெளிச்சம் தரட்டுமாக.

## மது, மாது, சூது இல்லாத கத்தார் கால்பந்து திருவிழா!

கத்தாரில் ஃபிஃபா உலகக் கோப்பை விளையாட்டு அரங்கங்களில் விதிக்கப்பட்ட மது தடை, மேற்கத்திய ஊடகங்களுக்கு கடுங்கோபத்தை த

வரவழைத்திருந்தது. அனைவரும் அறிந்த விஷயம்.

கடந்த டிசம்பர் மாதம் போட்டி முடிவடைந்தபின் தத்தம் நாடுகளுக்குத் திரும்பிய ரசிகர்கள், உள்ளூர் ஊடகங்களுக்குத் தந்து கொண்டிருக்கும் நேர்காணல்கள், வெறுப்பை பரப்பிய ஊடகங்களின் முதுகெலும்பை முறித்துப் போட்டிருக்கின்றன.

"என் போன்ற இளம் பெண்களுக்கு கத்தார் ஓர் ஆபத்தான இடம் என எண்ணி மிகவும் பயந்திருந்தேன். மது இல்லாத காரணத்தால், எந்த ஓர் அசம்பாவிதமும் இன்றி, ஒவ்வொரு விளையாட்டு மைதானத்திலும் மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தேன்."

இங்கிலாந்து நாட்டிலிருந்து தன் தந்தையுடன் பயணித்து, விளையாட்டைக் கண்டுகளித்த 19 வயதான பெண் விசிறி எல்லீ மொலோஸன், Reutersக்கு அளித்த நேர்காணலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்புக்காக என் தந்தை என்னுடன் பயணித்திருக்க வேண்டிய அவசியமே இல்லை எனுமளவிற்கு கத்தாரில் நான் கண்ணியமாக நடத்தப்பட்டேன்" என்றார்.

பொதுவாக இங்கிலாந்து நாட்டில் நடக்கும் கால்பந்தாட்டப் போட்டிகளில் பெண் ரசிகைகள் மீதான வன்முறையும், பாலியல் துன்புறுத்தல்களும் இருக்கும். ஆனால் கத்தாரில் அத்தகைய அசம்பாவிதங்கள் எதுவுமே இல்லை. இதற்கு முதன்மையான காரணம் மது தடை செய்யப்பட்டதுதான் எனக் கருதுகிறேன்" என்றும் கூறியுள்ளார்.

அதேபோல், அர்ஜென்டினாவிலிருந்து கத்தார் வந்த 21 வயதுப் பெண் ரசிகையான ஏரியானா கோல்டு, ஊடகங்களுக்கு இவ்வாறு நேர்காணல் அளித்துள்ளார்:

"கத்தார் நாடு பெண்களுக்கு இவ்வளவு பாதுகாப்பானது என்பதைக் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. என் நாட்டில் கத்தார் பற்றி நான் கேள்விப் பட்டதற்கும், கத்தார் வந்த பின்னர் நேரில் நான் கண்டவற்றிற்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் கண்டேன். இங்கே நான் மிகவும் சுதந்திரமாக உணர்ந்தேன்."

இன்னொரு பெண் ரசிகையான எம்மா ஸ்மித், இங்கிலாந்தின் ஷெஃபீல்டு நகரத்திலிருந்து வந்து, நாடு திரும்பியுள்ளவர். இவர், "கத்தார் அரசு அரங்கங்களில் மதுவைத் தடை செய்திருப்பதால், யாருக்கும் எவ்விதக் குறையும் இருப்பதாக உணரவில்லை. நிஜத்தைச் சொல்வதானால், கத்தாரின் மது தடையால் நான் மிக அமைதியான, அழகான சூழலைக் கண்டேன்."

ஃபிஃபா உலகக் கோப்பை சரித்திரத்தில் இதுவரை இல்லாத - இந்த முதல் முறை மது தடையை நீக்க பல்வேறு

நாடுகளால் கத்தார் எதிர் கொண்ட அழுத்தங்கள், வார்த்தைகளால் சொல்லி மாளாது.

உண்மையான அழைப்புப் பணி என்பது சொல்லில் மட்டுமல்ல. செயலில் காண்பிப்பதே! என்ற இறைத்தூதரின் வாழ்வை அழுத்தமாக நிரூபித்திருக்கும் கத்தாருக்கு மீண்டும் ஒரு முறை வாழ்த்துக்கள்!

## சாதி, மதம் கடந்த மனிதநேயம் உள்ளவரை...

கிறிஸ்துமஸ் தினத்தன்று கால்களை இழந்த தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் தனது குடும்பத்திற்கு "கடவுளாக" இருக்கும் இஸ்லாமியப் பேராசிரியர் நலமாக இருக்க வேண்டுமென சக்கர நாற்காலியில் சபரிமலைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

தமிழகத்திலுள்ள திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையைச் சேர்ந்தவர் கண்ணன் (49) தொழில் நிமித்தமாக கேரள மாநிலம் மலப்புரத்தில் வசித்து வருகிறார். இவர் 2013இல் லாரியிலிருந்து மரக்கட்டைகளை இறக்கும்போது விபத்தில் சிக்கினார். இதில் இடது காலை அவர் இழந்தார். மனைவி மற்றும் நான்கு குழந்தைகளின் எதிர்காலம் கருதி எடவண்ண பாறைப் பகுதியில் லாட்டரி சீட்டு விற்கும் தொழிலில் ஈடுபட்டார் கண்ணன். அவரது நிலையைக் கேட்டறிந்த கேரள மாநிலம் கொண்டோட்டி அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் சமீரா, தேசிய சேவைத்திட்ட தன்னார்வலர்களுடன் சேர்ந்து உதவிக்கரம் நீட்டியுள்ளார். கண்ணனுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பில் வீடு கட்டிக் கொடுத்துள்ளார். ஆசிரியர் சமீரா தற்போது நீலாம்பூர் அரசுக் கல்லூரியில் பணியாற்றி வருகிறார்.

இஸ்லாமியரான சமீராவிற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவர் நலமாக வாழ வேண்டி சுமார் 300 கி.மீ. தூரம் சக்கர நாற்காலியில் சென்று சபரிமலை ஐயப்பன் கோவிலில் வழிபாடு நடத்தவுள்ளார் கண்ணன்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் "என்னுடைய வாழ்க்கையை மாற்றியவர் சமீரா ஆசிரியர்; எனக்கும் என் குடும்பத்துக்கும் அவர் கடவுள் போன்றவர். அவரின் நலனுக்காக நான், தடம்பரப்பா கிராமத்திலிருந்து சபரிமலைப் பயணத்தைத் தொடங்கினேன். இந்தப் பயணம் நான் மனதார ஐயப்பனை வேண்டிக் கொண்டால் அவருக்கு அருள் புரிவார் என்று நம்புகிறேன்" என்றார்.

சாதியாலும், மதத்தாலும் மக்களைப் பிரிக்க ஒரு கூட்டம் முயன்று கொண்டிருக்கும் தருணத்தில் சாதி கடந்து, மதம் கடந்து மனிதனை மனிதனாகப் பார்க்கும் மனித நேயர்கள் உள்ளவரை வகுப்புவாதிகளால்

கேரளத்தில் மட்டுமல்ல. தமிழகத்திலும் வேரூன்ற முடியாது என்பதற்கு மதம் கடந்த இந்த மனித நேய உதவியே சாட்சி.

## மருத்துவத்துறையில் ஒரு மகுடம்!

இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் எனும் பெருமைக்குரிய டாக்டர் மர்யம் அஃபீஃபா அன்சாரி ஹைதராபாத்தைச் சேர்ந்தவர்.

தெலுங்கானா மாநிலம் மாலேகான் அருகிலுள்ள கிராமத்தில் ஆரம்பப் பள்ளி முதல் பத்தாம் வகுப்பு வரை உர்து மீடியத்தில் பயின்ற மர்யம் பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண்களுடன் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். பின்னர் குடும்பம் ஹைதராபாத்திற்கு இடம் பெயர 2012இல் மேல்நிலைப் பள்ளி தேர்விலும் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றவருக்கு உஸ்மானியா மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது.

2017இல் ஐந்து பாடங்களில் தங்கப் பதக்கம் வென்று மருத்துவராகத் தேர்ச்சி பெற்றவருக்கு, உஸ்மானியா கல்லூரி நிர்வாகம் அறுவை சிகிச்சைப் பிரிவில் முதுகலை மருத்துவம் பயில இலவச அனுமதி வழங்கியது. பின்னர் இங்கிலாந்து ராயல் மருத்துவக் கல்லூரியில் ஓராண்டு டிப்ளமோ MRCS சிறப்புத் தகுதி பெற்ற மர்யம் அபீபா மீண்டும் 2020 நீட் நுழைவுத் தேர்வு மூலம் M.Ch. அட்மிஷன் கிடைத்து உஸ்மானியாவிலேயே சேர்ந்து பயின்று நாட்டின் முதல் முஸ்லிம் பெண் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணராகவும், மிக வயது குறைந்த முதல் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் எனும் சிறப்புக்கும் சொந்தக்காரராகியுள்ளார்.

அரபி ஆசிரியையான தனது தாயின் வழிகாட்டலில் மருத்துவப் படிப்புடன் அரபி காலிகிராஃபி ஓவியம் வரைதலிலும், இஸ்லாமியப் பாடங்கள் கற்பித்தலிலும் சிறந்து விளங்கும் டாக்டர் மர்யம் அபீபா தனது முயற்சிகளை My Success is A Gift from Allah and now A Responsibility என்று கூறுகிறார்.

## 16 இலட்சம் பேர் இந்திய குடியுரிமையை துறந்து வெளிநாடுகளில் குடியேற்றம்!

கடந்த 11 ஆண்டுகளில் மட்டும் 16 இலட்சம் பேர் இந்தியக் குடியுரிமையைத் துறந்து வெளிநாடுகளில் குடியேறியுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.முரளீதரன் மக்களவையில் கூறியது : நடப்பாண்டில் அக்டோபர் 31 வரையிலான

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக பரிபூரணமாக நிறைவு செய்யுங்கள்

# RAHMAAN
## TOURS & TRAVELS



RECOGNISED BY : GOVT OF INDIA - MINISTRY OF MINORITY AFFAIRS
KINGDOM OF SAUDI ARABIA - MINISTRY OF HAJJ

* HAJJ
* UMRAH
* ZIARAH

**PASSPORT & VISA** எடுத்து தரப்படும்

## RAHMAAN TOURS & TRAVELS

A. SALEEM **RAHMAAN BUILDERS**

45D, RAMASAMY PILLAI ST., MARUTHAMALAI MAIN ROAD,
VADAVALLI (P.o.), COIMBATORE - 641041.

**93632 20624, 99943 23977, 99767 78597**

---

இன்பமான இனிய இல்லறத்திற்கு

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு™

ஆண்களின் சக்திக்கு
மூலிகை மந்திரம்

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com

நிலவரப்படி 1,83,741 பேர் இந்தியக் குடியுரிமையைத் துறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2015-ல் 1,31,489 ஆகவும், 2017-ல் 1,33,049 ஆகவும், 2018-ல் 1,34,561 ஆகவும், 2019-ல் 1,44,017 ஆகவும் இருந்தன. கடந்த 2021ல் மட்டும் 1,63,370 பேர் இந்தியக் குடியுரிமையை விட்டு விலகியுள்ளனர்.

அதன் அடிப்படையில் கடந்த 2011-ம் ஆண்டிலிருந்து இது வரையில் மொத்தம் 16,21,561 பேர் இந்தியக் குடியுரிமையை விலக்கிக் கொண்டு வெளிநாடுகளில் குடியேறியுள்ளனர்.

வங்கதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தவிர்த்த இதர வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு 2015இல் 93 பேருக்கும், 2016-ல் 153 பேருக்கும், 2017-ல் 175 பேருக்கும், 2018-ல் 129 பேருக்கும், 2019-ல் 113 பேருக்கும், 2020-ல் 27 பேருக்கும், 2021-ல் 42 பேருக்கும், 2022-ல் 60 பேருக்கும் இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் விமானியாக சானியா மிர்சா தேர்வு!

இந்திய விமானப் படையின் முதல் பெண் விமானியாக உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த மாணவி தேர்வாகியுள்ளார். உத்தரபிரதேச மாநிலம் மிர்சாபூரைச் சேர்ந்த டி.வி.மெக்கானிக்கின் மகள் சானியா மிர்சா, இந்திய விமானப்படையில் போர் விமானியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் நாட்டின் முதல் முஸ்லிம் பெண் மற்றும் உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் போர் விமானியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதுகுறித்து சானியாவின் தந்தை ஷாஹித் அலீ கூறுகையில், "நாட்டின் முதல் போர் விமானியான அவ்னி சதுர்வேதியை, எனது மகள் சானியா மிர்சா தனது ரோல் மாடலாகக் கருதுகிறார். ஆரம்பத்திலிருந்தே அவரைப் போல் ஆக வேண்டும் என்று விரும்பினார். போர் விமானியாக தேர்வு செய்யப்பட்ட நாட்டின் இரண்டாவது பெண் சானியா மிர்சா என்பதில் பெருமிதம் கொள்கிறேன். எங்களது கிராமத்திலுள்ள பண்டிட் சிந்தாமணி துபே இன்டர் கல்லூரியில் ஆரம்பக் கல்வி முதல் 10ம் வகுப்பு வரை படித்தார்.

அதன் பிறகு குருநானக் பெண்கள் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தார். பின்னர் செஞ்சுரியன் டிஃபென்ஸ் அகாடமியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். தேசிய பாதுகாப்பு அகாடமி சார்பில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றார்.

# வாய் மணக்க
# தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

"எங்களது மகள் எங்களையும், ஒட்டுமொத்த கிராமத்தையும் பெருமைப்படுத்தியுள்ளார். முதல் போர் விமானி என்ற கனவை அவர் நிறைவேற்றியுள்ளார்" என்று பெருமையுடன் கூறினார்.

## கின்னஸ் சாதனை படைத்த லைபா பாஸித்!

உலகின் மிக இளம் வயதுப் பெண் புத்தக வெளியீட்டாளர் எனும் பிரிவில் கின்னஸ் சாதனையாளர் பட்டியலில் இடம் பிடித்துள்ளார் 11 வயதான லைபா பாஸித்.

கோழிக்கோடு நாதாபுரத்தைச் சேர்ந்த அப்துல் பாஸித் தஸ்னீம் தம்பதியரின் மகள் லைபா பாஸித் கத்தார் ஒலீவ் இன்டர்நேஷனல் ஸ்கூலில் ஆறாம் வகுப்பு படித்து வருகிறார்.

Order of The Galaxy எனும் தலைப்பில் கடந்தாண்டு லைபா பாஸித் வெளியிட்ட புத்தகம் அமேசானில் வெளியாகி உலகம் முழுவதும் இளம் வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து இதே தலைப்பில் அடுத்தடுத்து மூன்று தொகுதிகள் வெளியான இவரது புத்தகம் குறுகிய காலத்தில் அதிக பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்தது.

மிகக் குறைந்த வயதில் புத்தகம் எழுதி வெளியிட்டதோடு அதிகளவில் இளம் வாசகர்களை ஈர்த்தமைக்காக Guinness World Record புத்தகத்தில் இடம்பிடித்து சாதனை படைத்துள்ள லைபா பாஸித்துக்கு வாழ்த்துக்கள்...!

## சாதனை மாணவி ஃபாத்திமா அன்ஷி!

ஒன்றிய அரசின் சமூக நீதித் துறை ஆண்டுதோறும் டிசம்பர் 4ஆம் நாள் மாற்றுத் திறனாளிகள் தினத்தில் வழங்கும் சிறப்பு விருதின் இந்த ஆண்டுக்கான பட்டியலில் இடம் பிடித்துள்ளார் பன்முகத் திறமையாளரான ஃபாத்திமா அன்ஷி. டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடமிருந்து 18 வயதுக்குக் கீழுள்ள மாற்றுத் திறனாளி பிரிவிற்கான ஷ்ரேஷ்ட திவ்ய பாலிகா விருதை ஃபாத்திமா அன்ஷி பெற்றுள்ளார்.

மலப்புரம் மாவட்டம் பெருந்தல்மன்னா அருகிலுள்ள மேலாட்டூர் எனும் சிறிய கிராமத்தைச் சேர்ந்த அப்துல் பாரி – சல்மா தம்பதியின் ஒரே மகளான ஃபாத்திமா அன்ஷி பிறவியிலேயே நூறு விழுக்காடு பார்வைக் குறைபாடு உடையவர்.

சிறப்புக் குழந்தைகளுக்கான பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கும்போதே தங்கள் மகளிடம் இசை ஆர்வம் இருப்பதைக் கண்டுபிடித்து பெற்றோர்கள் ஊக்குவிக்க, தற்போது ஃபாத்திமா அன்ஷி மலபார் முஸ்லிம்களின் பிரபலமான கலை வடிவங்களில்

ஒன்றான மாப்பிள்ளை பாடல்களை மெட்டமைத்துப் பாடுவதில் புலமை பெற்று விளங்குகிறார். 2018ஆம் ஆண்டு கேரள அரசின் உஜ்வாலா பால்ய விருதைப் பெற்றுள்ள இவர் சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கான கலை இலக்கியப் போட்டிகளில் 2015 முதல் 2022 வரை தொடர்ந்து முதல் பரிசு பெற்று சாதனையும் படைத்துள்ளார்.

பத்து, பதினொன்றாம் வகுப்பு இறுதித் தேர்வுகளில் கல்வித்துறை சிறப்பு அனுமதி பெற்று கணினி உதவியுடன் தேர்வெழுதி அனைத்துப் பாடங்களிலும் ஏ+ மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற ஃபாத்திமா அன்ஷி இப்போது +2 படித்துக் கொண்டிருக்கின்றார்.

ஃபாத்திமா அன்ஷி மலையாளம், ஆங்கிலம், ஃபார்ஸி, உருது, சைனீஸ், மலாய், ஜெர்மன் உட்பட ஏழு மொழிகளில் புலமை பெற்று விளங்குகிறார்.

பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் The Project Vision எனும் கண்தான விழிப்புணர்வு அமைப்பின் கேரள மாநில நல்லெண்ணத் தூதராக ஃபாத்திமா செயல்பட்டு வருகிறார். சிவில் சர்வீஸ் தேர்வெழுதி அயல்நாட்டுத் தூதுவராகப் பணியில் சேர வேண்டும் என்பது ஃபாத்திமா அன்ஷியின் விருப்பம்.

## கல்வி உதவித்தொகை ரத்து முடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்!

1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகையை ரத்து செய்யும் முடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று மாநிலங்களவையில் இ.டி.முஹம்மது பஷீர் எம்.பி. வலியுறுத்தினார்.

கல்வி உரிமைச் சட்டம் 2009ன் படி நடுநிலைக் கல்வி வரை இலவச கட்டாயக் கல்வி வழங்கப்படுவதைச் சுட்டிக் காட்டி 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகையை ஒன்றிய அரசு அண்மையில் ரத்து செய்தது. இதற்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. ஏழை மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது ஒன்றிய அரசின் நடவடிக்கை என்று பல்வேறு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

### கே.நவாஸ்கனி எம்.பி.

இது தொடர்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் துணைத் தலைவரும், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ் கனி எம்.பி. ஏற்கனவே ஒன்றிய அமைச்சர் ஸ்மிருதி இராணிக்கு கடிதம்

எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் கடிதம் எழுதியுள்ளார்.

இந்நிலையில் இந்தப் பிரச்சனை குறித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய அமைப்புச் செயலாளரும், கேரள மாநிலம், பொன்னானி மக்களவை உறுப்பினருமான இ.டி.முஹம்மது பஷீர் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். அவரது உரை வருமாறு :

### அநீதி இழைக்கப்பட்டுள்ளது

மெட்ரிக் கல்விக்கு முந்தைய கல்வி உதவித் தொகையை நம்பி, படிப்பை மேற்கொண்டு வரும் பல இலட்சக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளதை ஒன்றிய அரசு மற்றும் இந்த அவையின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

### சமூக நீதி அமைச்சகம்

மெட்ரிக் கல்விக்கு முந்தைய கல்வி உதவித் தொகை திட்டம் தற்போது ரத்து செய்யப்பட்டுள் ளது. இதற்கான உரிய காரணம் எதனையும் ஒன்றிய அரசு தெரி விக்கவில்லை. இந்தக் கல்வி உதவித்தொகை திட்டம், சமூக நீதி அமைச்சகம் மற்றும் பழங் குடியினர் நலத்துறை அமைச்சகத் தால் நடத்தப்பட்டு வந்தது. இது இந்தக் கல்வி உதவித் தொகை திட்டம் எந்தளவிற்கு முக்கியத் துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

தங்களது கல்வியைத் தொடர இலட்சக்கணக்கான ஏழை மாணவர்கள் இந்தக் கல்வி உதவித் தொகையை நம்பியுள்ளனர். இந்த வகையில் ஒன்றிய அரசின் செயல்பாடு கொடூரமானது மட்டுமின்றி அதைவிட மேலானதாகும்.

### விண்ணப்பங்கள் வரவேற்பு

எல்லாம் நல்லபடி நடந்து கொண்டிருந்தது. கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பங் கள் வரவேற்கப்பட்டன. இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பட்டு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான உத்தரவு வெளி யிடப்படும் என மாணவர்கள் காத்திருந்தனர்.

துரதிருஷ்டவசமாக 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மெட்ரிக் கல்விக்கு முந்தைய உதவித் தொகையை ஒன்றிய அரசு ஒரு நாள் காலையில் திடீரென ரத்து செய்ய முடிவு செய்தது.

இந்த உதவித் தொகை பெறும் மாணவர்கள் அனை வரும் ஏழைக் குடும்பத்தைச்

சார்ந்தவர்கள். இந்த உதவித் தொகையை நம்பியே கல்வி பயின்று வருகின்றனர். இந்தக் கல்வி உதவித்தொகை மாணவர்களுக்கு ஊக்கமளித்து வந்தது. ஏழை மாணவர்களுக்கு இது நிவாரணம் மற்றும் நிம்மதி அளிப்பதாக அமைந்தது.

ஏழை மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்தக் கல்வி உதவித்தொகையை திரும்பப் பெறுவதால் ஒன்றிய அரசுக்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது? இதனால் ஏழை மாணவர்களுக்குத்தான் பாதிப்பு ஏற்படும். இந்தக் கல்வி உதவித் தொகை என்பது ஒரு மனிதாபிமான நடவடிக்கை.

கல்வி உதவித் தொகையை ரத்து செய்யும் நடவடிக்கையை ஒன்றிய அரசு தொடர வேண்டாம். இந்தக் கல்வி உதவித் தொகையை மீண்டும் வழங்க வேண்டும். மாணவர்களுக்கு நிலுவையிலுள்ள தொகைகளையும் வழங்க வேண்டும் என்பதை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மக்களவையில் இ.டி.முஹம்மது பஷீர் பேசினார்.

## சிறுபான்மையின ஆராய்ச்சி மாணவர்களின் மவ்லானா ஆசாத் தேசிய உதவித் தொகையையும் நிறுத்த ஒன்றிய அரசு முடிவு!

சிறுபான்மையின ஆராய்ச்சி மாணவர்களின் மவ்லானா ஆசாத் தேசியக் கல்வி உதவித் தொகையை நிறுத்துவதாக ஒன்றிய பாரதீய ஜனதா அறிவித்துள்ளது. இதற்கு கல்வியாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் உயர் கல்வி பயின்று வரும் சிறுபான்மையின மாணவர்களின் கல்வித் தகுதி அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த மவ்லானா ஆசாத் தேசியக் கல்வி உதவித் தொகையை ஒன்றிய அரசு இந்தக் கல்வியாண்டிலிருந்து கைவிடுவதாக அறிவித்திருக்கிறது. 2006ஆம் ஆண்டு அன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி - இடதுசாரிக் கூட்டணி அரசால் சிறுபான்மையினரின் கல்வி, பொருளாதார, வாழ்நிலை சம்பந்தமாக ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் ராஜேந்திர சச்சார்

---

## மூன்று துஆக்கள் சந்தேகமில்லாமல் அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்படும்!

1. அநீதி இழைக்கப்பட்டவனின் துஆ.
2. (நல்ல நோக்கத்தோடு) பிரயாணம் செய்பவரின் துஆ.
3. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காகச் செய்யும் துஆ.

(திர்மதி1905)

குழுவின் ஆலோசனைகளின் அடிப்படையில் பிரதம மந்திரி 15 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டு 2009ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை 1ஆம் வகுப்பிலிருந்து உயர் கல்வி வரை பல்வேறு மட்டங்களில் வழங்கப்படுவதற்கான நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு ஒன்றிய அரசால் நடத்தப்படுகிற உயர் கல்வியில் குறிப்பாக எம்.ஃபில்.பிஹெச்.டி. போன்ற பாடங்களில் சேர்வதற்கான தேர்வில் வெற்றி பெற்ற சிறுபான்மையின மாணவர்களுக்கு அவர்கள் கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்காக ஒன்றிய அரசால் மவ்லானா ஆசாத் தேசியக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு வழங்கப்பட்டு வருவதன் மூலம் இந்தியாவில் சராசரியாக ஆண்டிற்கு 2000க்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்கள் கல்வி பயில்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளில் ஒன்றிய பாரதீய ஜனதா அரசு இந்த எண்ணிக்கையை சிறுகச் சிறுகக் குறைத்து, 2022 - 23ஆம் ஆண்டு உதவித் தொகையை நிறுத்துவதாக நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறது.

கடந்த மாதம் தான் ஒன்றிய அரசு 1ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவர்களுக்கான ப்ரீ மெட்ரிக் உதவித் தொகையை நிறுத்தி அறிவித்தது. இப்போது ஆராய்ச்சி மாணவர்களுக்கான உதவித் தொகையையும் நிறுத்தியிருக்கிறது.

இது குறித்து ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சர் ஸ்மிருதி இராணி மக்களவையில் "சிறுபான்மையின ஆராய்ச்சி மாணவர்களுக்கான மவ்லானா ஆசாத் தேசிய உதவித் தொகையுடன் இது போன்ற வேறு கல்வி உதவித்தொகைகளும் உள்ளதால் இந்த உதவித் தொகையை 2022-23ஆம் ஆண்டிலிருந்து ரத்து செய்ய ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் 2014-15 மற்றும் 2021-22ஆம் ஆண்டுகளுக்கிடையில் 6,722 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகையாக ரூ. 73,885 கோடி வழங்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

# அல்லாஹ்வுக்காக ஓர் வேண்டுகோள்!

அல்லாஹ்வின் பேரருளால் புதுக்கோட்டை காமராஜபுரம் "**மஸ்ஜிதே முஹம்மது இப்ராஹீம்**" ஜும்ஆ பள்ளிவாசல் கட்டிட விரிவாக்க பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. தங்களின் நல்ல பணங்காசுகளும் அந்தக் கட்டிடத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் இந்த வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**வாருங்கள்! விரைந்து உங்களின் உதவிகளைத் தாருங்கள்.**

அல்லாஹ் தனது உயர்ந்த சொர்க்கத்தை உங்களுக்கு தருவதற்கு காத்திருக்கிறான்.

இப்படிக்கு : **நிர்வாகிகள், "மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்" ஜும்ஆ பள்ளிவாசல்,**
காமராஜபுரம் ஒன்பதாவது தெரு, புதுக்கோட்டை -622 001.

**வங்கி விபரம் :** **"JUMMA MAZJID KAMARAJAPURAM"**
Current Account No : **510101005523881**
**UNION BANK OF INDIA** IFSC Code : **UBIN0911241**
Micr Code: **622026008** Branch : **PUDUKKOTTAI.**

தலைவர் : ஹாஜி **அப்துல்லாஹ்** - 9715265709
செயலாளர் : ஹாஜி **ஏ.ஆர். முஹம்மது மீரா** - 9443346313
பொருளாளர் : ஜனாப் **பி.எஸ்.எம். முஹம்மது அப்துல்லாஹ்** - 9486265728

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

# N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

**திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.**

**214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.**
**செல் : 9944001362**

# இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த முடியாது

எவ்வளவு பெரும்பான்மை மற்றும் சக்தி இருந்தாலும் இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த முடியாது என்று மாநிலங்களவையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியப் பொருளாளர் பி.வி.அப்துல் வஹாப் பேசினார் :

"பொது சிவில் சட்டத்தை உருவாக்குவதற்காக பாரதீய ஜனதா உறுப்பினர் கிரோடிலால் மீனா மாநிலங்களவையில் ஒரு தனிநபர் மசோதாவைக் கொண்டு வந்தார். இதற்கு தி.மு.க., ம.தி.மு.க., காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ராஷ்ட்டிரிய ஜனதா தளம், சமாஜ்வாதி, இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்டு, தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டால் நாட்டின் சமூகக் கட்டமைப்பு, வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவை அழிந்துவிடும் என அக்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த மசோதா குறித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியப் பொருளாளரும், மாநிலங் களவை உறுப்பினருமான பி.வி.அப்துல் வஹாப் பேசியதாவது :

பொது சிவில் சட்டம் இந்த அவையில் இதற்கு முன்னர் பல முறை பட்டியலிடப்பட்டிருந்தது. மக்களை ஆத்திரமூட்டுவதற்காக பாரதீய ஜனதா கையாண்டு கொண்டிருக்கும் ஆயுதம்தான் பொது சிவில் சட்டம். இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த முடியாது. எவ்வளவு பெரும்பான்மை மற்றும் சக்தி இருந்தாலும் இந்தச் சட்டத்தை ஒருபோதும் கொண்டு வர முடியாது. இது ஒரு சாதாரண உரிமையியல் சட்டம் தான். குற்றவியல் சட்டம் அல்ல.

இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி மதிப்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக் கொள்கிறேன். சமுதாயத்தில் மற்றுமொரு சகிப்பின்மையை உருவாக்க வேண்டாம். ஆனால், குறைந்த அளவு உறுப்பினர்களைக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றியிருக்கிறீர்கள். இது இந்தியாவின் நலனுக்காக கொண்டுவரப்படவில்லை. இது நமது நாட்டுக்கு நல்லதும் அல்ல.

எனவே, இந்த மசோதாவை திரும்பப் பெறும்படி கேட்டுக் கொள்கிறேன்" இவ்வாறு பி.வி. அப்துல் வஹாப் எம்.பி. பேசினார்.

மேலும், இந்த மசோதாவுக்கு பல்வேறு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

**ம.தி.மு.க. எம்.பி. வைகோ**

ம.தி.மு.க. எம்.பி. வைகோ கூறுகையில் "ஆர்.எஸ்.எஸ்ஸின் சித்தாந்தங்களை ஒன்றன்பின் ஒன்றாக மத்திய பாரதீய ஜனதா அரசு அமல்படுத்துகிறது. ஏற்கனவே, கஷ்மீரை முடித்து விட்டனர். இப்போது பொது சிவில் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளனர். இது நாட்டின் பேரழிவுக்கு வழிவகுக்கும். சிறுபான்மையின மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவர்" என்றார்.

**திருச்சி சிவா**

தி.மு.க. மாநிலங்களைக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசுகையில், "மதச்சார்பின்மையும், கூட்டாட்சியும்தான் இந்த நாட்டின் அடிப்படை. இவை இப்போது ஆபத்தில் உள்ளது. இது ஒரு தனியார் மசோதாவாக இருந்தாலும், இந்த மசோதா இங்கே நிறைவேற்றப்பட்டால் நாளை ஏதாவது நடக்கலாம் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த நாட்டின் எதிர்காலம் அனைவரின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு இந்தியாவின் தனித்துவம் பேணப்பட வேண்டும். இந்த மசோதாவை அறிமுகப்படுத்த வேண்டாம்" என்றார்.

**திரிணாமுல் காங்கிரஸ்**

திரிணாமுல் காங்கிரஸின் ஜாவர் சிர்கார் பேசுகையில் "இந்தத் தனிநபர் மசோதா, அரசியல் சாசனத்துக்கும், நெறிமுறைகளுக்கும், மதச்சார்பின்மைக்கும் முற்றிலும் புறம்பானது. இதன் மூலம் ஆபத்தான விளையாட்டில் மத்திய அரசு ஈடுபடுகிறது" என்றார்.

**சமாஜ்வாதி கட்சி**

"இந்த மசோதா அரசியல் சாசனக் கோட்பாடுகளுக்கு எதிரானது" என்று சமாஜ்வாதியின் ராம் கோபால் வர்மா குற்றம் சாட்டினார்.

**தேசியவாத காங்கிரஸ்**

"வேற்றுமையில் ஒற்றுமை காண்பதில்தான் இந்திய ஜனநாயகத்தின் அழகும், தனித்துவமும் அடங்கியுள்ளன. அதைக் காப்பது மிக முக்கியமானது. பன்முகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும் இம்மசோதா திரும்பப் பெறப்பட வேண்டும்" எனறு தேசியவாத காங்கிரஸின் பௌசியா கான் குறிப்பிட்டார்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், "அவையில் ஒரு விவகாரத்தை எழுப்புவது உறுப்பினரின் சட்டப்பூர்வ உரிமை. அதன் மீது விவாதம் நடைபெற அனுமதிக்கப்பட வேண்டும். அறிமுக நிலையிலேயே மசோதாவை எதிர்ப்பது முறையற்றது" என்றார்.

தொகுப்பு : **பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

# சர்க்கரை நோயைத் தடுக்கும் அத்திப்பழம்!

**- அன்வர் ஜீ,** சேலம் – 5.

அனைவரும் விரும்பும் அத்திப்பழத்தில் ஏராளமான நன்மைகள் உள்ளன. வைட்டமின் - A, E சத்துக்கள் நிறைந்துள்ள அத்திப்பழத்தில் அதிகளவு நார்ச் சத்து நிறைந்துள்ளது. சர்க்கரை நோயைத் தடுக்கும் சக்தி அத்தி இலைகளுக்கு உண்டு. சர்க்கரை நோய் வராமல் தடுக்கும் அத்திப்பழத்தில் பொட்டாசியம், பாஸ்பரஸ், மினரல் மற்றும் இரும்புச் சத்துக்கள் உள்ளன.



அத்திப்பழத்தில் இரும்புச் சத்து, கால்சியம் மற்றும் பாஸ்பரஸ், தாது உப்புக்களும் நிறைந்துள்ளதால் எலும்பு வளர்ச்சிக்கும், பலத்திற்கும் உதவுகிறது. இளம் பெண்கள் முதற் கொண்டு மாதவிடாய் காலம் முடிவுறும் நிலையிலுள்ள பெண்கள் வரை தினம் அத்திப்பழத்தை இரவில் நீரில் ஊற வைத்து, காலையில் எழுந்தவுடன் அந்த நீரைக் குடித்து, பழத்தை மென்று சாப்பிட்டால் மாதவிடாய் சம்பந்தப்பட்ட கோளாறுகள் நீங்கும்.

கருத்தரிப்பதில் உண்டாகும் பிரச்சனைகள் அகலும். கர்ப்பக் காலத்தில் பல பெண்களுக்கு மலச்சிக்கல் ஏற்படும். அவர்கள் தினம் ஊற வைத்த அத்திப்பழம் சாப்பிடுவதால் மலச்சிக்கல் நீங்குவதுடன் உடலுக்கு வேண்டிய தாதுவையும் எளிதாகப் பெற முடியும். சரிவர பசி எடுக்காத குழந்தைகளுக்கு இதைக் கொடுத்தால் அவர்கள் பசியெடுத்து உண்பார்கள். சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

நாள்பட்ட இருமல் உள்ள குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை கொண்டது. உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த உதவுகிறது. அத்திப்பழம் இதய நோய்கள் வராமல் தடுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது.

# சொர்க்கத்தின் வாசல்கள் எட்டு! அவற்றை நீ தட்டு!!

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

பல சொர்க்கங்கள் இருப்பது போன்று அதற்குப் பல வாசல்களும் உண்டு என்பதைப் பின் வரும் திருகுர்ஆன் வசனங்கள் மொழிகின்றன.

“எவர்கள் தம் இறைவனுக்கு பயபக்தியுடன் நடந்து கொண்டார்களோ அவர்கள் கூட்டங் கூட்டமாக சொர்க்கத்தின்பால் கொண்டு வரப்படுவார்கள். அங்கு அவர்கள் வந்ததும், அதன் வாசல்கள் திறக்கப்படும். அதன் காவலர்கள் அவர்களை நோக்கி, ‘உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்; நீங்கள் மணம் பெற்றவர்கள்; எனவே, அதில் பிரவேசியுங்கள்; என்றென்றும் அதில் தங்கி விடுங்கள்’ [என்று அவர்களிடம் கூறப்படும்] அதற்கு [சொர்க்கவாசிகள்] ‘அல்ஹம்து லில்லாஹ்! அவன் தன் வாக்குறுதியை எங்களுக்கு உரிமையாக்கி வைத்தான்’ என்று கூறுவார்கள். எனவே, நன்மை செய்தோரின் கூலி [இவ்வாறு] நன்மையாகவே இருக்கிறது”

- அல்குர்ஆன் (39 : 73, 74)

மேற்கூறப்பட்ட இறை வசனத்தில் ‘சொர்க்கத்தின் வாசல்கள்’ என்று பன்மையான சொல் மொழியப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தெரிய வருவது யாதெனில், சொர்க்கத்திற்குப் பல வாசல்கள் உள்ளன என்று நிரூபணமாகிறது.

அவ்வாறெனில் சொர்க்கத்திற்கு எத்தனைவாசல்கள் உள்ளன? எனும் கேள்வி எழுகிறது. ஆம். உண்மைதான். சொர்க்கத்திற்கு எட்டுவிதமான பெயர்களில் எட்டுவிதமானவாசல்கள் உள்ளன.

அவற்றில் நான்கு விதமான வாசல்களின் பெயர்கள் பின்வரும் ஒரே நபிமொழியில் கூறப்படுகிறது.

“ஒருவர் இறைவழியில் ஒரு ஜோடிப் பொருட்களைச் செலவு செய்தால், அவர் சொர்க்கத்தின் வாசல்களிலிருந்து, ‘அல்லாஹ்வின் அடியாரே! இது [பெரும்] நன்மையாகும்! [இதன் வழியாகப் பிரவேசியுங்கள்] என்று அழைக்கப்படுவார். [தம் உலக வாழ்வின்போது]

தொழுகையாளிகளாய் இருந்தவர்கள் ① ‘**தொழுகையின் வாசல்**’ வழியாக அழைக்கப்படுவார்கள்.

அறப்போர் புரிந்தவர்கள் ② 'ஜிஹாத் வாசல்' வழியாக அழைக்கப்படுவார்கள்.

நோன்பாளிகளாய் இருந்தவர் கள் ③ 'ரய்யான் வாசல்' வழியாக அழைக்கப்படுவார்கள்.

தர்மம் செய்தவர்கள் ④ 'சதகா வாசல்' வழியாக அழைக்கப்படுவார்கள்''

என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.

அப்போது ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் 'இறைத்தூதர் அவர்களே! என் தாயும், தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! இந்த வாசல்கள் அனைத்திலிருந்தும் அழைக்கப்படும் ஒருவருக்கு எந்தத் துன்பமும் இல்லையே! எனவே, எவரேனும் அனைத்து வாசல்கள் வழியாகவும் அழைக்கப்படுவாரா?' என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் 'ஆம்! நீரும் அவர்களில் ஒருவராவீர் என்று நம்புகிறேன்!' என்றார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரி : 1897)

## 5. தந்தை வாசல்

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலுக்கு தந்தை வாசல் எனும் பெயருமுண்டு! உலகில் தந்தையை கண்ணியமாக நடத்தியவரும், தந்தைக்குப் பணிவிடை செய்தவரும், தந்தைக்குக் கட்டுப்பட்டு நடந்தவரும், தந்தையின் அன்பைப் பெற்றவரும் அந்த வாசல் வழியாகச் சொர்க்கத்தில் நுழைவார்.

"தந்தையானவர் சொர்க்கத்தின் வாசல்களில் மத்தியவாசல் ஆவார். எனவே (அவருக்குக் கொடுக்க வேண்டியதை கொடுக்காததினால்) அதைப் பாழாக்கு! அல்லது அவரின் உரிமையை நிலைநாட்டியதினால்) பாதுகாத்திடு!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள் (நூல் : இப்னுமாஜா)

'இறைவனின் திருப்தி தந்தையின் திருப்தியிலும், இறைவனின் அதிருப்தி தந்தையின் அதிருப்தியிலும் உள்ளது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ்பின் அம்ர் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ)

## 6. சொர்க்கத்தின் வலப் பக்க வாசல்

மறுமைநாளில் அல்லாஹ் மனிதர்களில் முந்தியவர்களையும், பிந்தியவர்களையும் ஒரே சமவெளியில் ஒன்று திரட்டுவான். எவரும் அவர்களை அழைத்தால் அதை அவர்களால் செவியேற்க முடியும். பார்ப்போரின் பார்வை அவர்களை ஊடுருவிச் செல்லும். சூரியன் அவர்களுக்கு அருகில் வரும். அப்போது, அவர்

களால் அதை தாங்கிக் கொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ இயலாத துன்பங் களும், துயரங்களும் வந்து சேரும். அப்போது சிலர் சிலரை நோக்கி 'நீங்கள் சிக்கிக் கொண்டிருக்கும் அவல நிலையைக் கவனிக்க வில்லையா? உங்களுக்கு எத்தகைய ஆபத்தான நிலை நேர்ந்துள்ளது என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? உங்களுக் காக உங்கள் இறைவனிடம் பரிந்து பேசுபவரைத் தேடிப் பார்க்க மாட்டீர்களா?' என்று கேட்பார்கள். அப்போது சிலர் வேறு சிலரிடம் ஆதம் (அலை) அவர்களிடம் செல்லுங்கள்; அவர் பரிந்து பேசுவார் என்பர். எனவே மக்கள் ஆதம் (அலை) அவர்களி டம் வருவார்கள். அவர் என்னால் முடியாது என்று கூறிவிடுவார்.. இவ்வாறே ஹள்ரத் நூஹ் (அலை), ஹள்ரத் இப்றாஹீம் (அலை), ஹள்ரத் மூஸா (அலை), ஹள்ரத் ஈஸா (அலை) ஆகி யோரிடம் வரிசையாக வந்து பரிந்துரை பேசும்படி கூறுவார்கள். மேற் கூறப்பட்ட நபிமார்கள் யாவரும் நாங்கள் பரிந்துரைக்குத் தகுதி யில்லை என்று தங்களின் வாழ் வில் நடந்த தவறை உணர்ந்து தவிர்த்து விடுவார்கள். நிறைவாக ஹள்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் வருவார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறுவார்கள் : 'நான் அர்ஷுக்குக் கீழே சென்று


# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாம் மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ்,** M.B.A.,M.Sc.,Ph.D.
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**

Tel : **+91-7373030-412, (414), (421)**

WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

ஸஜ்தாவில் விழுவேன். இறைவனைப் புகழ்வேன்.' 'முஹம்மதே! உங்களின் தலையை உயர்த்துங்கள்! கேளுங்கள்; அது உமக்குத் தரப்படும். பரிந்துரையுங்கள்; உமது பரிந்துரை ஏற்கப்படும்' என்று கூறப்படும். அப்போது நான் என் தலையை உயர்த்தி, 'இறைவா! என் சமுதாயம்! என் சமுதாயம்! என்பேன். அதற்கு 'முஹம்மதே சொர்க்க வாசல்களில் வலப்பக்க வாசல் வழியாக எந்தவிதக் கேள்வி கணக்கும் இல்லாமல் உங்கள் சமுதாயத்தார் சிலரை நுழையச் செய்யுங்கள்; அவர்கள் மற்ற வாசல்களிலும் மக்களுடன் இணைந்து, நுழைந்து கொள்ளலாம்' என்று கூறப்படும். முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணை! சொர்க்கவாசலின் இரு பக்கங்களுக்கிடையேயான தூரம் "மக்காவிற்கும், (பஹ்ரைனிலுள்ள) ஹஜ்ர் எனும் ஊருக்கும் அல்லது மக்காவிற்கும் (சிரியாவிலுள்ள) புஸ்ரா எனும் ஊருக்கும் இடையிலுள்ள தூரமாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (முஸ்லிம் 327)

## 7. ஹஜ்ஜின் வாசல்

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலுக்கு ஹஜ் வாசல் என்ற பெயரும் உண்டு.

ஹஜ் செய்த ஹாஜிகள் இந்த வாசல் வழியாக அழைக்கப்படுவார்கள்.

## 8. கோபத்தை அடக்கி, மக்களின் பிழைகளை மன்னிக்கும் பெயர் கொண்ட வாசல்

இந்த வாசல் வழியாக நுழையக்கூடியவர்கள் யார் எனில், கோபத்தை மென்று விழுங்கி, மக்களின் பிழைகளை மன்னிக்கும் மாந்தர்கள் ஆவர்.

மேற்கூறப்பட்ட எட்டுவிதமான வாசல்கள் சொர்க்கத்திற்கு உள்ளன. இது அல்லாத வேறு பெயர்களிலும் சொர்க்க வாசல்கள் அழைக்கப்படுவதுண்டு!

தவ்பா வாசல், திக்ரு வாசல், கல்வி வாசல் போன்ற பெயர்களிலும் சொர்க்கத்தின் வாசல்கள் அழைக்கப்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய அனைத்து வாசல்களின் வழியாகவும் ஒரு சிலர் அழைக்கப்படுவர். அவர்கள் எந்த வாசல் வழியாக நுழைய விரும்புகின்றார்களோ அந்த வாசல் வழியாக நுழைந்து கொள்வர்.

இப்படிப்பட்ட பாக்கியம் பெற்றவர்களில் முதன்மையானவர் மூத்த நபித் தோழர் : ஹள்ரத் அபூபக்ர் சித்தீக் (ரளி) அவர்கள் ஆவார்.

# இனவாதமும் இனமாச்சரியமும் இறைநெறியில் இல்லை

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

மனித இனத்தில் குழப்பத்தையும், கலகத்தையும், பிரிவினை - போட்டி பொறாமைகளையும் உருவாக்குவதில் ஷைத்தானுக்குப் பெரும் பங்கு இருக்கின்றது. தீய மனிதர்களின் உள்ளங்களில் அமர்ந்து கொண்டு, அவர்களது இரத்த நாளங்களில் ஓடி பாவ, வெறியுணர்வைத் தூண்டி, வழி கெடுத்து, துணிந்துத் தீமைகளைச் செய்ய - பாவங்களைப் பேசச் செய்யும் சாகசமும், வல்லமையும் சாத்தானுக்கு உண்டு. நல்ல நட்புணர்வுடன் இருந்து வரும் நண்பர்களுக்கிடையிலும் தவறான எண்ணம் - ஐயம் - பிரச்சனைகளை உண்டாக்கி விடுவான்.

எதிர்பாராதவண்ணம் இந்த "பனூ முஸ்தலிக்" போரில் முஸ்லிம்களைப் போல் நடமாடி நடித்துக் கொண்டிருந்த நய வஞ்சகர்களான (முனஃபிக்) பலர் பங்கேற்றிருந்தனர். அவர்களோ இறையச்ச உணர்வுடன் - இறை நெறிப் பற்றில் இப்படையெடுப்பில் கலந்து கொள்ள வரவில்லை. யுத்தம் நடக்கும் பூமியோ நல்ல வளமான பசுமையான பகுதி. வெற்றியோ எளிதில் கிட்டும். சிரமமும் குறைவு. நிறைந்த ஆதாயங்களாகப் போர்ச்செல்வம் கிடைக்கும் என்ற பேராசையில் வந்திருந்தனர். வஞ்சகர் தலைவன் உபையின் ஸலூலும் வந்திருந்தான்.

மதீனத்து முஸ்லிம்கள், மக்கத்து முஹாஜிர்களான முஸ்லிம்களை எப்போதும் மதித்து - மரியாதையுடன் நடந்து வந்தனர். "இவர்கள் வெளியூர்காரர்கள்" என்ற பாகுபாடு, வேறுபாடு துளியும் அவர்களது உள்ளத்தில் தோன்றியதில்லை. ஆனால், 'முனாஃபிக்'களான வஞ்சகர்கள் இவர்களை ஏராளமாகவே பேசி வந்தனர். ஏதோ வழிந்தோடி வந்த அகதிகளாகவே கருதினர். வஞ்சகர் தலைவனின் தலைமையில் அடிக்கடி கூடிப் பேசி தூண்டி விட்டுக் கொண்டிருப்பர். இது இவர்களின் அன்றாட வாடிக்கையாகும். தனக்குக் கிடைக்க வேண்டிய மதீனாவின் தலைமைத்துவத்தை மக்காவிலிருந்து வந்து சேர்ந்த இந்த முஹம்மது தட்டிப் பறித்துக் கொண்டார் என்றே அவர் தீர்மானித்தார்.

"பனூமுஸ்தலிக்" சண்டை அடங்கி அமைதியானது. வளமும் செழிப்பும் நிறைந்த இப்பகுதியில் சில நாட்கள் தங்கி இளைப்

பாறிச் செல்வோம் என முடிவு செய்யப்பட்டது. ஓரிரு நாட்கள் கழிந்திட்ட வேளை. நீர் அள்ளும் கிணற்றருகே "வாளி" சம்பந்த மாக மக்காவைச் சார்ந்தவருக்கும், மதீனாவைச் சார்ந்தவருக்கும் வாக்குவாதம் முற்றி கை கலக்கும் நிலைக்கு வந்துவிட்டது. இரு வருக்கும் ஆதரவாளர்கள் முன் வந்துவாட்களை உறையிலிருந்து கரங்களில் எடுத்து விட்டனர். வாக்குவாதம் தடித்தது. பெரும் விபரீதம் விளையும் நிலை ஏற் பட்டது. நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. இருசாராரும் உணர்ச்சி வசப்பட்டனர்.

நல்லவேளை இரு சாராரிலி ருந்த நன்கு பண்பட்டிருந்த தோழர்கள் விரைந்து வந்து சமா தானப்படுத்தி, "நாம் எத்தகு மார்க்க நெறியாளர்கள்" என்ப தைத் தெளிவாக உணர்த்தி, மூண்டு கொண்டிருந்த நெருப்பை அணைத்தனர். திடீரென உணர்ச்சிவசப்பட்டு இப்படி ஆகிவிட்டதை நினைத்து இரு சாராரும் பின்னர் வருந்தினர்.

உண்மைதான்... இது மனித இயல்புதான்! நன்கு பேசிக் கொண்டிருப்பர். நல்ல முறையில் அளவளாவிக் கொண்டிருப்பர். ஒரு சின்ன வார்த்தை - ஒரு சிறிய பிரச்சனை பெரும் வாக்குவாதமாக முற்றி, பெரும் பாதகத்தை ஏற் படுத்தி விடும். பல ஆண்டுகளின் நட்பு, துளி நேரத்தில் முறிந்து போய் தீராப் பகையாய் மாறி விடும். இருவருக்கிடையிலான வாக்குவாதம் - பிரச்சனையில் இரு வருக்குமான ஆதரவாளர்கள் சேரும்போது நிலைமை மோசமாகி விடுகிறது. பிரச்சனை பெரிதாகிப் போகிறது.

பொதுவாக சண்டை - வாக்கு வாதத்தைத் துவங்கிக் கொண்டி ருப்போருக்கு எப்போது அதிக வேகமும், வீரியமும் ஏற்படுகின்ற தென்றால், தத்தம் ஆதரவாளர் களைப் பார்க்கும்போது அவர்கள் தனக்குப் பக்க பலமாக வரும்போது தான், மூண்டு கொண்டிருக்கும் நெருப்பை விசிறி விடுவது போன் றது; எரிந்து கொண்டிருக்கும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போன்றது.

மனிதர்களிடம் சில பழக்கம் இருக்கிறது. தம் இனத்தவன் தப்பு செய்திருந்தாலும், குற்றம் இவன் மீதிருந்தாலும் சிறிதும் ஆராயா மல் உண்மை தெரியாமல் விரைந்து சென்று அவனோடு சேர்ந்து எதிர்த்தரப்பானைத் தாக்கத் தொடங்கி விடுகின்றனர்.

"இதுவும் ஒரு வகையில் இனப் பற்று தானே" என வாதிக்கலாம். உண்மையில் இதுவல்ல இனப் பற்று. இது தீமைக்குத் துணை போவது... அக்கிரமத்தை ஆதரிப் பது இதை இறைநெறியான இஸ் லாம் ஒருபோதும் ஆதரிக்கவில்லை. உதவுதல், துணைப் போதல் என்பதெல்லாம் நன்மைக்கும், உண்மைக்கும், இறையச்சமிக்க காரியங்களுக்கும் மட்டும் தான்! பாவத்திற்கும், பகைமைக்கும், அநீதிக்குமல்ல! இது இறைமறை

அல்குர்ஆனின் கட்டளை. தன்னவனைப் பாதுகாக்கலாம். தொடர்ந்து கடுமையாகத் தாக்கப்படும்போது தடுக்கலாம். எதிர்த்தரப்பான் எகிறிக் குதித்து எல்லைமீறினால் எதிர்த்துப் போராடலாம். இதுதான் எல்லை.

இனவாதம் - இனப்பற்று பற்றி அஷூஃபைலா (ரளி) எனும் தோழர் அண்ணல் நபிகளாரிடம் கேட்கிறார். "இறைத்தூதர் அவர்களே! ஒருவன் தன் சமூகத்து மக்களை நேசிப்பது இனவாதமாகுமா? அதற்கு அண்ணலார் "இல்லை" மாறாக தன் சமுதாயத்தார் பிறர் மீது அநியாயமாகக் கொடுமை செய்ய முற்படும்போது அவர்களுக்குத் துணை புரிவது தான் இனமாச்சரியமாகும்" என்றார்கள். "மிஷ்காத்" எனும் நபிமொழித் தொகுப்பு நூலில் இச்செய்தி இடம் பெற்றிருக்கின்றது.

எத்தகு அருமையான விளக்கத்தை அண்ணல் தந்திருக்கின்றார்கள். மீண்டும் ஒரு முறை படித்தால் இதன் அருமை புரியும். நம்மவரை நேசிக்கலாம். மதிக்கலாம். அன்பு காட்டலாம். துணை போகலாம். ஆனால், அவர்கள் நீதியின் அடிப்படையில் இருக்க வேண்டும். அநியாயமாகப் பிறர் மீது அக்கிரமமிழைக்க முற்பட்டால் அந்தப் பிறர் வேறுமதம் வேற்று இனத்தோராக இருந்தாலும் ஒருபோதும் நம்மவருக்கு உதவக்கூடாது. துணை போகக்கூடாது. அவ்வாறு துணை போவதே இனவாதம். இனமாச்சரியம்.

எல்லா மதம், இனத்திலும் நல்லோரும் இருக்கின்றனர். தீயோரும் இருக்கின்றனர். நன்மைக்கும் நல்லோருக்கும் துணை நிற்பதுதான் இறைநெறி. "தன் இனத்தான் என்ன செய்தாலும் அவற்றுக்குத் துணை போவேன்" என்பது நீதியின்பாற்பட்டதல்ல. நேர்மையும், மனசாட்சியுமல்ல. "எவன் அநீதியான விஷயத்தில் தன் சமுதாயத்தினருக்கு உதவி புரிகின்றானோ அவன், கிணற்றில் விழுந்து கொண்டிருக்கும் ஒட்டகத்தின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பவனைப் போன்றவனாவான். அந்த ஒட்டகத்துடன் சேர்ந்து அவனும் கிணற்றில் வீழ்வான்" என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

அக்கிரமக்காரனைத் தற்காப்பவரின் நிலையைத் தெளிவான உவமை நயத்துடன் உத்தமர் உரைத்து எச்சரித்திருக்கின்றார்கள். கிணற்றில் விழும் ஒட்டகம் நமக்குச் சொந்தமாயினும் வாலைப் பிடித்து இழுத்துத் தூக்க முயல்வது அறிவுடைமை அல்ல.

"இனமாச்சரியத்தின் பக்கம் அழைத்தவன் நம்மைச் சேர்ந்தவனல்லன். இனவாதத்தின் அடிப்படையில் போரிட்டவனும் நம்மைச் சேர்ந்தவன் அல்லன். இனமாச்சரியம் கொண்ட நிலையில் மரணமடைந்தவனும் நம்மைச் சேர்ந்தவன் அல்லன்" எனவும் அண்ணலார் முழங்கினார்கள்.

## நயவஞ்சகன் கக்கிய நச்சுத் துளிகள்

கிணற்றுப் பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்தபோதும் வஞ்சகர்களான (முனாஃபிக்) நடிப்புக்காரர்கள் அது அப்படியே அணைந்து அடங்கிப் போவதை விரும்பவில்லை. ஒற்றுமையுடன் இருந்து வரும் இவர்களுக்கிடையே சண்டை ஏற்படுத்திப் பிரித்திட ஏதேனும் வழி கிடைக்காதா? என்று ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கயவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பாகிப் போனது. துள்ளிக் குதித்து தங்களுக்கிடையே மகிழ்வை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

வஞ்சகர் தலைவன் உபையின் ஸலூல் ஒரு கூடாரத்தின் அடியில் கம்பீரமாக வீற்றிருந்தார். அவரைச் சுற்றிலும் அவரது வஞ்சகக் கூட்டத்தினர் சூழ்ந்திருந்தனர்.

எப்போதும் எங்கும் பந்தாவுடன் அமர்ந்து பழக்கப்பட்டுப் போனவர் கடுமையாகவே முகத்தை வைத்துக் கொண்டிருப்பார். அவரது பேச்சிலும், சிரிப்பிலும் விஷமத்தனங்கள் வெளிப்படும். பார்வையில் பாம்புகள் நெளிந்தோடும்; அந்த அளவுக்குப் பயங்கரமானவர். புகழ், பெருமையைப் பெரிதும் விரும்பும் அந்த அகந்தைக்காரப் பெரிய மனிதனைத் துதிபாடும் பரிவாரம் நடந்தவையனைத்தையும் ஒன்று விடாமல் உற்சாகமாகக் கூறினர். மக்காவாசியின் மீது தான் தவறு என்றும் கூறினர்.

வஞ்சகத் தலைவனின் நச்சு மூளை இயந்திரமாய்ச் சுழல ஆரம்பித்தது. மதீனத்து அன்ஸார்களில் பலரும் ஆங்காங்கு இருந்தனர். "என்ன கொழுப்பு இந்த மக்கத்து அகதிகளுக்கு? ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்தது போல் எங்கிருந்தோ வழிந்தோடி அகதிகளாக வந்து ஒண்டிக் கொண்டு இப்போது நம்மவரையே எதிர்க்கத் துணிந்து விட்டார்களோ? இவர்கள் இப்படியெல்லாம் நம்மை அதிகாரம் செய்து நமது சுய உரிமையைப் பறிப்பார்களென முன்பே நான் எச்சரித்தேன். அப்போது அது எவரது செவிகளிலும் எட்டவில்லை. அதுபற்றி இந்த ஏமாளிகளான "யத்ரிப்வாசிகள்" (மதீனா) துளியும் சிந்திக்கவில்லை.

இப்போதென்னவென்றால் நம்மீதே ஏறி சவாரி செய்யுமளவுக்கு வந்து விட்டார்கள். ஏன் வரமாட்டார்கள்? வழிந்தோடி வந்த அகதிகளையும், கஞ்சிக்கு வழியில்லாமல் வாழ வகையறியாமல் வந்து சேர்ந்த பஞ்சைப்பராரிகளையும் மதித்துச் சிறப்பித்து சம உரிமை தந்து நமக்கு நிகராக அமர்த்தும்போது இன்னும் இதற்கு மேலும் போவார்கள். யார் யாரை எங்கெங்கு வைக்க வேண்டுமோ அங்கங்கே வைத்தால் தான் அடக்கி வாசிப்பார்கள். இல்லையெனில் ஆர்ப்பரித்து அடக்கப் பார்ப்பார்கள்.


# பள்ளிவாசலுக்கு

# கார்பெட் அமைக்க வேண்டுமா?


## அழகிய, தரமான, உயர்ரக கார்பெட்டுகளுக்கு



CITY ADS, Chennai







## S.A. CARPETS: 98418 87634 / 98412 56039/ 95433 18471

**Dealers of Janimaz Carpets, Suppliers of Masjid Janimaz Carpets**

## All Kinds of Masjid Janimaz Carpets Available

**Manufactures & Suppliers of Handloom Woolen Carpets, Janamaz & We also Undertake Orders of any size.**

**Shop Address: Old No. 23/53/1, Triplicane High Road, Chennai-5 (Opposite Walajah Big Masjid), Inside Noori Paradise**

நமது ஊராம் 'யத்ரிப்' எத்தகு அருமையான நகரம்? எப்படி இருந்த ஊர். அமைதியும், சந்தோஷமும் தவழ்ந்த ஊர். வளமும், செல்வமும் பொங்கி வழிந்த ஊர்! எதையும் செய்யும் உரிமையையும், எப்படி வேண்டுமானாலும் வாழும் சுதந்திரத்தையும் தந்த ஊர். ஆனால், இந்த மக்கத்துக்காரர்கள் வந்ததிலிருந்து நாம் நினைத்ததைச் செய்ய முடிகின்றதா? விரும்பியதை உண்ண முடிகின்றதா? குடிக்க முடிகின்றதா? எதுவுமே முடிவதில்லை. வாழ்க்கையே சலிப்பாகிவிட்டது.

இது கூடும். இது கூடாது. இதைச் செய். அதைச் செய்யாதே. என்ன கட்டளை இது? நினைத்ததைச் செய்ய முடியாமல் வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? நமக்குள்ள சுதந்திரமெல்லாம் பறிபோனது. இவ்வளவையும் செய்துவிட்டு இப்போது எகிறிக் குதிக்கவும் வந்து விட்டார்கள். நம்மை ஏறி மேய்க்கவும் துணிந்து விட்டார்கள்; நன்றி கெட்டவர்கள்.

நமக்கிடையே பிளவு, பிரிவினை, காலங்காலமாய் நம்மோடு வாழ்ந்திருந்த யூத இனத்தாரோடு மோதல்... நமது நன்மையை நாடும் நட்புக் கோத்திரத்தாரான மக்கத்துக் குறைஷிகளுடன் போர்! தீராப் பகை... பக்கத்துக் குலத்தார் கோத்திரத்தாரோடு சண்டை.... இவையெல்லாம் நம்மவருக்குத் தேவைதானா? அனைவரோடும் அன்பு - நட்புடன் இருந்து வந்தோம் நாம். இன்று பகைவர்களாக ஆக்கப் பட்டு தனித்துவிடப்பட்டிருக்கின்றோம். நான் அரசனாக ஆக்கப்பட்டிருந்தால் இந்நிலை வந்திருக்குமா? நான் வரவிடுவேனா? ஆத்திர வெறியுடன் வஞ்சகர் தலைவன் உபை பேசிக் கொண்டிருந்தார்.

"உபையின் பேச்சு முழுவதும் உண்மைக்கு முரணாக இருந்தது. பேச்சுச் சாதூரியத்தில் வல்லவரான அவர் பேசவில்லை. விஷத்தையே கக்கியிருந்தார். அந்த விஷத்தில் ஆத்திரமும், வெறியும், அண்ணல் மீது பொறாமையும், வினயமும், கபடமும், பழிவாங்கும் வஞ்சமும் தெரிந்தன. பகுத்தறிவைப் பெற்ற மனிதன், அதைப் பயன்படுத்தி உண்மையை அறிய முயலாமல் நன்மையை அடைய நினையாமல் பகைமையை வளர்த்துப் பாவத்தைச் செய்வது எவ்வகையிலும் அறிவுடைமை அல்ல. அந்தப் பெரிய மனிதன் இதைத்தான் விதைத்துக் கொண்டிருந்தார். மறுபடியும் விஷம் தெளித்தார்.

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக**
**உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற**
**வழி செய்யுங்களேன்.**

"இதோ கேளுங்கள் தோழர்களே! நாம் மதீனாவிற்குச் சென்றதும் நமது முதல் வேலையே, அங்கிருந்து இந்த அகதிகளை முற்றிலுமாகத் துரத்தி அடியோடு விரட்டியடிப்பதுதான். இனியும் இவர்களை இங்கு விட்டு வைத்தால் நமக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையையும், உரிமையையும் இழக்க நேரிடும். உள்ளூர்க்காரர்களா? வெளியூர்க்காரர்களா? என்பதைப் பார்த்து விடுவோம். இதை ஒரு மனப் பிரச்சனையாக சவாலாக எடுத்துக் கொள்வேன். எம்மவரைக் காப்பதே என் கடன்" என வெறி கொண்டு கத்தினார்.

அழுக்காற்றில் அழுந்தி, பொறாமையில் புழுங்கி, ஆத்திரத்தில் அடித்து வந்த அந்தப் பெரிய மனிதனின் அகங்காரப் பேச்சுப் பற்றிய செய்தி அண்ணலின் செவிகளில் பட்டது. அண்ணல் பெரிதும் வருந்தினார்கள். உமர் (ரளி) போன்ற உணர்ச்சிமிகு தோழர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். "தூதரே! உத்தரவிடுங்கள். அந்த நயவஞ்சக நச்சுப் பாம்பைக் கொன்று விடுகின்றோம். நம்மைப் பிரித்துப் பிளவுபடுத்தத் துடிக்கும் அந்தத் துன்மார்க்கத் துஷ்டனை வெட்டிப் போட்டு விடுகிறோம். வள்ளலின் முன்னே வாட்கள் உருவப்பட்டன. அண்ணல் மட்டும் அமைதி காத்திருப்பார்களானால் அக்கணமே அவனது காரியம் முடிக்கப்பட்டிருக்கும். ஆனால், அண்ணலோ வேண்டாம் எனத் தடுத்து விட்டார்கள். பொறுத்திருங்கள் தோழர்களே! பொறுத்திருங்கள்" என்றார்கள்.

மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்த இறைநெறிக் கொள்கை வீரர்கள் ஒன்றும் வக்கற்றவர்களோ வகையற்றவர்களோ அல்லர். வீடு, சொத்து, வாகனம், வணிகம் - தொழில் எனப் பல்வகையிலும் வசதியுள்ளவர்களாக - செல்வமும் செல்வாக்குமிக்கவர்களாக - நம்பிக்கை நாணயம் மதிப்புடன் திகழ்ந்தவர்களாக அங்கிருந்தவர்கள் தான். இவர்களில் சிலர் வேண்டுமானால் ஏழ்மையிலும், வறுமையிலும் உழன்றவர்களாக இருந்திருக்கலாம். ஆனால், அவர்களில் பலர் எல்லா நிலைகளிலும் சிறந்து விளங்கியவர்கள். எவ்வகையிலும் மதீனத்து விவசாயிகளுக்குக் குறைந்தவர்களாக இருக்கவில்லை. திறன்மிக்க வணிகர்கள். (தொடரும்)

வாசக நேயர்களே!

உங்கள் குடும்ப நிகழ்ச்சிகளில் ஏற்படும் மகிழ்வினை குர்ஆனின் குரல் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள உங்கள் குடும்ப நிகழ்வுகளை விளம்பரமாக அனுப்பி வைத்து விட்டீர்களா?

# வரலாற்றில் ஓர் ஏடு

"பெரியவர்களுக்கு மரியாதை செய்யாதவரும், குழந்தைகளிடம் அன்பு காட்டாதவரும் நம்மைச் சார்ந்தவர்கள் அல்லர்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

தாயும், குழந்தைகளும் உலகின் அரிய செல்வங்கள். இவர்களைப் பற்றித்தான் உலகம் அதிகம் பேசிக் கொண்டிருக்கிறது. தாய் குழந்தைகள் மீது அளப்பரிய அன்புள்ளவள். பெண் குழந்தைகளைப் பேணி வளர்க்கிறோம். அழகிய ஆடைகளை அணிவித்து அழகு பார்க்கிறோம். நல்ல மாப்பிள்ளை தேடி நிக்காஹ் செய்கிறோம். அனுப்பி வைத்ததும் மனம், வீடு வெறுமை அடைகின்றன. பாசமிக்க தாய் எழுதிய கவிதை :

"மணம் முடித்து
மகளை அனுப்பினேன்
வாடியது அவள்
வளர்த்த பூச்செடி!
அவளை வளர்த்த
என் போல"

வரலாற்றில் ஒரு நாள் : -

இரண்டு பெண் குழந்தைகளைச் சுமந்து கொண்டு ஓர் ஏழைப் பெண் அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களிடம் வந்தாள். ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் மூன்று பேரீத்தம் பழங்களை அவளுக்குக் கொடுத்தார்கள். அக்குழந்தைகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு பேரீத்தம்பழம் கொடுத்தாள். தனக்குரியதை சாப்பிடுவதற்காக தன் வாயருகே அதைக் கொண்டு சென்றாள். அதையும் அவளின் இரு பெண் மக்களே உண்ணக் கேட்டனர். அவ்விருவருக்கும் தான் உண்ண நாடியிருந்த அந்தப் பேரீத்தம் பழத்தைப் பிளந்து கொடுத்தாள். ஆச்சரியத்தை ஏற்படுத்திய அந்தச் செயல்பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் சொன்னார்கள்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நிச்சயமாக, அல்லாஹ் அவளின் இந்தச் செயலுக்காக அவளுக்கு சொர்க்கத்தைக் கட்டாயமாக்கி விட்டான் அல்லது அவளை இதற்காக நரகத்திலிருந்து விடுதலை செய்து விட்டான்" என்று கூறினார்கள்.

ஆதாரம் : ரியாளுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் எண் 269, முஸ்லிம் 2630

தருபவர் : **ப.பீர் இலாஹி** B.Sc., உத்தமபாளையம்

# திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

1900-ல் வெளிவந்த நூல்களிடையே மலபார் நாயர், நம்பூதிரி, பிராமணர் பல ஆண்கள் ஒரு பெண்ணை வைத்துக் கொள்வது பற்றிய பிரச்சனை பேசப்பட்டிருக்கிறது. தற்பொழுது இது இல்லாமல் இருக்கலாம். ஆனால் திப்பு சுல்தானின் காலத்தில் இது இருந்ததால் தான் 1788-ல் அதற்கு எதிராக உத்தரவு பிறப்பித்தார். திப்பு, மலபார் கவர்னருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், மலபார் பெண்கள் மார்பகத்தை மறைக்கும் துணி கூடப் போடாமல் நடமாடுவதைக் காண்பது எனக்கு வேதனை தருகிறது. இது நமது பார்வையையும், பண்பாட்டையும் பாதிக்கிறது. இது நமது கலை உணர்வையும், அற உணர்வையும் கொச்சைப்படுத்துகிறது. இப்பெண்கள் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் சமூகக் கட்டுப்பாடு தான் காரணமா அல்லது வறுமை காரணமா? வறுமைதான் காரணமென்றால், அதைப் போக்க நாம் எவ்வகையில் உதவி செய்து அவர்களின் கௌரவமான வாழ்வுக்கு உதவ வேண்டும். சம்பிரதாயம், சமூகக் கட்டுப்பாடுகள் காரணமென்றால், பழங்குடித் தலைவர்களுடன் பேசி இந்த இழிநிலையைப் போக்க முயற்சி எடுக்க வேண்டும். அவர்களின் மத உணர்வுகளையும் புண்படுத்தாமல், நட்பு ரீதியாக அறிவுறுத்தவும், அவர்களின் பண்பாட்டுப் பின்னணியை அறிந்து நீங்கள் உங்கள் முயற்சியை மேற்கொள்ளவும் வேண்டும்.

இதுபோன்ற சம்பிரதாயத் தடைகள் ஆண்களுக்கும் உண்டா? இல்லையென்றால் பெண்களுக்கு மட்டுமான இந்த அநீதி, நீதிக்கு எதிரான ஒதுக்கல் கொடுமையே. இதற்கு வறுமை காரணமா? ஏதாவது அரசரின் தண்டனையா? இதில் எது காரணமான போதும் நமது அரசு தலையிட்டு அவர்களுக்குச் சரியான நீதி வழங்குவது அவசியம்.

வறுமை, அரசு காரணம் இல்லையென்றால் தொன்மையான பழக்கம் தான் காரணமென்றால், நமது தாய்மாரை அரை நிர்வாணமாக்கிய பழக்கவழக்

கத்தை இளைய தலைமுறை தொடர எப்படி அனுமதிக்கிறது? என்று திப்பு சுல்தான் கடிதம் எழுதினார். The Sword of Tippu Sulthan, Bhagwan S.Gidwani எழுதிய நூலின் முதற் பதிப்பு 1976, அலெய்டு இரண்டாம் பதிப்பு 1978 பக்கம் 226-ல் இந்த விவரம் காணப்படுகிறது இதனைத் தமிழில் டாக்டர் வெ.ஜீவானந்தம் 'திப்புவின் வாள்' என்று மொழிபெயர்த்துள்ளார். (பக்கம் 190, 191)

மலபாரில் பெண்கள் மார் பகங்களைத் திறந்த நிலையில் திரிந்ததை ஒழித்திடவும், அவர் கள் மானத்தை மறைத்திடவும் திப்பு சுல்தான் உத்தரவிட்டார். ஏற்கனவே அனாச்சாரங்களில் திளைத்திருந்த உயர் சாதி யினருக்கு இதுவும் விரோதமாக அமைந்தது. தங்களின் காமக் களியாட்டங்களுக்கு முடிவு கட்ட திப்பு உத்தரவிட்டதால் கோவில்களை இடித்தார் என்று அவரைத் தூற்றத் தொடங்கினார் கள். கேரளாவில், மலபாரில், திருவிதாங்கூரில் திப்பு சுல்தான் இந்து சமயத்தாருக்கு அளித்த நன்கொடைகளைப் பற்றிச் சொல்வதற்கு முன், சுருக்கமாக அவரது மலபார் தொடர்பு களைச் சொல்லி முடித்திடலாம்.

1788 மே 9 கள்ளிக் கோட்டையிலிருந்து புறப்பட்ட திப்பு பேப்பூர் (Baypore) ஆற்றின் தென்கரை வழியாகப் பயணம் செய்தார். மலபாரில் புதியதலைநகரத்திற்கு பாருக்கா பாத் அல்லது பாருக்கியா (Farokhabad or Farrookhia) என்று பெயரிட்டு அடிக்கல் நாட்டினார். அங்கு கோட்டை கட்டவும் உத்தரவிட்டார். தலை நகருக்கு அத்தனை சாலைகளும் வந்து சேரும் வகையில் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். மற்ற கோட்டைகளை விட இது சிறந்ததாக இருக்க வேண்டும் என்றும் எண்ணினார். கள்ளிக் கோட்டையிலிருந்து பலரைக் கொண்டு வந்து கொடியேற்ற வும் செய்தார். மூன்றாம் மைசூர் போரில் ஆங்கிலேயர் வென்ற தால் (1790 - 1792) தலைநகர் மெல்ல அழியத் துவங்கியது. அது தற்போது (Ferokh) பரோக் என்ற சிறு கிராமமாக உள்ளது. (Imperial Gazatter 1909, vol xii p.88)

1788 ஜூலையிலிருந்து நவம்பர் வரை திப்புவால் ஜாகி ராக நியமிக்கப்பட்ட ரவிவர்மா (Ravi Varma) தன்னை ஆட்சி யாளராக அறிவித்துக் கொண் டான். அதோடு கள்ளிக் கோட்டையையும் கைப்பற்றி னான். ஆத்திரமடைந்த திப்பு லாலி (Lally) மற்றும் கமருத்தீன் (Qamar Ud Din) தலைமையில் 6,000 மைசூர் படைகளுடன் 170 ஐரோப்பியப் படைகளையும் அனுப்பிவைத்தார். 1788 டிசம் பரில் ஒடுக்கப்பட்டது. எதிரிகளின்

எதிரிப் படைகள் ஓடி ஒளிந்தனர். பலர் சிறைபிடிக்கப்பட்டனர். பலர் காடுகளுக்குள் சென்றனர்.

1789 ஜனவரியில் திப்பு சுல்தான் மலபார் சென்றார். அந்த வேளையில 1789 ஏப்ரல் 22-ல் திப்புவின் அதிகாரி இர்வர்நாடு (Irvernad) எதிரிகளால் கொல்லப்பட்டார். இதுவே நாயர்களை ஒடுக்குவதில் திப்பு தோல்வியடையக் காரணமாக இருந்தது. மலபார் அமைந்திருந்த பகுதி பெருமளவு மலைகளாகவும், அடர் காடுகளாகவும் இருந்தது. திப்பு வரும்போது ஓடி ஒளிவதும், அவர் சென்றதும் எதிர்ப்பதும் என்று மலபார் காடுகள் வசதியாக இருந்தன. மூன்றாவது ஆங்கிலேய மைசூர் போர் முடிந்ததும், ஆங்கிலேயர்கள் வென்றதும் சிறு சிறு தலைவர்கள் தங்களது பகுதிகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

திருவிதாங்கூர் ராஜாவுடன் நடத்திய போரின்போது திப்பு சுல்தான் 1789-ல் பாலக்காட்டிற்கு அருகில் முகாம் அமைத்தார். அங்கு ராமவர்மாவிடம் பேச்சுக்கள் தொடர்ந்தன. ஆனால், திருப்தியாக அது இல்லை. திருவிதாங்கூர் மாநில எல்லையை ஒட்டிய பகுதிகளில், மலைகளில், காடுகளில் தஞ்சம் புகுந்துள்ள கலகக்காரர்களைப் பிடித்து வர திப்பு சுல்தான் தனது படையை அனுப்பி வைத்தார். 1789 டிசம்பர் 28 இரவு வரை போர் நீடித்தது. திருவிதாங்கூர் படை ஓட்டமெடுத்தது. மறுநாள் மைசூர் படை கணிசமான இடத்தைக் கைப்பற்றியிருந்தது. முதலில் நடந்த சிறு தாக்குதலிலேயே ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு ஓடிவிட்ட திருவிதாங்கூர் படை, படைக்கலக் கொட்டிகளையும், வீரர்கள் தங்கும் முகாமையும் மைசூர் படை தாண்டியதும், 800-க்கும் அதிகமான நாயர்கள் புதிய படையைச் சேர்த்துக் கொண்டு மைசூர் படையினர் முன்னேறிச் செல்வதைத் தடுத்தது. ராமவர்மாவின் படைகள் வலதும் இடதுமாக புற்றீசல் போல் வந்து குவிய மைசூர் படை சீர்குலைந்தது. பீதியில் பேரச்சத்தில் வெருண்டு ஓடியது. இதைச் சாதகமாக எடுத்துக் கொண்டு சில வரலாற்றறிஞர்கள் தங்கள் போக்கின்படி எழுதித் தள்ளியுள்ளனர். இந்தப் போரில் திப்பு அந்தப் படையை வழி நடத்தியதாகவும், ராமவர்மா ராஜாவின் காலாட்படை வீரன் சுட்டதாகவும், அதனால் திப்பு காயம் பட்டதாகவும், உயிர் தப்பி ஓடியதாகவும், திப்புவின் சிவிகை, முத்திரைகள், வாள், கைத்துப்பாக்கி, வைர மோதிரங்கள், நகைகள் அடங்கிய பெட்டி எதிராளிகளிடம் சிக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (வில்க்ஸ் மைசூர் சரித்திரம் பாகம் 2, பக்கம் 358)

உண்மையில் அந்தத் தாக்குதலின் போது திப்பு சுல்தான் அங்கு இருந்தார் என்பதற்கு எந்த ஆவணங்களும் இல்லை. திப்பு சுல்தானே அதனை மறுத்துள்ளார். போரைத் தனக்குத் தெரியாமலே நடத்தினார்கள் என்றும், தான் அதைக் கேள்விப் பட்டதும் உடனடியாகப் படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டதுடன் திருவிதாங்கூர் கைதிகள் ராஜாவிடம் அனுப்பப் பட்டனர் என்றும் தெரிவிக்கின்றார். (Tippu to Hollond, January 1,1790, Cons. No.9) இந்தப் போரின் போது பாவ்னியும் (Pawney), கமருத்தீனும் கொல்லப்பட்டார்கள். அவர்கள் மறைவிற்காக திப்பு சுல்தானின் முகாமில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது என்றும் சொன்னார்கள். ஆனால், அது வடிகட்டிய பொய். கமருத்தீன் நான்காம் ஆங்கில மைசூர்ப் போரில் (1799) கலந்து கொண்டார் என்பதற்கு தெளிவான சான்று உள்ளது.

திப்புவின் சிவிகையைக் கைப்பற்றினார்கள் என்கின்றார்கள். திப்பு சிவிகையைப் பயன்படுத்துவது இல்லை. திப்பு மிகப் பெரிய குதிரை வீரர்... பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகச் சொல்வதும் போகிற போக்கில் சொல்கிற கற்பனைகளே ஆகும், திருவிதாங்கூர் ராஜா சென்னையின் கவர்னருக்கும், கவர்னர் ஜெனரலாகயிருந்தவருக்கும் அனுப்பிய எந்தவொரு கடிதத்திலும் இது பற்றிய செய்திகள் இல்லை. நான்கு குதிரைகள் இரண்டு டிரம்ஸ்கள் மட்டுமே கைப்பற்றப்பட்ட தகவல் உண்டு. (He only mentioned that four horses, two stands of coloeus and two drums fell in to the hands of his troops (Raja to medous, May)) (1 பாகம் 1790 மெக்கன்சி நூல் பக்கம் 17) இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல அந்தப் போரின்போது அது விபத்து போல திப்பு சுல்தானின் உத்தரவு இல்லாமலே நடந்தது என்று சென்னை கவர்னர் கென்னவே (Kennaway)க்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(Political Proceeding National Archives of India April 2, 1790, consultations no. 1)

திப்பு சுல்தான் மீது இப்படியெல்லாம் அவதூறு பரப்பியவர்கள் அடுத்துச் சொல்வது அவர் கோயில்களை இடித்தார் என்று. உண்மை என்ன?

1789-ல் திருவாங்கூர் படையெடுப்பின்போது திருச்சூரில் டிசம்பர் 14 முதல் 29 ஆம் தேதி வரை திப்பு சுல்தான் தங்கியிருந்தார். அப்போது தனது படைகளுக்கு சமையல் பாத்திரங்களை வடக்கு நாதன் கோவிலிலிருந்து தான் பெற்றார்.

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

## குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com


# பைத்துல் முகத்தஸ் பற்றி அறிவித்தல்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்திலிருந்து திரும்பி வந்ததும், மக்காவில் காஃபிர்களிடம் தாம் "பைத்துல் முகத்தஸ்" சென்றதையும், அங்கிருந்து ஏழு வானங்களுக்குச் சென்று அங்கு சுற்றிப் பார்த்ததையும் கூறினார்கள். ஆனால், காஃபிர்கள் அதை நம்ப மறுத்ததுடன், "பைத்துல் முகத்தஸ்" பற்றி கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். அல்லாஹுதஆலா தனதுதூதருக்கு "பைத்துல் முகத்தஸ்" வரையுள்ள திரையை அகற்றினான். நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தவாறே பைத்துல் முகத்தஸைப் பார்த்துப் பார்த்து ஒவ்வொரு அடையாளங்களாகச் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரளி) அவர்கள்.

(நூல் : முஸ்லிம் : 428)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.செய்யது சுலைமான்,**

தென்காசி.

திருச்சூரில் இருந்து கிளம்பும் போது கோவிலுக்குரிய பாத்திரங் களைப் பத்திரமாக ஒப்படைத் ததுடன் மிகப் பெரிய வெங்கலக் குத்து விளக்கையும் பரிசாக அளித்தார்.

எரநாடு தாலுகாவின் செலம்பர அம்சத்திலுள்ள மன்னூர் கோவிலுக்கு 70.42 ஏக்கர் ஈர நிலமும், 3.29 ஏக்கர் தோட்ட நிலமும் திப்பு வழங்கி னார். பொன்னானி தாலுகாவின் வைலத்தூண் அம்சம் திரு வாஞ்சிக்கும், சிவா ஆலயத்திற் கும் 46.02 ஏக்கர் நிலமும், 3.29 ஏக்கர் தோட்ட நிலமும் திப்புவால் வழங்கப்பட்டன. பொன்னானி தாலுகாவில் குருவாயூர் அம்சம் குருவாயூர் கோவிலுக்கு 46.02 ஏக்கர் ஈர நிலமும், 458.32 ஏக்கர் தோட்ட நிலமும் திப்பு வால் அளிக்கப்பட்டன.

கள்ளிக்கோட்டை தாலுகா வின் கஸ்பா அம்சம் திருக்கண்டி யூர் வெட்டக் கோரும் மக்கள் காவு கோவிலுக்கு 122.70 ஏக்கர் ஈர நிலத்தையும், 73.36 ஏக்கர் தோட்ட நிலத்தையும் திப்பு சுல்தான் அளித்தார். பொன்னானி தாலுகாவில் கடிகாடு அம்சம் கப்டு மாடத் தில் ஸ்ரீ குமரன் (நம்பூதிரிபாட்) கோவிலுக்கு 27.97 ஏக்கர் நிலமும், 6.91 ஏக்கர் தோட்ட நிலமும் தந்தார் திப்பு. பொன்னானி தாலுகாவின் திருக்கண்டியூர் அம்சம் திருக் கண்டியூர் சமூகக் கோவிலுக்கு 20.63 ஏக்கர் ஈர நிலமும், 0.41 ஏக்கர் தோட்ட நிலமும் தந்தார். திருச்சூர் நடுவில்மாடம் திரு மும்முவுக்கு 40.26 ஏக்கர் ஈர நிலத்தையும், 22.13 ஏக்கர் தோட்ட நிலத்தையும், 4.17 ஏக்கர் மாரு வரி நிலத்தையும் திப்பு சுல்தான் தானமாக அளித்தார்.

சகல வழிகளிலும் இந்துக் களுக்கும், இந்துக் கோவில் களுக்கும், பிராமணர்களுக்கும் ஆதரவாகச் செயல்பட்டவர் திப்புசுல்தான் (மொஹிபுல் ஹசன், திப்பு சுல்தான் (தமிழில் அர்ஷியா, பொள்ளாச்சி 2014 பக்கம் 416) 1919இல் எழுதி 1921இல் J.R.ஹெண்டர்சன் வெளியிட்ட நூல் திப்பு சுல்தான் மற்றும் ஹைதர் அலீ நாணயங்கள் பற்றியது. எனது நண்பர் நல்ல தம்பி அதனை 1987இல் மறுபதிப்பு செய்தார். அந்த நூல் 123 பக்கங்களிலும் + 9 பக்கங்களில் 132 பக்கங்களில் வெளியானது. அதில் பக்கம் 4இல் ஹைதர் அலீ வெளியிட்ட முதல் பகோடா (PAGODA) நாணயம் சிவன் பார்வதி உருவம் தாங்கியது. ஆறாவது வெளி யிட்ட அரை பகோடா (HALF PAGODA) நாணயம் விஷ்ணு சங்கு சக்கரம் உருவம் தாங்கியது.

1. Siva seated with Parvathi on his left knee, in one of the

God's right hand a trisul and in one of the left a deer.

2. Vishnu seated on his right side a chakra discuss and on the left a sanku (J.R.Henderson, the coins of Haider Ali and Tippu Sulthan, Madras First Published 1921 reprint 1987, Page 4)

"மைசூர் புலி" எனப் புகழ் பெற்ற ஹைதர் அலீ சென்னையைத் தாக்கிய பின்பு தனது நாடு திரும்பிக் கொண்டிருந்தார். தஞ்சையில் சிறப்பாகத் தொழில் புரிந்து நாட்டில் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த சௌராஷ்டரரை கண்டார். இவர்களை மைசூர் பகுதியில் குடியேற்றித் தொழில்வளம் உண்டாக்கும் எண்ணத்துடன் 25 சௌராஷ்ட்ரக் குடும்பங்களை தம்முடன் அழைத்துச் சென்றார். ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் அருகில் இருக்கும் கஞ்சம் பகுதியில் சௌராஷ்ட்ரர் குடியேற்றப்பட்டனர். இவர்களுக்குப் பல உரிமைகள் விட்டுக் கொடுக்கப்பட்டன. வரி விலக்கு அளிக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் சௌராஷ்ட்ரர்கள் தங்கள் விருப்பப்படி தொழில் நடத்துவதில் கவனம் செல்லும்படி வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. (K.K. சேதுராமன் தமிழ்நாட்டில் சௌராஷ்ட்ரர் முழு வரலாறு, மதுரை 1977, பக்கம் 74)

திப்புசுல்தானின் மாளிகை தரியா தவுலத் ரங்கநாதர் ஆலயத்தை நோக்கியே இருந்தது. திப்புவின் கோட்டைக்குள் 102 கோவில்கள் இருந்தன. ஆண்டுதோறும் 156 கோவில்களுக்கு திப்புசுல்தான் மான்யம் வழங்கினார் என்று எனது தம்பி பன்னூலாசிரியர் N.K.ஜமால் முஹம்மது தனது தியாகச் சுடர் திப்புசுல்தான் நூலில் சென்னை 2006, பக்கம் 62இல் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீகந்தையா மைசூர் கெஜட்டின் ஆசிரியர் 156 கோவில்களையும் பட்டியலிட்டுள்ளார். (கோவில்கள், மசூதிகள் அழிப்பு உண்மையும் புரட்டும் வெ.பத்மநாபா அ.அன்வர் உசேன் 2015 சென்னை பக்கம் 59.)

குருவாயூர் கோவிலுக்கு திப்பு நிலங்களை தானமாக அளித்ததோடு திப்புவின் படையெடுப்பின் போது குருவாயூர் கோயில் புரோகிதர்களை மூலபீடத்திலிருந்த கிருஷ்ணரது (குருவாயூரப்பன்) சிலையை அப்புறப்படுத்தி மறைத்து வைத்திருந்ததை அறிந்து புரோகிதர்களை வரவழைத்து தம் முன்னிலையிலேயே குருவாயூர் சுவாமியை மீண்டும் பிரதிஷ்டை செய்யுமாறு பணித்தார். அத்தோடு கோவில்களை சுற்றியுள்ள பகுதிகளில் வரிவசூல் அனைத்தும் கோயிலுக்கே சேர வேண்டும்

என்றும் உத்தரவிட்டார். திப்பு சுல்தானின் காலம் வரை அந்த உத்தரவுப்படி அக்கோவிலுக்கு அந்தப் பகுதியின் வரிவசூல் வந்து சேர்ந்தது. (Mohamood of Bangalore) முஹ்மது பெங்களூரில் எழுதப்பட்ட உருது நூல் 1950இல் வெளிவந்தது குதாதாவார்கள் (Qudha Dhaath Sircar) திப்புவின் சர்க்கார் என்பது நூலின் பெயர் SULTHANATH-E-QUDHADHAATH இந்த நூலில் பக்கம் 27இல் இந்தத் தகவலைக் காணலாம்.

Mysore Gazatteer (Administration) மைசூர் கெஜட்டின் நான்காம் தொகுதி 1929இல் பக்கம் 38இல் உள்ள தகவல் திப்புசுல்தானின் நிர்வாகத்தைப் பற்றி திவான் பூர்ணய்யா என்னும் பிராமணர் தந்துள்ள தகவல்.

**திப்புசுல்தான் நன்கொடை அளித்த விபரம் (வராகன்களில்)**

தேவஸ்தானங்கள் அக்ரஹாரங்கள் 1,93,959, பிராமண மடங்கள் 20,000, இஸ்லாமிய ஸ்தாபனங்கள் 20,000, மொத்தம் 2,33,959...

திப்புவின் சமய ஒற்றுமைக்கு இவை சான்றுகள் அல்லவா!

*(தொடரும்)*

## ஆசிரியர்களிடமிருந்து கற்றவை!

ஹள்ரத் "கவுதுல் அஃலம்" முஹிய்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்கள் சொன்னார்கள் : "நான் என்னுடைய ஆசிரியர்களிடம் ஏழு விஷயங்களை கற்றுக் கொண்டேன்.

ஒன்று : யார் அதிகமாகப் பேசுகிறாரோ... அவரின் உள்ளம் விழித்திருக்காது!

இரண்டு: யார் அதிகமாகச் சாப்பிடுகிறாரோ.. அவருக்கு ஞானம் பிறக்காது!

மூன்று : யார் மக்களிடம் அதிகம் கலந்து உறவாடுவாரோ.. அவருக்கு இபாதத்தில் இன்பம் இருக்காது..!

நான்கு : யார் உலகத்தை பிரியப்படுகிறாரோ அவருக்கு இறுதி முடிவு நல்லதாக இருக்காது..!

ஐந்து : யார்கொஞ்சம்கூட மார்க்க அறிவு இல்லாத (ஜாஹிலாக) அறிவிலியாக இருக்கிறாரோ.. அவருடைய உள்ளம் இறந்து போய்விடும்..!

ஆறு : யார் அநியாயக்காரருடன் சேர்ந்து இருப்பாரோ அவர் தீனில் நிலைத்திருக்க முடியாது...!

ஏழு : யார் மக்களின் பிரியத்தைத் தேடுவாரோ... அவருக்கு அல்லாஹ்வின் பிரியம் கிடைக்காது..!

# இஸ்லாத்தில் வதந்திகளுக்கு இடம் கிடையாது!

**பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,**
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

ஆதாரமற்ற செய்திகளையும், வீண் பேச்சுக்களையும் கேட்க வேண்டாம் என்றும், கேட்டு அவற்றை நம்ப வேண்டாம் என்றும், கேட்டவற்றை அப்படியே மற்றவர்களிடம் கூறி மக்களின் மத்தியில் பரப்ப வேண்டாம் என்றும் இஸ்லாம் எடுத்துரைக்கிறது. கேள்விப் பட்ட விஷயங்கள் உண்மையானவையா என்று ஊர்ஜிதம் செய்த பின்னரே அவற்றை மற்றவர்களிடம் கூறவேண்டும்என்றும் இஸ்லாம் வலியுறுத்துகிறது.

பொய் புரட்டுகளைக் கூறி மக்களை வழி கெடுக்கும் வதந்தியாளர்களுக்கு இழிவு தரும் வேதனை நிச்சயமாக உண்டு என்று திருமறை எச்சரிக்கின்றது. ஆகவே இஸ்லாத்தில் வதந்திகளுக்கு இடம் கிடையாது.

வதந்தி என்ற வார்த்தை தமிழ் வார்த்தை கிடையாது. இது இலத்தீன் மொழி வார்த்தை. இரகசியமாகப் பேசுதல் என்பது இந்த வார்த்தையின் பொருளாகும். இந்த வார்த்தை தமிழில் எப்படி நுழைந்தது என்று தெரியவில்லை. புரளி என்பது தான் இதற்கு நிகரான தமிழ் வார்த்தையாகும்.

புரளி என்ற வார்த்தைக்கு புரட்டு, உண்மையைத் திரித்துப் பேசும் பேச்சு, மாறாட்டமாகப் பேசுதல், வம்புப்பேச்சு ஆகிய அர்த்தங்கள் தமிழ் அகராதியில் காணப்படுகின்றன.

புரளி அல்லது வதந்தி என்ற வார்த்தைக்கு ஆதாரமற்ற தகவல் (Baseless Information), தவறான தகவல் (Misinformation), பொய்யான தகவல் (False Information), போலியான செய்திகள் (Fake Information), அப்பட்டமான பொய் (Blatant Lie) ஆகிய விளக்கங்கள் தரப்படுகின்றன. இதை ஆங்கிலத்தில் கிசுகிசுத்தல் (Gossip) என்றும் சொல்லப்படுகிறது. தமிழ் அகராதியில் சொன்னது போல் புரளி என்பது உண்மையைத் திரித்துப் பேசும் பேச்சு என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

ஒருவர் கேள்விப்பட்டதை அடுத்தவருக்குச் சொல்ல, அவர் அதை இன்னொருவருக்குச்

சொல்ல அந்த வதந்தி காட்டுத் தீ போல் ஊர் முழுவதும் பரவி, பின் நாடு முழுவதும் பரவி, இறுதியில் உலகம் முழுவதும் பரவி விடுகிறது.

ஒருவர் ஒரு விஷயத்தைக் கேள்விபட்டதும் அது உண்மையானதா அல்லது பொய்யானதா என்று ஆராயாமல் அதை உடனே அடுத்தவர்களின் காதில் போட்டு விடுகிறார்.

முதல் நபர் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டதும் அதைத் தனக்கு ஏற்றவாறு சிறிது மாற்றி இரண்டாமவருக்குச் சொல்லிவிடுகிறார். இரண்டாமவர் அதைத் தனக்கு ஏற்றவாறு சிறிது மாற்றி மூன்றாம் நபருக்குச் சொல்லிவிடுகிறார். இப்படியாக அந்தச் செய்தி ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பயணம் செய்கின்ற போது அது முடிவில்லாமல் உருமாறிக் கொண்டே போகிறது.

இல்லாததை இருப்பதாகச் சொல்வதும், நடக்காதவற்றை நடந்ததாகச் சொல்வதும், பார்க்காதவற்றைப் பார்த்ததாகச் சொல்வதும், கேள்விப்பட்டதை இன்னும் ஜோடித்துச் சொல்வதும், சிறிய விஷயங்களை ஊதிப் பெரிதாக்குவதும், புரளியாளர்களின் கை வந்த கலையாகும்.

ஒருவரின் குடும்பத்தைப் பற்றி அவரின் தொழில், குணம், நடத்தை ஆகிய தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி அவ


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
மு.முஹம்மது இஸ்மாயீல்
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்



குர்ஆனின் குரல்
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
மதுரை-625020.

அலுவலக அலைபேசி எண் :
94420 56547
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com



ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ
தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

தூறாக மற்றவர்களிடம் கூறுகின்ற போது அது பல பேர் களின் மத்தியில் பரவி வதந்தி யாக உருவெடுக்கிறது. இதனால் அப்பாவியான ஒருவரின் நற் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டு அவரின் நல்ல குடும்பத்தின் மானமும் பறிபோய் விடுகிறது. இல்லாததையும், பொல்லாத தையும் இட்டுக்கட்டிச் சொன்னத னால் எத்தனையோ குடும்பங் கள் பிரிந்து போயிருக்கின்றன. நல்ல அன்பான நட்புகள் முறிந்து போயிருக்கின்றன. தாயாய் பிள்ளையாய் உறவாடிய அண்டை வீட்டார்களின் இடையே மனக் கசப்பு உருவாகி யிருக்கின்றது. நடக்கவேண்டிய பல திருமணங் கள் நின்று போயிருக்கின்றன.

இவ்விதம் மற்றவர்களைப் பற்றி குறை கூறித் திரியக் கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : [ஒரு முறை] அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்கள் [எங்களிடம்], "புறம் பேசுதல் என்றால் என்ன வென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்லாஹ்வும், அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்" என்று பதிலளித்தனர். அல்லாஹ் வின் தூதர் நபி [ஸல்] அவர்கள், "நீர் உம்முடைய சகோதரரைப் பற்றி அவர் விரும்பாத ஒன்றைக் கூறுவதாகும்" என்று பதிலளித்தார்கள்.

அப்போது, "நான் சொல்லும் குறை என் சகோதரரிடம் இருந் தாலுமா? [புறம் பேசுதலாக ஆகும்] கூறுங்கள்" என்று கேட்கப்பட்டது. அதற்கு அல்லாஹ்வின் தூதர் நபி [ஸல்] அவர்கள், "நீர் சொல்லும் குறை உம்முடைய சகோதரரிடம் இருந்தால்தான், நீர் அவரைப் பற்றிப் புறம் பேசினீர் என்றாகும். நீர் சொன்ன குறை அவரிடம் இல்லாவிட்டாலோ, நீர் அவரைப் பற்றி அவதூறு சொன்னவராவீர்" என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸ் மூன்று அறிவிப் பாளர் தொடர்களில் வந்துள்ளது.
(ஸஹீஹ் முஸ்லிம் 5048)

இதைப் போல் "அப்பாவிக ளான, இறை நம்பிக்கை கொண்ட, கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறுவது பேரழிவை ஏற்படுத் தும் ஏழு பெரும் பாவங்களில் ஒன்றாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(ஸஹீஹ் முஸ்லிம் 145)

ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் இன்னொரு மதத்தைச் சார்ந்த வர்களைப் பற்றி தவறான தகவல் களைப் பரப்புகின்ற போது அவை வதந்திகளாக மாறி நாட்டில் மத நல்லிணக்கத்தை (Religious Harmony) கெடுத்து விடுகிறது.

ஒரு சமூகத்தினர் இன்னொரு சமூகத்தினரைப் பற்றி தவறான தகவல்களைப் பரப்புகின்ற போது அவை வதந்திகளாக மாறி நாட்டில் சுமூகமான சமூக இணக்கத்தை (Social Harmony) பாதித்து விடுகிறது. இதனால் இனவெறி, மொழி வெறி, நிற வெறி, மத வெறி, ஜாதி வெறி ஆகிய தீய சக்திகள் தலை விரித்தாட ஆரம்பித்து விடுகின்றன. இதனால் நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் நிலை உருவாகின்றன.

நாட்டில் குழப்பங்களை விளைவிப்பதை இஸ்லாம் ஒரு போதும் ஒப்புக் கொள்வதில்லை. இதை அல்லாஹ் திருமறையில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றான்.

**“அல்லாஹ் அருளிய ஆகாரத்திலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள், பூமியில் குழப்பஞ் செய்து கொண்டு திரியாதீர்கள் [என நாம் கூறினோம்] என்பதையும் நினைவு கூறுங்கள்”.**

- அல்குர்ஆன் (2 : 60)

**“அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிக்க மாட்டான்”.**

- அல்குர்ஆன் (5 : 64)

**“மேலும், நீங்கள் பூமியில் குழப்பம் செய்பவர்களாக அலையாதீர்கள்”.** - அல்குர்ஆன் (26:183)

நாட்டில் குழப்பங்களை உருவாக்கும் எந்தச் செயல்பாடுகளுக்கும் இஸ்லாத்தில் அனுமதி கிடையாது.

இவ்வாறு குழப்பங்களை உருவாக்கும் வதந்திகளை சமூக அறிவியல் வல்லுநர்கள் மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

- **லெவெல்லிங்** (Levelling) என்ற வகையான வதந்தியில் புரளியாளர்கள் செய்தியில் இருக்கும் சில உண்மைகளை மறைத்து விட்டு ஒரு சில உண்மைகளை மட்டும் மக்களிடம் பரப்பி விடுகின்றனர். இவர்களுக்கோ அல்லது இவர்களைச் சேர்ந்த இனத்தாருக்கோ அல்லது இவர்களைச் சேர்ந்த கட்சியினருக்கோ பாதகமான உண்மைகளை மறைத்து விடுகின்றனர். இதனால் மக்களுக்கு முழுமையான உண்மைகள் போய்ச் சேருவதில்லை.

- **ஷார்ப்பனிங்** (Sharpening) என்ற வகையான வதந்தி யில் புரளியாளர்கள் செய்தியில் இருக்கும் உண்மைகளோடு பொய்களையும் கலந்து மக்களிடம் பரப்பி விடுகின்றனர். உண்மைகளை நம்பும் மக்கள் அத்துடன் கலந்திருக்கும் பொய்களையும் உண்மை என்று நம்புவதனால் பல குழப்பங்கள் உண்டாவதற்கு ஏதுவாகிறது.

- **அஸ்ஸிமிலேஷன்** (Assimilation) என்ற வகையான வதந்தியில் புரளியாளர்கள் இட்டுக் கட்டிய கட்டுக் கதைகளையும், வெறும் பொய் புரட்டுகளையும், ஆதாரமற்ற செய்திகளையும் மக்களிடம் பரப்பி விடுகின்றனர். இவை

யாவும் அப்பட்டமான பொய்களாகும். (Blatant Lies)

இன்னும் சில சமூக அறிவியல் வல்லுநர்கள், வதந்தியாளர்களின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வதந்திகளை மூன்று வகையாகப் பிரித்து கூறுகின்றனர்.

❖ **தவறான தகவல்கள்** (Mis-Information) தீங்கு விளைவிக்கும் நோக்கமின்றி பரப்பப்படும் தவறான தகவல்கள் (False Information shared with no Intention of causing harm)

❖ **தப்பான தகவல்கள்** (Dis-Information) தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் பரப்பப்படும் தப்பான தகவல்கள் (False Information shared Intentionally to cause harm)

❖ **திரித்துக் கூறப்படும் தகவல்கள்** (Mal-Information) தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் உண்மையான தகவல்களை வேண்டுமென்றே திரித்து அவற்றைப் பரப்புதல் (Distorted factual Information shared Intentionally to cause harm)

தவறான, தப்பான, திரிக்கப்பட்ட தகவல்கள் பரப்பப்படுவதால், உண்மைத் தகவல்கள் நசுக்கப்படுவது மட்டுமல்லாமல், போலிச் செய்திகள் மக்களிடையே எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. தவறான செய்திகள் பல கோணங்களில் பரவிய பின்னர் உண்மையான விஷயங்கள் வெளிவந்தாலும் ஏற்கனவே போலிச் செய்திகளால் மக்களிடையே ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளைச் சரி செய்வது எளிதான காரியம் இல்லை.

வார்த்தைகளுக்கு சிறகுகள் இல்லை. ஆனால் அவை ஆயிரம் மைல்களுக்குப் பறந்து செல்கின்றன (Words have no wings; but fly a thousand miles) என்ற ஆங்கிலப் பழமொழிப் படி ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குத் தகவல்கள் வேகமாகச் சிறகடித்துப் பறக்கின்றன. இன்டர்நெட், வாட்ஸ்ஆப் போன்ற மேம்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தகவல்கள் மின்னல் வேகத்தில் செல்கின்றன. வாட்ஸ் ஆப் மூலம் 2017-ஆம் ஆண்டில் ஒரு மணிக்கு ஏறத்தாழ மூன்று கோடி செய்திகள் அனுப்பப்பட்டன. ஆனால் இன்றோ ஒரு மணிக்கு 170 கோடி செய்திகள் அனுப்பப்படுகின்றன.

இந்தச் சமூகத்தில் உண்மைகள் பரவும் வேகத்தைக் காட்டிலும், ஒரு நல்ல பயனுள்ள தகவல் பரவும் வேகத்தைக் காட்டிலும், தவறான ஆனால், சுவை மிகுந்த வதந்திகள் மிக மிக வேகமாகப் பரவுகின்றன. அதனால் ஏற்படும் எதிர்மறைத் தாக்கங்கள் குறித்து எவரும் சிந்திப்பதில்லை.

மற்றவர்களை வழி கெடுக்கும் பொய்ச் செய்திகள் எப்போது ஆரம்பித்தன?

நமது ஆதி பிதா ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களையும், அன்னை ஹவ்வா (அலை) அவர்களையும் அல்லாஹ் படைத்து அவர்களைச் சுவர்க்கத்தில் இருக்க வைத்த போதே வழி கெடுக்கும் பொய்ச் செய்திகள் ஆரம்பித்து விட்டன.

வழி கெடுக்கும் பொய் செய்திகளை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தது யார்? முதன் முதலில் ஆரம்பித்தது அவன்தான் இப்லீஸ்!

ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களையும் அன்னை ஹவ்வா (அலை) அவர்களையும் அல்லாஹ் படைத்து அவர்களைச் சுவர்க்கத்தில் குடியிருக்க வைத்து அவர்களுக்கு ஒரு கட்டளையிட்டான்.

**"[பின்பு இறைவன் ஆதமை நோக்கி] ஆதமே! நீரும், உம் மனைவியும் சுவர்க்கத்தில் குடியிருந்து, நீங்கள் இருவரும் உங்கள் விருப்பப் பிரகாரம் புசி யுங்கள்; ஆனால் இந்த மரத்தை [மட்டும்] நெருங்காதீர்கள்; [அப்படிச் செய்தால்] நீங்கள் இருவரும் அநியாயம் செய்தவர்கள் ஆவீர்கள்" [என்று அல்லாஹ் கூறினான்].**

- அல்குர்ஆன் (7 : 19)

அவர்களின் விருப்பப் பிரகாரம் சுவர்க்கத்தில் புசிப்பதற்கு அவர்களுக்கு சுதந்திரத்தைத் கொடுத்த அல்லாஹ் ஒரு மரத்தின் கனியை மட்டும் புசிக்க வேண்டாம் என்று அவர்களுக்கு ஆணையிட்டான்.

ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களுடைய சந்ததியர்களின் வலப்பக்கத்திலும், அவர்களின் இடப்பக்கத்திலும் வந்து அவர்களை வழி கெடுத்துக் கொண்டிருப்பேன் என்று சூளுரைத்த இப்லீஸ், ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களையும், அன்னை ஹவ்வா (அலை) அவர்களையும் ஏமாற்றி அல்லாஹ்வின் ஆணைக்கு மாறு செய்ய வைக்க அவர்களிடம் ஒரு பொய்ச் செய்தியைச் சொன்னான். நீங்கள் அந்த மரத்தின் கனியைப் புசித்தால் நீங்கள் இருவரும் மலக்குகளாய் விடுவீர்கள். இல்லாவிட்டால் இந்தச் சுவர்க்கத்தில் என்றென்றும் தங்கி விடுவீர்கள். நான் உங்கள் இருவருக்கும் நல்ல உபதேசம் செய்பவனாக இருக்கிறேன் என்று இப்லீஸ் இருவருக்கும் சத்தியம் செய்து கூறினான்.

அவன் சொன்னது அப்பட்டமான பொய்ச் செய்தியாகும். அவன் சொன்னதை நம்பி இருவரும் அம்மரத்தின் கனியை புசித்ததும் அவர்களின் வெட்கத் தலங்கள் அவர்களுக்கு வெளியாயிற்று. அவர்கள் இருவரும் சுவர்க்கத்தின் இலைகளால்

"ஒரே ஒரு தேர்ச்சி பெற்ற மார்க்க அறிஞர் ஆயிரம் வணக்கசாலிகளைவிட ஷைத்தானுக்கு மிகக் கடினமானவர்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ)

# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை – 1.

✆ 04373-254354; 253339; 99444 54354

## நபிவழி நல்வழி!

"நபி (ஸல்) அவர்கள், தமது நண்பர்களில், யாராவது மூன்று நாட்கள் வரை சந்திக்க வராவிட்டால், அவரைப் பற்றி விசாரிப்பார்கள்.

அவர் பயணம் சென்றுள்ளதாக அறிந்தால், அவருக்காக துஆ செய்வார்கள்.

உள்ளூரிலேயே இருந்தால், அவரைத் தாமே சந்திக்கச் செல்வார்கள்.

ஒரு வேளை நோயுற்றிருந்தால், அவரை நலம் விசாரிக்கச் செல்வார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள்.

(நூல் : முஸ்னது - அபூயஃலா - 3335)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.சைய்யது சுலைமான்,**

தென்காசி.

தங்களை மூடிக் கொண்டனர். சினம் கொண்ட அல்லாஹ் அவர்கள் இருவரையும் சுவர்க்கத்திலிருந்து இறங்கச் செய்து பூமியில் வாழும் படி செய்துவிட்டான்.

"எனினும் அவ்விருவருக்கும் மறைந்திருந்த அவர்களுடைய (உடலை) மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தும் பொருட்டு ஷைத்தான் அவ்விருவரின் உள்ளங்களில் (தவறான எண்ணங்களை) ஊசலாடச் செய்தான்; (அவர்களை நோக்கி, அதன் கனியை நீங்கள் புசித்தால்) நீங்கள் இருவரும் மலக்குகளாகி விடுவீர்கள் அல்லது (இச்சுவனபதியில்) என்றென்றும் தங்கிவிடுவீர் கள் என்பதற்காகவேயன்றி (வேறெதற்கும்) இந்த மரத்தை விட்டும் உங்களை உங்கள் இறைவன் தடுக்கவில்லை" என்று கூறினான். "நிச்சயமாக நான் உங்களிருவருக்கும் நற்போதனை செய்பவனாக இருக்கிறேன்" என்று சத்தியம் செய்து கூறினான். இவ்வாறு, அவன் அவ்விருவரையும் ஏமாற்றி, அவர்கள் (தங்கள் நிலையிலிருந்து) கீழே இறங்கும்படிச் செய்தான். அவர்களிருவரும் அம்மரத்தினை (அம்மரத்தின் கனியை)ச் சுவைத்தபோது அவர்களுடைய வெட்கத்தலங்கள் அவர்களுக்கு வெளியாயிற்று; அவர்கள் சுவனபதியின் இலைகளால் தங்களை மூடிக் கொள்ள முயன்றனர்; (அப்போது) அவர்களை அவர்கள் இறைவன் கூப்பிட்டு; "உங்களிருவரையும் அம்மரத்தை விட்டும் நான் தடுக்கவில்லையா? நிச்சய மாக ஷைத்தான் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்" என்று கூறினார்கள். (அதற்கு இறைவன், "இதிலிருந்து) நீங்கள் இறங்குங்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பகைவராயி ருப்பீர்கள்; உங்களுக்கு பூமியில் தங்குமிடம் இருக்கிறது; அதில் ஒரு (குறிப்பிட்ட) காலம் வரை நீங் கள் சுகம் அனுபவித்தலும் உண்டு" என்று கூறினான். அங்கேயே நீங் கள் வாழ்ந்திருப்பீர்கள்; அங்கேயே நீங்கள் மரணமடைவீர்கள்; (இறுதியாக) நீங்கள் அங்கிருந்தே எழுப்பப் படுவீர்கள்" என்றும் கூறினான்.

- அல்குர்ஆன் (7 : 20 to 25)

அந்த மரத்தின் கனியைப் புசித்தால் நீங்கள் இருவரும் மலக்குகளாகி விடுவீர்கள் என்ற ஓர் அப்பட்டமான பொய் செய்தியை இப்லீஸ் கூறி ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களையும், அன்னை ஹவ்வா (அலை) அவர் களையும் ஏமாற்றி அவர்கள் இருவரையும் சுவர்க்கத்திலிருந்து பூமியில் இறங்கச் செய்து விட்டான்.


# மிஃராஜ்
## (விண்ணுலகப் பயணம்)

**நபி (ஸல்) அவர்களின் மிஃராஜ் பற்றிய அரிய நூல்**

ஆசிரியர்: சோதுகுடி **மு.முஹம்மது இஸ்மாயீல்,**
M.Com., M.Ed., M.Phil., C.S.,
இளையான்குடி.

**மேற்பார்வை செய்தவர்கள்:**

மவ்லவீ முனைவர் எஸ்.அப்துல் நாசர் ஜமாலி M.A., M.Phil., P.hd.,
மவ்லவீ அல்ஹாஜ் பி.ஏ.கே.அப்துர் ரஹீம் பாஜில் பாக்கவி
மவ்லவீ முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல் காஷிபி, பாஜிலே தேவ்பந்தீ
மவ்லவீ ஹாஃபிழ் சி.முஹம்மது ஷரீப் பைஜி
அப்ஸலுல் உலமா அ.உவைஸுல் கர்னீ M.A., M.Phil.,




மிஃராஜ் பற்றிய
ஆதாரப்பூர்வமான தெளிவான
விளக்கங்களுடன் கூடிய
அற்புத நூல்.

**விலை ரூ60/-**

**தொடர்புக்கு :**

செல் : 94866 71468
87547 75494
94430 05534

## ரஹீமா பப்ளிகேஷன்ஸ்
16/23-D, பேராசிரியர் காலனி, பாட்சா நகர்,
காந்திஜி ரோடு, புதூர், இளையான்குடி -630 709
சிவகங்கை மாவட்டம்.

ஹள்ரத் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட பின்னர் மனிதர்கள் இந்த பூமியில் பிறப்பதற்கு முன்பே பொய்ச் செய்தியைச் சொல்லி வழி கெடுத்தவன் இப்லீஸ். ஆகவே பொய்ச் செய்திகளைச் சொல்லி மற்றவர்களை வழி கெடுப்பவர்கள் இப்லீஸ் இனத்தின் வாரிசுகள் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை.

நபி ஹள்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இன்ஜீல் வேதத்திலும் (பைபிள்) வதந்தி எனும் பொய்யான தகவல்களைத் தருவது ஷைத்தானின் வேலையாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்ஜீல் வேதத்தின் மூல கிரந்தம் (Original Script) இப்போது இல்லை.

சாத்தான் ஒரு வதந்தி மற்றும் அவதூறு செய்பவன்என்று அறியப்படுகிறது (யோவான் 12 : 10)

பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு மனிதர்களால் பொய்ச் செய்தி கள் கூறப்பட்ட பல்வேறு சம்பவங்கள் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

ஏறத்தாழ 2066 ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள பொய்ப் பிரச்சாரங்களும் கருவிகளாக பயன்படுத்தபட்டிருக்கின்றன. இது மட்டும் அல்லாமல் ஒரு பொய்ச் செய்தியால் ஒரு படைத் தளபதியும், எகிப்து நாட்டின் பெண் பேரரசியும் மாண்டுவிட்ட சம்பவமும் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கிறது.

ஏறத்தாழ 2066 ஆண்டுகளுக்கு முன் ரோம் நாட்டின் பேரரசன் ஜூலியஸ் சீஸர் கொலை செய்யப்பட்டான். அவன் எழுதி வைத்த உயிலின்படி அவனுடைய சகோதரியின் மகனும், தத்துப் புத்திரனுமாகிய ஆக்டேவியன் (Octavian) என்று அழைக்கப்படும் சீஸர் அகஸ்டஸ் (Caesar Augustus) என்பவன் கையில் நாட்டின் ஆட்சியும், அதிகாரமும் சென்றது.

ஜூலியஸ் சீஸரின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமான தளபதி மார்க் ஆண்டனி என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மார்கஸ் அன்டோனியஸ் (Marcus Antonius) என்பவன் ஆக்டேவியன் கையிலிருந்து நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தான்.

அப்படியானால் தளபதி மார்க் ஆண்டனி ஆக்டேவியன் மீது படையெடுக்க வேண்டும். ரோம் நாட்டின் படை, பரிவாரங்கள் தளபதி மார்க் ஆண்டனி யின் கைவசம் இருந்தாலும் அவனிடம் அதற்கான பண பலமில்லை. ஆகவே அவன் எகிப்து நாட்டின் பேரரசி கிளியோபாட்ராவின் உதவியை நாடினான்.

ரோம் நாட்டின் படை, பரிவாரங்கள் மார்க் ஆண்டனி யின் கைவசம் இருப்பதால் அவன் இந்தப் போரில் வென்று விடுவான் என்று கிளியோபாட்ரா உறுதியாக நம்பினாள்.

அவ்விதம் மார்க் ஆண்டனி போரில் வென்றால் ரோம் நாட்டின் பேரரசியாகவும் முடி சூட்டிக் கொள்ளலாம் என்றும் அவள் திட்டம் தீட்டினாள். இருவர் இடையேயும் காதல் மலர்ந்தது. இப்படியே பத்தாண்டுகள் கழிந்தன. இருவரின் உறவினால் கிளியோபாட்ராவுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன.

ஆக்டேவியன் மீது போர்த் தொடுக்க மார்க் ஆண்டனி தீவிரமாகப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். மார்க் ஆண்டனியின் சதித் திட்டத்தை அறிந்த ஆக்டேவியன் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தான். ஏனென்றால் மார்க் ஆண்டனியின் மேல் ரோம் நாட்டு மக்களுக்கு அதிகப்படியான நம்பிக்கை இருந்தது. மேலும் நாட்டின் படை, பரிவாரங்கள் மார்க் ஆண்டனியின் கைவசம் இருந்தன.

அப்போது ஆக்டேவியனின் ஆலோசகர்கள் அவனுக்கு ஓர் உபாயத்தைச் சொன்னார்கள். அதாவது மார்க் ஆண்டனியைப் பற்றி நாட்டின் படை, பரிவாரங்களிடையேயும், நாட்டு மக்களிடையேயும் பொய்ப் பிரச்சாரம் செய்து அவனுடைய செல்வாக்கைத் தகர்த்துவிட வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

நாட்டின் படை பரிவாரங்களிடையேயும், நாட்டு மக்களிடையேயும் ஆக்டேவியன் தன்னுடைய பொய்ப் பிரச்சாரத்தை ஆரம்பித்தான்.

மார்க் ஆண்டனி மிகப் பெரும் குடிகாரன். அவன் நாட்டின் தளபதியாக இருக்கத் தகுதி அற்றவன். அவன் எகிப்து நாட்டின் பேரரசி கிளியோபாட்ராவின் மேல் மோகம் கொண்டு அவள் கால்களின் கீழ் நாய் போல் சுற்றி வருகிறான். அவளுடைய உதவியுடன் அவன் ரோம் நாட்டின் மீது போர் தொடுக்கப் போகிறான். மார்க் ஆண்டனி போரில் வெற்றி பெற்றால் கிளியோபாட்ரா ரோம் நாட்டின் பேரரசியாக முடி சூட்டிக் கொள்வாள். அவள் பேரரசியாக ஆனால் மார்க் ஆண்டனியையும் கொன்று விடுவாள். ரோம் நாட்டு மக்களை அடிமையாக நடத்துவாள். ரோம் நாட்டுப் பெண்கள் எகிப்து நாட்டு மக்களுக்கு அடிமையாகி விடுவார்கள்.

எகிப்து நாட்டு மக்கள் ரோம் நாட்டு மக்களின் சொத்துக்களையும், உடைமைகளையும் சூறையாடி விடுவார்கள். பிரமிடுகளைக் கட்டுவதற்கு கிளியோபாட்ரா ரோம் நாட்டின் மக்களை சங்கிலியால் கட்டி இழுத்துச் செல்வாள் சவுக்கால் அடிப்பாள். ரோம் நாட்டு மக்களை மிதவைகளில் ஏற்றி நடுக் கடலில் விட்டு விடுவாள்.

இப்படியாகப் பலவிதமான ஆக்டேவியனின் பொய்ப் பிரச்சாரத்தின் காரணமாக படை வீரர்களில் பெரும்பாலோர் மார்க் ஆண்டனியின் மீது வைத்திருந்த

நம்பிக்கையை இழந்தார்கள். நாட்டு மக்களின் நம்பிக்கையும் தளர ஆரம்பித்தது.

இந்த இருவரிடையே பத்து ஆண்டுகளாக இருந்த பகை இறுதியில் கடல் போரில் முடிந்தது. கிரேக்க நாட்டிலுள்ள ஆக்டியம் (Actium) என்ற இடத்தின் அருகாமையிலுள்ள மத்திய தரைக் கடலின் (Mediterranean Sea) ஒரு பகுதியான அயோனியன் கடலில் (Ionian Sea) ஆக்டேவிய னின் கப்பல் படையும், மார்க் ஆண்டனியின் கப்பல் படையும் மோதின.

மார்க் ஆண்டனியை வெற்றி பெறச் செய்ய நூற்றுக் கணக்கான போர்க் கப்பல்களைத் தன்னுடன் கொண்டு வந்து கிளியோபாட்ராவும் போரை முன்னின்று நடத்தினாள். போர்க் கப்பல்களுக்குத் தலைமை தாங்கி கடல் போர் புரிவதில் கிளியோபாட்ரா மிகவும் கை தேர்ந்தவள் என்று சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

நடந்த கடும் போரினால் கிளியோபாட்ராவின் பெரும் போர்க் கப்பல்கள் தீக்கிரையாகி பெரும் சேதம் அடைந்தன. இதனால் எகிப்து நாட்டுப் போர் வீரர்களால் தொடர்ந்து போரிட முடியவில்லை. இனிமேல் வெற்றிக்கு வழியில்லை என்று உணர்ந்த கிளியோபாட்ரா போர்க் களத்தை விட்டு வெளியேறி தன்னுடைய நாடான எகிப்திற்குச் சென்று விடுகிறாள்.

அலெக்சாண்ட்ரியா (Alexandria) நகரத்தின் அருகே நடந்த இறுதிப் போரில் மார்க் ஆண்டனியுடன் இருந்த ரோம் நாட்டுப் போர் வீரர்களும் ஆக்டேவியன் பக்கம் வந்து விட்டதால் மார்க் ஆண்டனி போரில் முழுமையாகத் தோல்வியுற்றான். ஆக்டேவியன் எகிப்து நாட்டைக் கைப்பற்றி முன்னேறிச் செல்ல ஆரம்பித்தான். அப்போது மிகப் பெரும் பலசாலியான மார்க் ஆண்டனி தன்னுடன் வாள் யுத்தம் அல்லது மல்யுத்தம் புரிய ஆக்டேவியனை அழைத்தான். அதற்கு ஆக்டேவியன் ஒப்புக் கொள்ளவில்லை.

உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கிளியோபாட்ராவை தரச் சொல்கிறேன்; உன் பரம எதிரியான நானும்இறந்து விடத் தயாராக இருக்கிறேன். ஆனால் எகிப்து நாட்டைக் கைப் பற்ற வேண்டாம். அதை கிளியோபாட்ராவே ஆளட்டும் என்று மார்க் ஆண்டனி ஆக்டேவியனிடம் பேரம் பேசிப் பார்த்தான். ஆனால் அதற்கு ஆக்டேவியன் ஒப்புக் கொள்ளவில்லை. எகிப்து நாட்டைக் கைப்பற்றியே தீருவேன். கிளியோபாட்ராவை சிறை எடுப்பேன் என்று ஆக்டேவியன் மார் தட்டினான்.

(தொடரும்)

# துஆ மஜ்லிஸ்

## வாழ்க்கை சிறப்பாக அமைய

கடந்த நான்கு மாதங்களுக்கு முன் எனக்கு திருமணம் நடைபெற்றது. நான் திருமணம் செய்தவருக்கு ஆண்மையில்லை. ஆகையால் நான் ஜமாஅத் மூலம் அவரிடமிருந்து மணவிலக்கு பெற்றுக் கொள்ளவும். அதன் பின் மறுமணம் செய்து என் இல்லற வாழ்க்கை சிறப்பாக அமையவும் அனைவரையும் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**- குரல் வாசகி**, விருத்தாசலம்.

சதக்கத்துல்லாஹ், முஹம்மது அனஸ், குர்ஷித் பேகம் - மங்கலம்; அன்வர்ஜீ - சேலம்; முஹம்மது யூசுப் - மதுரை; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; நிஹால் - ஈரோடு; எஸ்.அன்சாரி - உடுமலை; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; ஷபீர் அஹமது - கோவை; ஜே.ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; ஹபீபுன்னிஸா - ஈரோடு; கம்பத்து அப்துல் பாரி - பள்ளபட்டி; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; முஜம்மில் - டெல்லி; ரிஸ்வானா - விழுப்புரம்; ஜே.தாஜுதீன் - விழுப்புரம்; சர்புதீன் - விழுப்புரம்; ருகையா - தஞ்சாவூர்; அ.ராபியத் பஸரியா - மூணார்; அப்துல் சலாம், அப்துல் முனாப், மஹமுதா பேகம் - கள்ளக்குறிச்சி; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; முஹம்மது சேட் கதீஜா அனஸ் அஹமது அனீஸ் பாத்திமா - சூலப்புரம்; உமர் - டெல்லி; தங்கமணி - ஈரோடு; காஜா மைதீன் - புதுஆயக்குடி; எம்.ஜரினா பேகம் - திருப்பூர்; பரீதா ஷானவாஸ் - கோவை; அ.பவ்ஜியா பேகம் - தாராபுரம்; அகாஜா மைதீன் - நெய்க்காரப்பட்டி; அ.ஜெய்புனிஷா - கருமண்டபம்; நாகூர் மீரான் - மானூர்; குரல் வாசகி - பெரியகுளம்; குரல் வாசகி - பெரிய கலையம்புத்தூர்; சந்தா எண் F 595 - திருச்சி; அப்துல் ரஜாக் - தாராபுரம்; முஹம்மது ஜாபர் சாதிக் - ஆத்தூர்; மும்தாஜ் பேகம் - ஆத்தூர்; சையத் எஸ்.சுல்தான் - திருச்சி; அ.சபரின் - கர்நாடகா; எம்.பயாஸுதீன் - சேலம்; பாரூக் அலீ - ஆத்தூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; எம்.ஷானவாஸ், ரேஷ்மா பேகம் - சவூதி; எஃப்.ஆயிஷா தஸ்லீமா - ஆத்தூர்; ஜவாஹிர் பேகம் - மதுரை; ஹசன் பானு - தஞ்சாவூர்; பி.தாகிரா - பழனி; கே.உமர் அப்துல்லாஹ் - பாளையக்காடு; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; பானு - மடத்துக்குளம்; சாந்து - உடுமலை; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; எஸ்.நூருன்னிஸா - தஞ்சாவூர்; சுஜாவுதீன் - கோவை; செல்லபா, எஸ்.கோரிமா, எஸ்.சிக்கந்தர் பாஷா - விராதனூர்;

முஹம்மது சிராஜ்தீன் - விழுப்புரம்; பரக்கத்துன்னிஸா - உக்கடம்; அ.சம்சாத் - பெங்களூரு; சந்தா எண் L 1262 - பெங்களூரு; அ.ஹாஜரா - பெங்களூரு; ஷபுல் இப்ராஹீம் - டெல்லி; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; மும்தாஜ் அம்மா - பாண்டிச்சேரி; சந்தா எண் L 105 - மணப்பாறை; ஏ.சீரீன் - கரூர்; சபினா ஆஸ்மி, முஹம்மது காமில் - இராமநாதபுரம்; பி.சுபைதா - சோழமா தேவி; அ.மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; ராகிமா - தாராபுரம்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலி, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; லைலா பேகம் - இராஜபாளையம்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; ஹாஜியா பாரூக் நிஸா - கரூர்; முஹம்மது மீரான், சாகுல் ஹமீது - ஈசநத்தம்; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது - சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; அஷ்ரஃப் நிஸா, அப்துல் காதர், அப்துல் பாஸித் - R.S.மங்கலம்; எம்.எஸ்.பாத்திமா நஸ்ருதீன் - ஈசநத்தம்; எம்.எஸ்.ஜரீனா பானு - ஈசநத்தம்; ஜமிலா பீவி - ஈசநத்தம்; எஸ்.ஜஸிமா ஷானுல்லாஹ் - திண்டுக்கல்;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹும் அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும் என் தம்பியின் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்! துஆவை கபூலாக்கிய இறைவனுக் கும், துஆ மஜ்லிஸ் குழுவினருக்கும், துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக் கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏ.ராபியத் பசரியா** - மூணார்.

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் நெய்க்காரப்பட்டி ஜனாப் அப்துல் மஜீத் அவர்களின் அன்பு மனைவி ஜனாபா ஆயிஷாம்மாள் அவர்கள் 29.11.22 அன்றும்,

கன்னியாகுமரி மாவட்டம் சூரங்குடி வட்டாரத்தின் "குர்ஆனின் குரல்" விற்பனைப் பிரதிநிதி ஜனாப் எஸ்.நாகூர் மீரான் பிள்ளை (T.N.S.T.C. Retd.) அவர்களின் நண்பர் ஜனாப் எம்.என்.கே.பஷீர் (Admn. & Personal Manager, T.N.S.T.C. - Retd.) அவர்கள் 04.12.22 அன்றும்,

ஈரோடு பழக்காரத் தெரு ரைஸ் மில் மர்ஹூம் வி.ஏ.யூசுப் சாஹிப் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும், மர்ஹூம் சையது முஹம்மது (ரஹ்) (கேரளா) அவர்களின் அன்பு மருமகனாரும், ஜனாப் எஸ்.அப்துல் ரஹ்மான் அவர்களின் அருமைத் தகப்பனாருமான ஜனாப் Y.ஷாஹுல் ஹமீது அவர்கள் 06.12.22 அன்றும்,

நெல்லை மேலப்பாளையம் ஹசன் தரகன் தெருவிலுள்ள சைய்யிது முஹம்மது சாஹிப் பள்ளிவாசலின் இமாம் மவ்லானா முஹம்மது இஸ்மாயீல் உஸ்மானி ஹள்ரத் அவர்கள் 28.12.22 அன்றும்

கடலூர் மாவட்டம் பண்ருட்டி பெரிய பள்ளிவாசலின் மேனாள் இமாம் மவ்லானா ஹாஃபிழ் அல்ஹாஜ் சி.பி.எம்.முஹம்மது ஹுசைன் பாஜில் பாகவி ஹள்ரத் (ரஹ்) அவர்களின் மூத்த மகனாரும், கண்ணியமிக்க ஆரணி பாவா (ரஹ்) அவர்களின் நீண்டகால முரீதுமான மவ்லானா அல்ஹாஜ் எம்.அப்துர் ரஹீம் ஹள்ரத் அவர்கள் 30.12.22 அன்றும்,

மதுரை கோரிப்பாளையம் மர்ஹூம் அல்ஹாஜ் ஜெய்னுல் ஆபிதீன் (ரஹ்) அவர்களின் அன்பு மகனார் ஜனாப் ஜே.கலீலுர் ரஹ்மான் அவர்கள் 04.01.23 அன்றும்,

கர்நாடகா மாநிலம் பெங்களூர் ஜனாப் முஹம்மது முஸ்தபா அவர்களின் உடன்பிறந்த சகோதரர் ஜனாப் முஹம்மது யாக்கூப் அவர்கள் தாராபுரத்தில் 05.01.23 அன்றும்,

பள்ளபட்டி அஸ்மியான் மர்ஹூம் அப்துல் ஹை இராவுத்தர் (ரஹ்) அவர்களின் இரண்டாவது மகனாரும், காரைக்கால் "ஆயிஷா பேக்ஸ் & ஷாப்பிங்" உரிமையாளர் ஜனாப் சேட் பாய் மற்றும்

சகோதர, சகோதரிகளின் அன்பு தந்தையுமான ஜனாப் அப்துல் கனி அவர்கள் 06.01.23 அன்றும்,

பள்ளபட்டி மர்ஹூம் தர்மபுரி முஹம்மது யூசுப் இராவுத்தர் (ரஹ்) அவர்களின் அன்பு மனைவியும், தம்மாணன் இராவுத்தர் அவர்களின் கடைசி மகளாரும், டாக்டர் அக்பர் அவர்களின் குப்பியும், டாக்டர் தமீம், பாப்புலர் அபு ஆகியோரின் காலாமாவுமான ஜனாபா ஆயிஷா பீவி என்ற ஐசாப்பா அவர்கள் 09.01.23 அன்றும்,

மதுரை மர்ஹூம் இக்பால் சேட் (ரஹ்) அவர்களின் அன்பு மனைவி ஜனாபா கமருன்னிஸா அவர்கள் இளையான்குடியில் 10.01.23 அன்றும்,

இலங்கை காத்தாங்குடி மதரஸா ஜாமிஅத்துல் ஃபலாஹ் அரபு கல்லூரியின் நிறுவனர் அல்லாமா மர்ஹூம் அப்துல்லாஹ் ஆலிம்சா (ரஹ்) அவர்களின் இளைய மகனாரும், அதிராம்பட்டினம் மவ்லானா மவ்லவீ அஹமது இப்ராஹீம் காஷிபி ஹள்ரத் அவர்களின் சகளையுமான மவ்லானா மவ்லவீ பரக்கதுல்லாஹ் ஃபலாஹி ஹள்ரத் அவர்கள் 15.01.23 அன்றும்,

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டவர்

**உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!**

## துஆ செய்ய வேண்டுகிறோம்

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும், திட்டச்சேரியிலும் பல ஆண்டுகள் இமாமாக பணி செய்து, அய்யம்பேட்டை மதீனா பள்ளிவாசலில் சில மாதங்களாக இமாமத் பணி செய்த மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் காரி **அப்துல் மாலிக்** தேவ்பந்தீ ஹள்ரத் அவர்கள் 21.01.2023 சனிக்கிழமை காலை 06.30 மணியளவில் இறையழைப்பை ஏற்றார்கள்.

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மிக மிக அமைதியான சாந்த குணம் கொண்டவர்கள். அன்னாரின் பிரிவு நம் சமுதாயத்திற்கு மிகப்பெரும் இழப்பாகும். எனவே, நாம் அன்னாரின் இழப்பைப் பொருந்திக் கொண்டு, அவர்களின் மறுமை வாழ்விற்காக அதிகமதிகம் துஆ செய்வோம். அல்லாஹ் அன்னாருக்கு ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவர்க்கத்தை நஸீபாக்கித் தந்தருள்வானாக! ஆமீன்.

# வாசகர் வட்டம்

66ஆம் ஆண்டு ஜனவரி மாத துவக்க இதழைப் பெற்றுக் கொண்டேன். அதன் தலையங்கத்தில் குர்ஆனின் குரல் தன் சொந்த இடத்தில் கால் பதிப்பதற்காக துஆ செய்யும்படி தாங்கள் கேட்டிருந்த வேண்டுகோளின் படி பல்லாயிரம் வாசகப் பெருமக்களோடு நானும் சேர்ந்து துஆ செய்கிறேன். அல்லாஹ் கபூலாக்குவானாக.


**அ.முஹம்மது நிஜாமுத்தீன்,**
**தாய்லாந்து.**

குர்ஆனின் குரல் 66வது ஆண்டு துவக்கத்தை முன்னிட்டு, அட்டைப்படத்தின் முகப்பு போட்டோ மிகவும் ஜோராக கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது.




மற்றும் "கண்ணியத்தின் அதிபதி அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்" என்று தலையங்கத்தில் வெளியான விஷயங்களில் 65 ஆண்டு காலங்களாக அது கடந்து வந்த பாதையை மிகவும் தெள்ளத் தெளிவாக, விரிவாக வந்துள்ள செய்திகளைப் பார்க்கும் போது மிகவும் பிரமிப்பாக உள்ளது.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் இன்னும் பல நூறாண்டுகள் சிறப்பாக வீறு நடை போட வேண்டும் என்று துஆ செய்கிறோம்.



"எங்கே நிம்மதி" என்ற தலைப்பில் ஹள்ரத் ஜம்பை ஜப்பார் எழுதியிருந்தவை அனைத்தும் அருமையான பொக்கிஷ வரிகளாகும். குறிப்பாக ஈமானுக்காக உயிர் துறந்த சம்பவம் அஹது அஹது என்று தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்த ஹள்ரத் பிலால் (ரளி) அவர்கள். அதனால் தானே தொழுகைக்கு அழைப்பு கொடுப்பவரை 'பிலால்' என்று இன்றும் போற்றி கூப்பிடப்படுகின்றது. இது நபி (ஸல்) அவர்கள் அன்று சமூக ஒற்றுமைக்காக கொடுத்த உயரிய இடம். இன்றும் போற்றப்படுகிறது.

மார்க்கச் சட்ட மேதை ஹள்ரத் உமர் ஃபாரூக் தாவூதி அவர்களின் இழப்பு உண்மை

யிலேயே பேரிழப்பு தான். அன்னார் வாழுங்காலங்களில் எத்திவைத்த கல்வியின் தாக்கத்தால் நூற்றுக்கணக்கான உலமா பெருமக்கள் உருவாகினர். தாவூதியின் 60-வது ஆண்டு விழாவிலும், அதற்கு முன்பும் அவர்களின் பயான் கேட்டு பயன் பெறும் வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ் போதுமானவன்; துஆச் செய்வோம். 'சொர்க்கம் உண்டா?' கட்டுரை பல குர்ஆன், ஹதீஸ் ஆயத்துகளைக் கொண்டதாக இருந்தது அருமை. இறுதியில் சொர்க்கம் உண்டு என்று நம்பி அதனை அடைய நல் அமல்கள் செய்வோம் என்பதே நமது குறிக்கோள் மற்றும் வாழ்வின் இலட்சியமாகும்.

பா.ஹாஜிமுஹம்மது.
சேந்தமங்கலம்.

கடைசிப்பக்கம் அடிக்கடி காணாமல் போய் விடுகிறது. ஏன்? அதனை முன்பு போல் மாதந்தவறாது வெளியிடச் செய்யுங்கள்.

**எஸ்.நெத்தெர்டு,**
**கேரளா.**

நம் இதழில் திரிபு வரலாறுகளை விளக்கி, உண்மைச் செய்திகளை மக்களுக்குத் தொடர்ந்து தந்து வருகிறார் வரலாற்று ஆய்வாளர் செ.திவான். அவரின் நூற்களை நாட்டுடைமை ஆக்கி அங்கீகாரம் செய்துள்ளது தமிழக அரசு. மனம் மகிழ்கிறது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சமுதாயத்தின் நன்றி!

(ப. பீர்முஹம்மது)
உத்தமபாளையம்

குர்ஆனின் குரலில் வரும் அனைத்து கட்டுரைகளும் மிகவும் அருமையாக இருக்கின்றன. காலத்திற்கேற்றவாறு கட்டுரைகளை தருகிறது குர்ஆனின் குரல்! மார்க்க விஷயங்களை பற்றி தெரியாத மக்களுக்கு மிக்க பயனுள்ளதாக இருக்கிறது. ஆசிரியர் அவர்களுக்கு பாராட்டுக்கள்!

**பி.ஜீனத் நிஷா,**
**கரூர்.**

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன் எழுதிய "இஸ்லாம் கூறும் கல்வி" கட்டுரை மிக அருமையாக இருந்தது. மிக்க பயனுள்ளதாகவும் இருந்தது. இதனை பின்பற்றி செயல்பட்டால் இம்மை, மறுமை வெற்றி நமக்கே! இக்கட்டுரை மூலம் கல்வி மிக அவசியம் என்பதை தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்தது.

**எம்.ஷஃபானா,**
**தஞ்சாவூர்.**

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

# வரலாறு தெரியாத சமுதாயத்தால் வரலாற்றைப் படைக்க முடியாது!

- சேயன் இப்ராஹீம்

இலட்சக்கணக்கான முஸ்லிம்கள், இந்திய சுதந்திரப் போராட்டங்களான ஒத்துழையாமை இயக்கம், கிலாபத் இயக்கம், தனி நபர் சட்ட மறுப்பு இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணிகள் புறக்கணிப்பு, வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில், இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற தியாகிகளின் பட்டியலை தமிழக அரசு மாவட்ட வாரியாகப் பல தொகுதிகளை வெளியிட்டுள்ளது. (இத்தொகுதிகள் அனைத்து அரசு நூலகங்களிலும் உள்ளன). இத்தொகுதிகளைப் படித்துப் பார்த்தால், ஏராளமான முஸ்லிம்கள் இந்த இயக்கங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதை அறிந்து கொள்ள முடியும். அகில இந்திய அளவிலும் இந்தப் பட்டியல் நீளமானதாகவே இருக்கின்றது. எனினும், இந்த வகுப்புவாத மற்றும் ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பை மறைத்துள்ளனர் அல்லது பெருமளவு குறைத்து மதிப்பிட்டுள்ளனர்.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகப் பாடப் புத்தகங்களிலும் இதே நிலைதான். இந்தப் பாடப் புத்தகங்களைப் படிக்கின்ற பிற சமய மாணவர்கள் மட்டுமல்ல. முஸ்லிம் மாணவர்கள் கூட சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்கள் பங்கெடுக்கவில்லையோ என்று சந்தேகம் கொள்கின்றனர்.

பாட நூற்களில், சர்தார் வல்லபாய் பட்டேலைப் பற்றி மிக விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. அவர் சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்த இரும்பு மனிதர் என்று புகழாரம் சூட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் அவரோடு இணைந்து போராடிய மவ்லானா அபுல்கலாம் ஆஸாத் குறித்து விரிவான குறிப்புகள் எதுவும் வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் இல்லை. இத்தனைக்கும் அவர் மூன்று முறை காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்தவர். பாகிஸ்தான் பிரிவினையைக் கடைசி வரை எதிர்த்தவர். இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராகப் பணியாற்றிக் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. திலகரைப் பற்றி, பண்டித மதன் மோகன்

மாளவியாவைப் பற்றி வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் லண்டனில் நடைபெற்ற முதலாம் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு, "இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குங்கள். சுதந்திரம் பெறாமல் அடிமை தேசமான இந்தியாவிற்குத் திரும்பமாட்டேன். ஒன்று சுதந்திரம் கொடுங்கள் அல்லது சுதந்திர பூமியான உங்களது நாட்டில் என்னை அடக்கம் செய்ய இடம் கொடுங்கள்" என்று முழக்கமிட்ட மவ்லானா முஹம்மது அலீ ஜவஹரின் தியாகம் பற்றிய செய்திகளை வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் தேடிப் பார்த்தாலும் கிடைக்காது. கடைசி வரை காங்கிரஸில் இருந்து, பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்த 'எல்லைகாந்தி' எனப் புகழப்பட்ட கான் அப்துல் கபார்கான் குறித்த செய்திகளும் வரலாற்றுப் பாட நூற்களில் விரிவாகக் குறிப்பிடவில்லை. மதுரை மாவட்டத்தில் குறிப்பாக மதுரை மாநகரில் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட வைத்தியநாத ஐயரைப் பற்றி பாடப் புத்தகங்களில் குறிப்புகள் காணப்படும். ஆனால், அதே நேரத்தில் அவரோடு இணைந்து சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு வெஞ்சிறை ஏகிய "தென்னகத்தின் ஆஸாத்" எனப் போற்றப்பட்ட மதுரை முஹம்மது மவ்லானா சாஹிபிற்கு வரலாற்றுப் பாட நூற்களில் இடம் இல்லை. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதிச் செயலாகும்.

இன்றைக்கு மத்திய அரசின் பொறுப்பில் இருக்கின்ற கட்சியைச் சார்ந்த மூத்த தலைவர்கள் யாரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்தது இல்லை. பாரதீய ஜனதா மற்றும் ஜனசங்கத்தின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து மகா சபை இயக்கத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொள்ளவில்லை.


தற்போது பதவியிலிருக்கும் மோடி அரசு, வரலாற்றுத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து அமைப்புகளையும் காவிமயமாக்கிக் கொண்டு வருகின்றது. இந்த அமைப்புகளின் தலைவர்களாக ஆர்.எஸ்.எஸ். சிந்தனை கொண்டவர்களையே நியமித்துள்ளது. இவர்கள் வரலாற்றைத் திருத்தி எழுதும் முயற்சிகளில் முழு வீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர். புராணங்களை, இதிகாசங்களை வரலாற்று நிகழ்வுகள், உண்மைகள் என்று சித்தரிக்கும் பணிகளை இவர்கள் ஏற்கனவே துவக்கிவிட்டனர். எனவே, சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பை மேலும் மறைக்கின்ற நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடப் போவது உறுதி.

இந்நிலையில், முஸ்லிம்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். வரலாறு தெரியாத சமுதாயத்தால் வரலாற்றைப் படைக்க முடியாது.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

# LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made in India